கல்கி



KALKI 7-4-1957

30 நயா
பைச


நான்கு மருந்துகள்
அடங்கிய 'அனஸின்' காட்டிலும்
வேறென்று இவ்வளவு விரைவில்
குணமளிப்பதில்லை
1. க்வினையின் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்
வலிகளுக்கு நிவாரணமளிப்பதில் புகழ் பெற்ற 'அனஸின்'
விஞ்ஞான முறையில் சேர்க்கப்பட்ட நான்கு மருந்து
களின் கலப்பாகும். இவைகள் நரம்புகளின் கேந்திர
ஸ்தானங்களில் கூட்டாக வேலை செய்து, தலைவலி,
ஜலதோஷம் ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலி
களுக்குத் துரிதமாயும் அபாயமின்றியும் நிச்சய
மாயும் நிவாரணம் அளிக்கிறது. வலிகளுக்குத்
துரிதநிவாரணமளிப்பதில் அனஸினுக்கு
இணையொன்றில்லை... அனஸினைப் போல்
தீங்கு விளைவிக்காத விலைவேறொன்றில்லை.
ஆகவே ஞாபகமிருக்கட்டும் 'அனஸின்'
ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும்.
அது இருதயத்திற்குத் தீங்கு விளைவிக்
கவோ அல்லது வயிற்றுக் கோளாறுகள்
உண்டு பண்ணவோ செய்யாது. 'அனஸின்'
லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம்
அளிக்கிறது. 'அனஸின்' விலை ஒவ்வொருவர்
சக்திக்கும் ஏற்றது. ஒரு பாக்கெட்டின்
விலை அணா 2 மட்டுமே
நான்கு
மருந்துகளின்
சேர்க்கையான
'அனஸின்'
வேண்டுமென்றே
கேளுங்கள்
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
NEW YORK, U.S.A.

கல்கி பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



வைடெக்ஸ்
நீண்ட
கூந்தலை
வளர்க்கிறது.
அடர்த்தியான கூந்தல் வளரும்.
வைடெக்ஸ (எண்ணெயுள்ளதும்-அல்லது
எண்ணெயற்றதும்)—எங்கும் கிடைக்கும்
PEARLINE-PARIS PRIVATE LTD.



மலர் 16
இதழ் 36

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

துன்முகி ௵
பங்குனி 25உ

காமன்வெல்த் தொடர்பு

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

சூயஸ் பிரச்னையின் பேரில் காமன்வெல்த் தொடர்பைக் கழற்றிவிடவேண்டும் என்று சொன்னேன். அந்தச் சமயம் என் யோசனையை ஏற்றுக் கொண்டிருந்தால் உலக சரித்திரமும் இஸ்லாமிய நாடுகளின் இந்தியத் தொடர்பும், காஷ்மீர் விவகாரமும் பாகிஸ்தான் அகம்பாவமும் எல்லாம் வேறுவிதமாக இருந்திருக்கும். அந்தச் சந்தர்ப்பம் தவறி விட்டது. அலை வந்தபோது குளிக்க வேண்டுமே தவிர, பிறகு வருந்துவதில் பயனில்லை.

காஷ்மீர் விவகாரத்தினால் உண்டான மனக் கசப்பின் காரணத்தை வைத்து காமன்வெல்த் தொடர்பை அறுத்து விடலாம் என்று சிலர் ஆத்திரமாகப் பேசி வந்தார்கள். இந்தப் பேச்சு என்னுடைய யோசனையோடு ஒத்திருப்பதாகத் தோன்றலாம். ஆனால் என்னுடைய யோசனைக்கும் இதற்கும் ரொம்ப வித்தியாசம். காஷ்மீர் விவகாரத்தின் காரணமாகக் காமன்வெல்த் தொடர்பு அறுப்பது பெருந் தவறாகும். விவகாரத்தில் நியாயக் குறைவு இருப்பதால் தொடர்பை நீக்கிக் கொண்டதாக ஏற்படும். தன்னலம் என்று ஊகிக்கக்கூடிய ஒரு பிரச்னையின்பேரில் ஒரு மகத்தான தொடர்பைத் திடீர் என்று விடலாகாது. இது ஆன்ம சக்தி வளர்க்கும் முறைகளில் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம்.

பிரிட்டன் மிக மூர்க்கத்தனமாக எகிப்து தேசத்தின் பேரில் படையெடுத்த போது, நாம் நம்முடைய ஆன்ம சக்தியை உபயோகித்திருக்க வேண்டும். அதற்குப் பதில் அமெரிக்க நாட்டின் செல்வாக்கின் பயனாக, அந்தப் படையெடுப்பு வாபஸ் பெறப்பட்டது. நழுவிப்போன இந்த நல்வாய்ப்பு மறுபடியும் எளிதில் வராது. தற்போது நாம் ஒருமுனையாக யோசனை செய்ய வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. ஜப்பான் இப்போது முறையிட்டுக் கொண்டிருக்கும் பிரச்னையைத் தீவிரமாகக் கவனிக்க வேண்டும். அணுகுண்டு சோதனைகளை நிறுத்துவதற்காக உலக சக்தியைத் திரட்ட வேண்டும். ஆங்கில மக்களில் நிபுணர்களும் யோக்கியர்களும், இந்தச் சோதனை வெடிகளை நிறுத்த வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். பிற்போக்குக் கட்சியைச் சேர்ந்த பிரிட்டிஷ் சர்க்கார் அதற்குச் சொல்லும் சமாதானம் ஒன்றே. "நாமும் அணுவெடி ஆராய்ச்சி செய்யாமற் போனால், நமக்கு உலக அரங்கில் செல்வாக்கு இருக்காது. ஆனபடியால் இந்த வெடிகளை வெடித்தே தீரவேண்டும். யாருக்கு எந்தத் தீமை உண்டாவதாக இருந்தாலும் விட்டுவிட முடியாது" என்று முரட்டுத்தனமாகச் சமாதானம் சொல்லுகிறார்கள்.

எவ்வளவு சொல்லியும் கேளாமல் பிடிவாதமாக உலகத்துக்குப் பெருந் தீங்கு செய்யும் ஓர் கூட்டத்தில் நாமும் அரசியல் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தத் தொடர்பு தீய தொடர்பாகும். எந்தக் காரியம் பிரிட்டன் செய்த போதிலும் 'அதில் நமக்குத் தொடர்பில்லை; பொறுப்பு இல்லை' என்று இலேசாகச் சொல்லி விடுவதாக இருந்தால் இந்தக் காமன்வெல்த் தொடர்பில் என்ன பொருள் மிஞ்சுகிறது? அர்த்தமற்ற வெறும் சொல்லேயன்றி, பொருள் கொண்ட தொடர்பு ஒன்றுமில்லை.

ஜப்பானியருடைய விவகாரம் அவர்களை மட்டிலும் பற்றியதல்ல. உலக மக்கள் அனைவருக்குமே அநீதி முறையில் தீங்கு உண்டாக்கும் காரியத்தை ஜப்பானியர் ஆட்சேபிக்கிறார்கள். அதற்கு நாம் தீவிர உணர்ச்சியுடன் நம்முடைய ஒத்துழைப்பைத்

தரவேண்டும். இது சுயநலப் பிரச்னையாகாது. உலக நன்மையைப் பற்றிய பிரச்னை. உலக மக்களின் பின் சந்ததியாரைப் பற்றிய பிரச்னை.

பெரியார் பெட்ராண்ட் ரஸ்ஸல், பிரிட்டனுடைய இந்தப் போக்கை மறுபடியும் வன்மையாகக் கண்டித்து எழுதி யிருக்கிறார். "இந்தப் பாப காரியத்தில் நான் கூட்டாளியாக இருக்க முடியாது" என்று எழுதியிருக்கிறார். அந்தத் தத்துவத்தை வைத்து இந்திய சர்க்கார் யோசனை செய்ய வேண்டும். அப்படி யோசனை செய்து தைரியமாக ஒரு முடிவுக்கு வந்தால் புகழ் ஓங்கும்.

ஐந்தாண்டுத் திட்டங்களும், பண உதவியும், மற்ற உதவியும் பெருஞ் சிக்கல்களை உண்டாக்கி யிருக்கின்றன. வலையிலிருந்து வெளியேறுவது எப்படி என்று நிதி மந்திரியும் மற்றவர்களும் திகைக்கலாம். திட்டங்கள் எல்லாம் நின்று போகுமே, தாமதிக்கப் படுமே என்றெல்லாம் ஆட்சேபணைகள் கிளம்பும்.

காமன்வெல்த் தொடர்பை விட்டு விட்டால், பிரிட்டனுக்கும் நமக்குமுள்ள மற்ற எல்லாத் தொடர்புகளையும் அறுத்துத் தள்ள வேண்டும் என்பதில்லை. அநீதியைக் கண்டு காமன்வெல்த் தொடர்பை வெட்டியதனால் நாம் பிரிட்டனுக்கு விரோதிகளாகி விட மாட்டோம். மற்றத் தொடர்புகளையும் நட்பையும் நீக்கிக் கொள்ளாமல், காப்பாற்றிக் கொண்டே நாம் பிரியலாம். ஓரளவு சங்கடங்கள் உண்டு என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். வெளிநாட்டு உதவி திட்டங்கள் எல்லாம் தர்ம சங்கடங்களையுண்டாக்கும் என்பதில் ஐயமில்லை—கொக்கி முட்புதரில் துணி சிக்கிய மாதிரி. கிழியாமல் அகற்றுவது கஷ்டம். அதற்காக என்ன செய்யலாம்?

இந்த அசாதாரணமான பெரிய காரியத்தை நாம் தைரியமாகச் செய்தால்தான் இந்தப் பெரிய முரட்டுத்தனம் நிற்கும். வேறு வழிகளில் பிரிட்டனுடைய அணுகுண்டு சோதனை முறையை நிறுத்த இயலாது. இந்த ஒரு வழியே வெற்றியைத் தரும். உலகத்துக்குப் பெரும்பணி செய்தவர்களாவோம். உலக மக்களில் பெரும்பாலோர் அடங்கிய தேசங்கள் எல்லாம் நமக்குத் தோழமையும் பக்க பலமும் இந்தக் காரியத்தில் தரும்.

இது ஒரு சோதனை காலம். அமெரிக்க சர்க்கார் உலகம் முழுதிலுமே பல பிரதேசங்களில் அனுமதி பெற்று அணுகுண்டு செலுத்தும் ராணுவ அமைப்புகளை ஏற்படுத்தி, பலநாட்டு மக்களுக்கெல்லாம் அபாய நிலை உண்டாக்கி வருகிறார்கள். இதைப் பற்றி ருஷ்ய சர்க்கார் பலமான ஆட்சேபணை செய்து வந்திருக்கிறார்கள். இந்த அமெரிக்கத் திட்டத்திலுள்ள அபாயத்தையும் விளக்கி யிருக்கிறார்கள். அது வீண் மிரட்டல் அல்ல. இதெல்லாம் திருந்தி உலகத்துக்கு க்ஷேமநிலை ஏற்பட வேண்டுமானால் நாம் இந்தக் கிறிஸ்துமஸ் தீவுப் பிரச்னையின் பேரில் காமன்வெல்த் தொடர்பை அறுத்து விடப் போவதாக பிரிட்டனுக்குக் கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டும்!

ஜனநாயகத்தில் எதிர்க்கட்சி

சென்னையில் காங்கிரஸ் மந்திரி சபை அமையப்போகிறது. ஆனால் அதற்கு எதிராக ஒரு பலமான எதிர்க்கட்சி அமையவில்லை. இந் நிலையில் காங்கிரஸ் எப்போதும் போல் தன் மனம் போன போக்கிலே போகும்.

ஆளும் காங்கிரஸ் கட்சியின் எதேச்சாதிகாரப் போக்கைக் கண்டு வெறுப்படைந்து வெளியேறியவர்கள் காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சியினர். இவர்கள் சட்ட சபையில் 16 பேர்கள் இருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 15 பேர்கள் இருக்கின்றனர்.

இவர்கள் தவிர காங்கிரஸ் சார்பில்லாத சுயேச்சை அங்கத்தினர்களும் இருக்கின்றனர்.

இவர்களது கட்சிக் கொள்கைகளும் மற்ற லட்சியங்களும் எப்படியிருப்பினும், ஒரு விஷயத்தில் ஒன்றுபட்டவர்கள். அதாவது ஆளும் கட்சியின் போக்கு சற்றும் பிடியாதவர்கள். ஆகவே, கா.சீ.க வினரும், தி.மு.க வினரும், சுயேச்சை அங்கத்தினர்களில் சிலருமாகச் சுமார் ஐம்பது பேர்கள் சட்ட சபையில் சேர்ந்து ஓர் எதிர்ப்பு அணி வகுத்தால், ஒரு முகமாகத் தொழிற்பட்டால் ஆளும் கட்சியினருக்குச் சற்று அச்சமாகக்கூட இருக்கும்.

கா.சீ.க., தி.மு.க., சுயேச்சை அங்கத்தினர்கள் அனைவரும் சேர்ந்து ஓர் எதிர்க் கட்சித் தலைவரையும் ஒரு உபதலைவரையும் தேர்ந்தெடுக்க ஒற்றுமையாக இயங்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் காங்கிரஸைச் சீர்திருத்த நோக்கங்கொண்டுள்ள கா.சீ.க.வினர் விருப்பம் நிறைவேறும். அதற்கு மாறாக எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் ஒன்று சேராமல் தனித் தனியாகப் பிரிந்து அமர்ந்தார்களானால், அவர்கள் லட்சியம் சிதைந்து விடுவதோடன்றி, ஆளும் காங்கிரஸ் கட்சியும் குளிர் விட்டு மனம் போன போக்கிலே போகும்!

காங்கிரஸ் இந்தத் தேர்தலில் அடைந்த லாப நஷ்டக் கணக்கைக் காங்கிரஸ் மேலிடத்தார் சென்ற வாரம் "பரிசீலனை" செய்தனர். இதில் அவர்கள் கண்டுபிடித்த உண்மை, காங்கிரஸ் தனது பழைய ஆத்ம சக்தியையும் பலத்தையும் இழந்து சுயநலமும் வகுப்புவாதமும், அதிகாரத் திமிரும் பிடித்த கட்சியாக ராஜ்யங்களில் உலவி வருகிறது என்பது தான். இந்த நிலைமை மாறிக் காங்கிரஸ் தன்

பழைய கௌரவத்தை அடைய வேண்டும் என்று நேருஜி வற்புறுத்துகிறார். சென்னை ராஜ்ய சம்பந்தப்பட்ட மட்டில் இது காரியத்தில் நிறைவேற வேண்டுமானால், காங்கிரஸ் அபேட்சகர்கள் சமீபத்திய தேர்தலில் நடந்து கொண்ட முறைகளைப் பரிசீலிக்க ஒரு சரியான கமிட்டி நியமிக்க வேண்டும். சட்டத்துக்கு விரோதமாகவும், காங்கிரஸ் கொள்கைகளுக்கு விரோதமாகவும் நடந்த நிகழ்ச்சிகளையும் அலசி விசாரிக்க வேண்டியது மிக்க அவசியம். அதன் முடிவு என்னவாயினும். அப்போது தான் காங்கிரஸினிடம் பொது மக்களுக்குப் பழைய பக்தியும் விசுவாசமும் மதிப்பும் ஏற்படும்.

கையெழுத்துக்கு மதிப்பில்லை!

பிரஞ்சு ஆட்சியில் இருந்த புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனம் முதலிய பிரதேசங்களைப் பிரஞ்சுக்காரர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்திய சர்க்காரிடம் ஒப்புவித்து விட்டு வெளியேறியதை யாவரும் அறிவார்கள். அவ் விஷயமாகச் சென்ற வருஷம் பிரான்சுக்கும் இந்தியாவுக்கும் ஓர் ஒப்பந்தமும் கையெழுத்தாயிற்று. தற்போது அந்தப் பிரதேசங்கள் இந்தியாவின் பூரண நிர்வாகத்தில் இருந்து வருகின்றன. ஐந்தாண்டு திட்டங்களுக்கு இணங்க, அப் பிரதேசங்களில் பல அபிவிருத்தி முறைகளைக் கைக் கொண்டு வருகிறார்கள். விவசாயம், கைத்தொழில், மின்சாரம் முதலிய பல துறைகளிலும் அங்குள்ள மக்களுக்கு வசதிகள் பெருகுவதற்காக ஏராளமான தொகையும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.


இவ்விதமாக, பிரஞ்சு-இந்தியப் பிரச்னை தீர்ந்து பல மாதங்கள் ஓடிவிட்டன என்று எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கும் சமயத்தில், பிரான்சிலிருந்து சில தினங்களுக்கு முன் வந்த செய்தி எல்லோரையும் மிகவும் திகைக்கும்படி செய்துவிட்டது.

அதாவது சென்ற வருஷம் கையெழுத்தான ஒப்பந்தத்தைப் பிரஞ்சு காலனிகள் சம்பந்தமான ஆலோசனை சபை அங்கீகரிக்க மறுத்து விட்டது. பல மாதங்களுக்கு முன் தங்கள் சர்க்கார் பிரதிநிதிகள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை இப்போது அங்கீகரிக்க மறுப்பது நேர்மையற்ற, கண்ணியமற்ற காரியம் என்பதை அச் சபையினர் சிந்தித்துப் பார்க்கவில்லை. அதனால் தங்கள் நாட்டின் மதிப்பு உயராது என்பதையும், அத்தகைய செய்கை நகைப்புக்கு இடமாகும் என்பதையும் அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை.

பிரஞ்சுக்காரர்களின் நிர்வாகத்தில் இருந்த புதுச்சேரி முதலிய பிரதேசங்களை, அங்கு முன்னாளில் பிரஞ்சு ஆட்சியை ஸ்தாபித்த டூப்ளே பிரபு உயிர் பெற்றுத் திரும்பி வந்தாலும் கூட இந்திய மக்கள் நிர்வாகத்திலிருந்து பறித்துவிட முடியாது.

கையெழுத்தான ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதென்பது சம்பிரதாயமான ஒரு சடங்கேயன்றி வேறில்லை. இத்தகைய விஷயத்தில் கூடப்பிரஞ்சு பிரதிநிதிகள் நியாயமாக நடந்து

எரிகுண்டுப் பிரயாணம்!



அமெரிக்காவிலிருந்து பிரயோகிக்கப்பட்ட ஓர் பயங்கரமான எரிகுண்டு விசைக் கட்டுப் பாட்டை மீறி உலகத்தைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கிறது. அது எப்போது, எந்த இடத்தில் விழுமோ, தெரியவில்லை. —செய்தி

கொள்ளாதது விபரீதமான மன நிலையைக் காட்டுகிறது. ஆப்பிரிக்காவில் பிரஞ்சு காலனிகளுக்கு ஏற்பட்டிருக்கும் குழப்பமான நிலையே இந்த விபரீதத்துக்குக் காரணம். எனினும், பிரஞ்சு காலனி நிர்வாக ஆலோசனை சபை செய்த நகைப்புக்கிடமான முடிவை நிராகரித்து, தங்கள் பிரதிநிதிகள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை அங்கீகரிக்கும் நேர்மையும் விவேகமும் பிரஞ்சு பார்லிமெண்டுக்காவது உண்டாகும் என்று நம்புகிறோம்.

படகுக் கன்னி

இந்த இதழ் அட்டையில் காணும் ஆரணங்கின் முகத்தைப் பார்த்தீர்களா? அவளைப் பார்க்கும்போதே ஒரு விஷயம் பளிச்சென்று புலப்பட்டு விடுகிறது. அவள் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாள் என்பது பார்த்தவுடனே புரிந்து விடுகிறது. அவள் உள்ளத்தில் எத்தனை எத்தனையோ எண்ண அலைகள் மோதி எழுகின்றன என்பதை அவள் முக பாவம் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது! அது மட்டுமா? அவள் நெஞ்சின் அலைகளைப் பார்க்கும்போது, அவள் மிதந்து படகில் வரும் கடலின் அலைகள் 'ஒன்றுமே இல்லை' என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது அல்லவா?

படகைச் செலுத்திக்கொண்டு வரும் அந்தப் பெண் தன் ஆருயிரினுமினிய காதலனைப் பார்க்க ஆவலுடன் வருகிறாள். அவனைப் பார்த்ததும் என்னவெல்லாமோ பேச வேண்டும் என்று பலபல எண்ணிக் கொண்டே வருகிறாள். அந்த எண்ணங்களில் மூழ்கித் திளைத்துக்கொண்டிருக்கிறாள்.

இப்படி அவள் தன் நெஞ்ச அலைகளில் சிக்கித் தான் எடுத்த துடுப்பைப் போடக்கூட மறந்து விட்டாள் என்பது எவ்வளவு தெளிவாகத் தெரிகிறது!

இயற்கையையும் மனித உணர்ச்சிகளையும் இணைத்துக் கம்பர், காளிதாஸர், வால்மீகி போன்ற கவிகள் பாடக் கேட்டிருக்கிறோம்; படித்திருக்கிறோம். அதே முறையில் உள்ளத்தில் எழும் அலைகளையும் கடல் அலைகளையும் பிணைத்து ஓர் அற்புத ஓவியமாக நமது ஓவியர் கனு தேசாய் இவ்விதழ் அட்டைச் சித்திரமாக வழங்குகிறார்.

படகுக் கன்னியைப் பார்க்கப் பார்க்க நமது நெஞ்சிலும் எண்ண அலைகள் எழுகின்றன. இதுவே ஓர் உயர்ந்த சித்திரத்தின் இலக்கணம் அல்லவா?

ஆகாச வெடி

"இந்தியப் பார்லிமெண்டுக் கூட்டங்களில் சென்ற ஐந்து வருடங்களில் மொத்தம் 800 லட்சம் வார்த்தைகள் பேசப்பட்டிருக்கின்றன." —ஒரு புள்ளி விவரம்

"கடைசியாக ஒரு வார்த்தை!" என்று ஆரம்பித்துச் சிலர் நிகழ்த்தும் பிரசங்கங்கள் இந்தக் கணக்கில் சேர்க்கப்பட்டதா என்று கேட்கப்படுகிறது.

*

"தமிழ்நாடு வடஎல்லைப் பகுதிகள் பற்றி எழுந்த ஒரு கேள்விக்கு ஆந்திர சட்டசபையில் முதன் மந்திரி ஸ்ரீ சஞ்சீவி ரெட்டி தமிழில் பதிலளித்தார்." —செய்திக் குறிப்பு

தமிழில் பதில்களை அளிப்பதற்காக, தமிழ்ப் பகுதிகளை ஆந்திரத்தில் அவர் வைத்துக் கொண்டு, விட மாட்டார் என்று நம்புகிறோம்.

*

"நல்ல சங்கீதத்தினால் அரசியல் வாதிகளிடையே கூட ஒற்றுமையை உண்டாக்கி விடலாம்."

—ஐ. நா. தூதுவர் வி. கே. கிருஷ்ணமேனன்

ஆனால், நீடித்த ஒற்றுமைக்குச் சங்கீதத்தை நாள் கணக்கில் தொடர்ந்து நடத்துவது சாத்தியமா என்று கேட்கிறார் ஒரு ரசிகர்.

"பித்தலாட்டங்களைக் கைவிடுமாறு பஞ்சு வியாபாரிகளுக்கு விடுத்த எச்சரிக்கை இன்னும் சிலர் காதுகளில் ஏறவில்லை." —சர்க்கார் அறிவிப்பு

ஒரு வேளை அந்த வர்த்தகர்கள் காதுகளில் பஞ்சு ஏறியிருக்குமோ?

*

"'மனைவியர் அடக்குமுறை தாளாத கணவர்கள் சங்கம்' என்ற பெயரில் சில கணவர்கள் ஜலந்தர் நகரில் ஒரு சங்கம் ஆரம்பித்திருக்கிறார்கள்." —பஞ்சாப் செய்தி


"இப்படி ஒரு விநோதமான சங்கத்தை ஆரம்பித்ததற்காக அவர்கள் இன்னும் அதிகமாக அடக்கு முறைக்கு ஆளாக மாட்டார்களா!" என்று பயப்படுகிறார் ஒரு கணவர்.

*

"பல ஆயிரம் வருடங்களாகப் பனிக்கட்டிகளிடையே உறங்கிக் கொண்டிருக்கும் ஒரு வகைக் கடல் நத்தைகளைச் சோவியத் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்." —பத்திரிகைச் செய்தி

இதை விட அதிக காலம் தூங்கிக் கொண்டிருக்கும் மனுக்களை இங்கு சில அரசாங்கக் காரியாலயங்களில் யாரும் காணலாமே!

இன்றையப் பிரகலாதன்!



ராஜ்ய சஞ்சாரம்

இமயம் முதல் குமரிவரை விரிந்துள்ள நமது அருமைத் தாய்நாட்டிலே ஆங்காங்கு, என்ன என்ன நடைபெற்று வருகின்றன என்று அறிந்துகொள்ள அவ்வப்போது மற்ற ராஜ்யங்களைச் சுற்றி வரத் தீர்மானித்திருக்கிறார் நமது நிருபர். அவர் முதலில் சுற்றிப் பார்த்து வந்த பகுதிகளைப் பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்.

பீஹார்

தமிழ் நாட்டில் தேர்தல்கள் மிக அமர்க்களமாக நடைபெற்றன. நமது மந்திரிகள் தேர்தலில் வெற்றி பெற எல்லாவித உபாயங்களும் கையாண்டார்கள். ஆனால் இதற்கு நேர்மாறான நிலை பீஹாரில். பீஹார் முதன் மந்திரி டாக்டர் ஸின்ஹா காங்கிரஸ் அபேட்சகராகத் தேர்தலில் நின்றார். நின்றார் என்றால் யதார்த்தமாக நின்று விட்டார். ஆமாம், அவர் தமது தொகுதிக்குப் போய் வாக்காளர்களைத் தமக்கு வோட்டுப் போடும்படி கேட்க மறுத்து விட்டார். இருந்த இடத்திலேயே இருந்து விட்டார்! நின்ற இடத்திலேயே நின்று விட்டார்!

''இப்படித் தேர்தல் பிரசாரம் செய்யாமல் இருந்தால் என்ன ஆவது?'' என்று அவருடைய காங்கிரஸ் அன்பர்கள்கேட்டார்களாம்!

''நான் ஐந்து வருஷம் பீஹார் ராஜ்யத்தின் முதன் மந்திரியாக இருந்திருக்கிறேன். இத்தனை நாள் நான் செய்த வேலை மக்களுக்குத் திருப்தியளித்திருந்தால் என்னைத் தேர்ந்தெடுக்கட்டும். இனி நான் செய்யப்போகும் சேவைகளைச் சொல்லி வாக்காளர்களிடம் போய் வோட்டு கேட்க மாட்டேன்!'' என்று கூறினாராம்.

இதனால் டாக்டர் ஸின்ஹா அமோகமான வோட்டுகள் பெற்றுத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்.

பம்பாய்

பம்பாய் ராஜ்யம் மகாராஷ்டிரமும் குஜராத்தும் இணைந்த பெரிய ராஜ்யம்; இங்கு காங்கிரஸ் பெரிய வெற்றி பெற்றிருக்கிறது. இருமொழி ராஜ்யத்தினால் காங்கிரஸ் செல்வாக்கு பாதிக்கப்படக்கூடும் என்று கருதப்பட்ட சௌராஷ்டிரப் பகுதி, மார்த்வாடா பகுதி மக்கள் எல்லாம் காங்கிரசினிடம் அளவு கடந்த நம்பிக்கை தெரிவித்துக் காங்கிரஸ் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். பம்பாய் ராஜ்யத்தின் முதன் மந்திரி திரு சாவன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். பம்பாய் சட்டசபையின் அங்கத்தினர்களின் தொகை 396. அதில் 232 ஸ்தானங்களைக் காங்கிரஸ் பெற்றிருக்கிறது என்றால் காங்கிரஸிடமும், காங்கிரஸின் பன்மொழி ராஜ்யக் கொள்கையினிடத்தும் மக்களுக்கு எவ்வளவு நம்பிக்கையிருக்கிறது என்பதையே எடுத்துக் காட்டுகிறது! ஆனால் பம்பாய் ராஜ்யத்திலும் பாரத சர்க்காரிலும் பதவி வகிக்கும் மகாராஷ்டிரம், குஜராத்தைச் சேர்ந்த சில மந்திரிகள் தோற்றுப் போயிருக்கின்றனர். இது காங்கிரஸ் மேலிடத்தாருக்குப் பெரும் கவலையை உண்டாக்கியிருக்கிறது.

கேரளம்

உலகத்தின் கண்கள் எல்லாம் இன்று கேரள ராஜ்யத்தையே நோக்கியிருக்கின்றன. இங்கு ஆட்சி நடத்தப் போகும் கம்யூனிஸ்ட்களும் பாரத மக்கள் அனைவருடைய கவனத்தையும் கவரக்கூடிய காரியங்கள் எடுத்த எடுப்பிலேயே செய்யக் கூடியவர்கள் தான். கேரள மந்திரிகள் சம்பளம் 500 ஆகக் குறைத்துக் கொள்ளப் போவதாக முன்பு ஒரு செய்தி வந்தது. இப்பொழுது அதையும் விட மந்திரிகளின் சம்பளம் 350 ஆகக் குறையப் போகிறது என்று சொல்லிக் கொள்கிறார்கள். மந்திரிகள் என்றால் காரில்தான் போக வேண்டும் என்ற சம்பிரதாயம் இருந்து வருகிறதல்லவா? இதற்கு மாறாக கம்யூனிஸ்ட் மந்திரிகள் சைக்கிள்களில் சவாரி செய்யப் போவதாக அறிகிறோம். அத்துடன் சர்க்காருக்குவரும் தபால்களை அன்றன்றைக்கே பைசல் செய்து விட்டுச் 'சிவப்பு நாடா' முறையை ஒழித்துக் கட்டப் போகிறார்களாம். லஞ்ச ஊழல்களை ஒழிக்கும் பணியை முக்கியமான பணியாகக் கொண்டிருக்கிறார்கள். கடைசியாக, மக்களின் மத சம்பிரதாயங்களிலும், உரிமைகளிலும் தலையிடப் போவதில்லை என்றும் அறிவித்திருக்கிறார்கள்.

இவை யெல்லாம் வெற்றிகரமாக நடைபெற்றால், அடுத்த தேர்தலில் காங்கிரஸை எல்லாம் வல்ல இறைவன் தான் காப்பாற்ற வேண்டியிருக்கும்.

ஈழ நாட்டுப் பிரயாணம் 13




இந்தக் காலத்தில் எத்தனையோ விதமான தொண்டுகளைச் செய்கிறார்கள். கோயில் கட்டுகிறார்கள். குளங்கள் வெட்டுகிறார்கள். மடங்கள் கட்டுகிறார்கள். மக்களுக்கு அன்ன தானம் செய்கிறார்கள். கல்வி தானம் செய்கிறார்கள். இவைகள் எல்லாமே தொண்டுதான். இவ்வாறு செய்யும் தொண்டுகளும் தெய்வத் தொண்டு தான். ஆனால் ஈழ நாட்டில் கதிர்காமக் காட்டுக்குள் ராமகிருஷ்ண மடத்தார் ஆற்றி வரும் தொண்டைப் போன்ற சிறப்பான தொண்டை நான் பார்த்தது கிடையாது. இதைப் பார்த்தபோது ''இதுவன்றோ தெய்வத் தொண்டு!'' என்று எண்ணத் தோன்றியது.

எந்தவித சௌகரியமும் இல்லாத அந்தச் சின்னஞ் சிறு கிராமத்தில் எல்லாவித சுக சௌகரியங்களுடன் கூடிய அருமையான மடம் கட்டியிருக்கிறார்கள். 'பிளஷ் அவுட்' போன்ற சுகாதார வசதிகளுடன் கூடிய அழகான ஓய்வு விடுதிகள் பல அமைத்திருக்கிறார்கள். கதிர்காமக் கடவுளைத் தரிசிக்கச் செல்லும் யாத்ரிகர்கள் தங்குவதற்கு வசதியான மடம். தனித்தனி அறைகள். குளிப்பதற்கென்று தனி அறைகள். சாப்பிடுவதற்கென்று தனிக்கூடம். தெய்வ வழிபாட்டுக்கென்று விசாலமான மண்டபம். கதிர்காமத்துக்குச் செல்பவர்கள் இந்த மடத்தில் தாராளமாகத் தங்கலாம். அங்கு அவர்களுக்கு நடக்கும் உபசாரங்கள், அங்குள்ள சூழ்நிலை எல்லாமே தெய்வ மணத்துடன் விளங்குகிறது. அவர்கள் செய்து வரும் ஒவ்வொரு பணியையும் பார்க்கும் போது ''இதுவன்றோ தெய்வத் தொண்டு!'', ''இதுவன்றோ தெய்வத் தொண்டு!'' என்று சொல்லத் தோன்றும்.



ஒரு சிலர் இருக்கிறார்கள், மக்களை விட்டுத்தூர விலகி நின்று ஆண்டவனிடம் அந்தரங்கத் தொடர்பு கொண்டு ஆத்மீக ஆனந்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் இருக்கிறார்கள். தாங்கள் பின்னால் தேர்தலுக்கு நிற்பதற்காகவோ, அல்லது தாங்கள் ஆற்றும் தொழிலுக்கு ஒரு விளம்பரம் வேண்டும் என்பதற்காகவோ தானதர்மங்கள் செய்கிறார்கள். ஆண்டவன் திருப்பணிகளுக்கு அள்ளிக் கொடுக்கிறார்கள். வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் ஏதோ தெய்வத் திருப்பணி செய்வதாக, கடவுள் தொண்டு ஆற்றுவதாக மக்கள் நினைக்க வேண்டும் என்பதற்காகப் பல வகைகளில் விளம்பரம் செய்து கொள்கிறார்கள். ஆனால் ராமகிருஷ்ண மடத்தார் ஆற்றும் தொண்டு அப்படிப்பட்ட பலன் கருதி ஆற்றும் தொண்டல்ல. மனித குலத்துக்குத் தொண்டாற்றுவதே தெய்வத்துக்கு ஆற்றும் தொண்டு என்பதை உணர்ந்து செய்கிறார்கள். தமிழ்நாட்டிலும் சரி, இதர பல இடங்களிலும் சரி எத்தனை எத்தனையோ மடங்கள் இருக்கின்றன. தெய்வப் பணிக்கென்றே இருக்கும் திரு மடங்கள்

இதுவன்றோ



அவை. ஆனாலும் அந்த மடங்கள் உண்மையான தொண்டு எது என்பதை உணர்ந்து கொள்ளாமல் மக்களைவிட்டுத் தூர விலகி நின்று கொண்டிருக்கின்றன. அந்த மடத்துத் தலைவர்கள் ஏதோ மடத்தின் சம்பிரதாயங்களையும், சடங்குகளையும் கவனமாக நிறைவேற்றி வருகிறார்களே தவிர நடமாடும் தெய்வங்களான மக்களுக்குத் தொண்டாற்றுகிறார்களா என்பதைக் கூற முடியாது.

ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர்களோ உண்மையிலேயே தெய்வத் தொண்டாற்றி வருகிறார்கள். இந்தக் காலத்தில் எவ்வளவோ விதமான நாஸ்திகப் பிரசாரங்களுக்கும் மத்தியில் இந்நாட்டில் கடவுள் பக்தி நின்று வருகிறது என்றால் அதற்கு ராமகிருஷ்ண மடத்தார் ஆற்றி வரும் தொண்டு ஓரளவு காரணம் என்று துணிந்து கூறலாம்.


இத்தகைய உத்தமமான திருப்பணிகள் புரிந்து வரும் ராமகிருஷ்ண மடங்களில் ஒன்றான கதிர்காமம் ராமகிருஷ்ண மடத்துக்குள் இப்போது செல்வோம். மடத்துக்குள் செல்வதற்கு முன்னால் யார் இந்த ராமகிருஷ்ணபரம ஹம்சர்? அவருடைய மகிமை என்ன என்பதைச் சற்று நிதானமாக நினைவுபடுத்திக் கொள்வோம்.

சென்ற ஆண்டில் தமிழ் நாட்டில் பெரும் புயல் அடித்தது. அந்தப் புயலின் கொடுமையினால் எண்ணற்ற மக்கள் துன்பத்துக்கு ஆளானார்கள். அவர்களுக்குத் தொண்டாற்ற எத்தனையோ தேச பக்தர்கள் வந்தனர். காவி உடைதரித்த சந்நியாசிகளும் வந்தனர். அவர்கள் நமது தெய்வத் தமிழ் நாட்டில் நீண்ட காலமாக இருந்து வரும் மடங்களைச் சேர்ந்த சந்நியாசிகள் அல்ல. ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சந்நியாசிகள்தான். அந்தச் சந்நியாசிகளும் நம்மைப்போன்ற மனிதர்கள்தான். ஆனால் அவர்களுடைய வாழ்வு முறைதான் மாறுபட்டிருக்கிறது. நாம் மக்களுக்குத் தொண்டாற்றும்போது அரசியல் தலைவர்களின் குறைகுணங்களைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அவர்களோ சகுண நிர்க்குணப் பிரம்மங்களின் இயல்புகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லல்பட்ட மக்களுக்குத் தொண்டாற்றுகிறோம் என்று வீரம் பேசிக் கொள்ளும் தேசத் தலைவர்கள் மந்திரி பதவியை ஏற்பதா, சட்ட சபை அங்கத்தினர் பதவியை மறுப்பதா என்று சண்டை போட்டுக் கொண்டிருக்கும்போது ராமகிருஷ்ண மடத்துச் சந்நியாசிகள் மௌனமாகத் தேசத் தொண்டாற்றி வருகிறார்கள். தேசத்துக்குத் தொண்டாற்றுகிறோம் என்று தம்பட்டமடித்துக் கொள்ளும் தலைவர்கள் சொந்த மனைவி மக்கள்,



தெய்வத் தொண்டு

பகீரதன்



உறவினர் இன்ப துன்பங்களைப் பற்றி எண்ண மிடுகையில் அவர்கள் சேரியில் உள்ள ஹரி ஜனக் குழந்தைகள், இன்னும் எண்ணற்ற ஏழைக் குழந்தைகள் க்ஷேம லாபங்களைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்; அவர்களை நடமாடும் தெய்வங்களாக எண்ணி அழைத்து வந்து கல்வி புகட்டி மகிழ்கிறார்கள்.

இப்படி ஒரு சில மக்களின் வாழ்க்கை முறை மாறி அவர்கள் காவி உடை தரித்த சந்நியாசி யாவதற்கு என்ன காரணம்? அந்தக் காரணம் சரியாக நூற்று இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது. நாமெல்லாம் பிறப்பதற்கு முன்னமேயே இந்த மண்ணுலகில் இருந்து மறைந்து போனது. அதன் பெயர் திரு ராமகிருஷ்ண தேவர்.

*** *** ***

நூற்று இருபது ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நாட்டில் எத்தனையோ பேர் பிறந்தார்கள். அவர்கள் எல்லாரும் "பிறந்தன இறக்கும்" என்ற வாக்கை நிரூபிப்பதற்காகவே பிறந்தவர்களைப் போல் வாழ்ந்து மடிந்து போனார்கள். ஆனால் அவர்களில் ஒரே ஒருவர் மட்டும் இறந்தும் இறவாமலிருக்கிறார். கேவலம் ஒரு உடலைத் துறந்தாராயினும், கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் நிரந்தரமாகக் குடிகொண்டு இன்னும் உயிருடன் இருக்கிறார். அவர்தான் திருப்பெருந் திரு ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

சென்ற நூற்றாண்டில் ஒரு தனி மனிதரால் பாரத நாடு மிகவும் பயன் பெற்றது என்பதைப்பற்றிச் சிந்தித்தோமானால், அந்தத் தனி மனிதர் "திரு ராமகிருஷ்ண தேவர்" தான் என்ற முடிவுக்கு வந்து விடுவோம். இந்த நூற்றாண்டில் காந்தி மகாத்மா நமக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தது போல, சென்ற நூற்றாண்டில் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அந்தச் சுதந்திரத்துக்கு வேண்டிய நல்ல அடிப்படையை அமைத்துக் கொடுத்து விட்டார். சென்ற நூற்றாண்டில் திரு ராமகிருஷ்ணர் தோன்றித் தொண்டாற்ற வில்லையானால் இந்திய சரித்திரத்தின் போக்கே வேறுவிதமாகச் சென்றிருக்கும்.

உலக சரித்திரத்தின் போக்கை மாற்றி அமைத்தவர்கள் என்னும் பெருமை ஒரு சிலருக்குத்தான் கிடைக்கும். அவர்களில் பெரும்பாலோர் தீமைகள் பல புரிந்து சாம்ராஜ்ய வெறிக்காக உலக சரித்திரத்தின் போக்கை மாற்றியவர்கள்.

தேச சரித்திரத்தின் போக்கை நன்மைக்காகவே மாற்றி அமைத்தவர்கள், சாம்ராஜ்ய எண்ணம் சிறிதுமின்றி மக்களின் நல்வாழ்வுக்காகச் சரித்திரத்தை மாற்றியவர்கள் திரு ராமகிருஷ்ண தேவரும், காந்தி மகாத்மாவுமாவார்கள். ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. பள்ளிக்கூடமே போனவர் இல்லை. பொருள் சேர்த்தவரும் அல்ல. பட்டம் பதவி பெற்றவருமல்ல. இந்த

நாட்டு அரசியலில் கலந்துகொண்டு, கேவலம் ஒரு சட்டசபைத் தேர்தலில்கூட நின்றவ ரில்லை. ஆயினும் அவர் இந்தியாவின் சரித் திரப் போக்கை மாற்றிவிட்டார். இந்த அற்புத சாதனையை அவர் எப்படிச் செய்தார்?

இதை அறிந்துகொள்வதற்குப் பத்தொன்ப தாம் நூற்றாண்டில் நடைபெற்ற ஒரு சம்ப வத்தை, இந்தியாவுக்கு நேரவிருந்த பெரும் ஆபத்தை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

அப்பொழுது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்தியாவில் வேரூன்றியதைப் பற்றிச் சொல்ல வில்லை. இந்திய மக்களின் அரசியல் சுதந்திரம் பறிபோனது பெரிய ஆபத்துத்தான். ஆனால் அது பாரத நாட்டுக்குப் பழகிப் போன விஷயம். அதற்குப் பல நூற்றாண்டு காலத் துக்கு முன்பாகவே பாரசீகர், ஆப்கானியர் முதலானோர் இந்தியா மீது படையெடுத்து வந்து தங்கள் ராஜ்யத்தை நிலைநாட்டி விட்டுச் சென்றிருக்கின்றனர்.

ஆனால் அப்போதெல்லாம் நேராத பயங்கர ஆபத்து சென்ற நூற்றாண்டில் ஏற்பட இருந் தது. அதுதான் மேல்நாட்டு நாகரிகத்துக்குப் படித்த அறிவாளிகள் அடிமையானது.

***   ***   ***

சென்ற நூற்றாண்டில் பாரத நாட்டில் ஆங்கிலக் கல்வியைப் பரப்பும் பணியில் ஈடு பட்டனர், அப்பொழுது நம்மை ஆண்ட பிரிட்டிஷார். ஆங்கிலக் கல்வியை அப்போது ஆவலுடன் படிக்க ஆரம்பித்தவர்கள் யார்? நம்முடைய தர்மத்துக்கும், நமது கல்விச் செல்வத்துக்கும் யார் காவலர்களாக இருந் தார்களோ அவர்கள்தான். அதன் பயனாக மேல்நாட்டு விஞ்ஞான ஞானமும், இயந்திர நாகரிகமும் பாரத நாட்டின் பாரமார்த்திக ஞானத்தைவிட மேலானது என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் பரவலாயிற்று. நமது தர்மம், நமது பண்பாடு, நமது கல்வி எல்லா வற்றின் மீதும் அவர்களுக்கு அலட்சியம் வந்து விட்டது. ஆங்கிலேயர்கள் உண்மை யாகவே நம்மை அடிமையாக்குவதற்கு வேண் டிய பலமான அடிப்படையை இவர்களைக் கொண்டு அமைக்கத் தொடங்கி விட்டனர்.

இந்த அடிப்படையை ஆரம்பத்திலேயே பெயர்த்தெறிந்தவர் மகான் ராமகிருஷ்ண தேவர். உலகில் உள்ள நாகரிகத்தில் எல்லாம் சிறந்தது பாரத நாட்டு நாகரிகம், உலகில் உள்ள சமயங்களில் எல்லாம் உயர் வானது, விசாலமானது, குறுகிய நோக்கமும் கட்டுப்பாடும் இல்லாதது இந்து சமயம், கல் தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய உயர்ந்த பண்பாடு பாரதப் பண் பாடு என்பதை உலகுக்குக் காட்டியவர் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர்.

மேல்நாட்டு நாகரிகத்தின் தெய்வம் பணம் தான்; நமது நாட்டின் நாகரிக மனிதரான ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரோ பணத்தைத் தீண்டுவதில்லை என்று விரதம் பூண்டவர். மேல்நாட்டு நாகரிகம் உலகை யெல்லாம் கட்டியாளும் பேராசை கொண்டது. ஸ்ரீ ராமகிருஷ்ண தேவருக்கோ தமக்கென்று ஒரு குழி நிலமும் இல்லாதவர். மேனாட்டு நாகரிகம் கல்விச் செருக்குக் கொண்டது. விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியில் தமக்கு

யாரும் நிகரில்லை என்றும் இறுமாப்புடையது. திரு ராமகிருஷ்ண தேவரோ எழுத்து வாசனை அற்றவர்; பள்ளிக்கூடத்தின் வாசற்படியைக் கூட மிதித்து அறியாதவர்.

திரு ராமகிருஷ்ணரின் லட்சியத்தை சுவாமி விவேகானந்தர் நிறைவேற்றினார். சிங்கத்தை அதன் குகைக்குள்ளேயே அடித்து வீழ்த்தி வெற்றி பெற்றார். மேனாட்டு நாகரிகத்தின் தலைசிறந்த அமெரிக்காவுக்குச் சென்று அங்கே நமது பாரத தர்மத்தின் பெருமையை எடுத்துக் காட்டினார். பணப் பேய் அரசு புரிந்த நாட்டில் கையில் காலணா இல்லாமல் சென்று தியாக வாழ்வின் உயர்வை விளக்கிக் காண்பித்தார். ''உலகம் அநித்தியம், கடவுள் சத்தியம்'' என்று கர்ஜனைபுரிந்தார். திரு ராமகிருஷ்ண பரமஹம்ஸரும், சுவாமி விவேகானந்தரும் அமைத்த இந்த உறுதியான அடிப்படையிலேதான் காந்தி மகாத்மா சத்தியாக்கிரக தர்மத்தை நிலைநாட்டிப் பாரத நாட்டுக்குப் பரிபூரண விடுதலை வாங்கிக்கொடுத்தார்'.

*** *** ***

ஆராய்ச்சி அறிவுடைய ஒவ்வொருவருக்கும் சில சமயம் கடவுள் உண்மையைப் பற்றிச் சந்தேகம் உண்டாவது இயற்கை. ''கடவுள் ஒருவர் இருந்தால் உலகில் துன்பங்கள் ஏன் இருக்கின்றன?'' என்ற கேள்விக்குத் தெளிவான விடை இதுவரை யாரும் சொல்லவில்லை. இது சாதாரண மனித அறிவினால் அறிய முடியாத இரகசியம். இவ்வாறு நமது அறிவின் குறையை நாமே ஒப்புக் கொள்வது என்பது சற்றுக் கஷ்டம்தானே!

ஆனால் சென்ற நூற்றாண்டில் கடவுளை நேருக்கு நேர் கண்டவர் ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் தாம் கடவுளைக் கண்டதுடனல்லாமல் இன்னும் பலரையும் காணச் செய்திருக்கிறார். கல்வி அறிவில் தேர்ந்த பல அறிவாளிகள் அவரைக் கண்டு வழிபட்டு அவரிடம் கடவுள் சாந்நித்தியம் இருப்பதை உணர்ந்திருக்கிறார்கள். அவரிடம் சீடர்களாக இருக்கும் பாக்கியம் பெற்ற சிலருடன் சுவாமி விவேகானந்தர் ஸ்தாபித்த உத்தமமான ஸ்தாபனம்தான் ராமகிருஷ்ண மடம். இது உலகம் முழுவதும் இன்று பரவியிருக்கிறது. மேல் நாட்டிலெல்லாம் நமது பாரத தர்மத்தின் சிறப்பைத் தன்னுடைய தொண்டின் மூலமாகக் காட்டி வருகிறது. அத்தகைய மடாலயங்களில் ஒன்றுதான் கதிர்காமத்தில் உள்ள ராமகிருஷ்ண மடம்.

இந்த மடத்துக்குள் யார் வேண்டுமானாலும் செல்லலாம். எல்லா இடத்துக்கும் சுதந்திரமாகச் செல்லலாம். சாதிமத வேறுபாடு ஒன்றும் இல்லை. மடத்தின் கம்பீரத் தோற்றமும், அது இருக்கும் அமைதி நிரம்பிய சூழ்நிலையும் ''வாருங்கள்! வாருங்கள்!'' என்று நம்மை மௌனமாகக் கூவி அழைக்கின்றன.

மடத்துக்குள் இப்போது பிரவேசித்து விட்டோம். அதோ காவி உடை தரித்த ஒரு சந்நியாசி கை கூப்பி வரவேற்கிறார். அவர் நம்மைப் போன்ற மனிதர்தான். கரிய திருமேனி உடையவர்தான். ஆனால் முகத்திலே மட்டும் தெய்வத் தொண்டின் ஒளி வீசுகிறது.

அந்தச் சிரிப்பு சாதாரண மனிதர்களிடம் காண முடியாத தெய்வத் தொண்டில் சிறந்த உயர்ந்த சிரிப்பு. அவரிடம் சென்றதும் நீண்ட நாள் நெருங்கிப் பழகிய நம்முடைய நண்பர் ஒருவரிடம் சென்றது போன்ற திருப்தியே நமக்கு ஏற்பட்டு விடுகிறது.

நம்மைப் பார்த்தவுடன் நாம் யார் என்று தெரிந்து கொள்வதில் கூட அவர் அக்கறை காட்டவில்லை. ''காலை ஆகாரம் ஆகிவிட்டதா? நீராடிவிட்டீர்களா?'' என்றுதான் கேட்கிறார். அந்தக் கேள்வியில்தான் எவ்வளவு அன்பு. மனித குலத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாருமே தமது உறவினர் என்ற உயர்ந்த உண்மை அல்லவா அதில் தெரிகிறது.

அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி நாம் காலைச் சிற்றுண்டியை முடிக்கிறோம். இலங்கைத் தீவில் காணாத ஒரு அதிசயம், அந்த நாட்டில் வேறு எங்குமே கிடைக்காத முறையில் தமிழ் நாட்டு முறைப்படி சுகாதார மும் சுத்தமும் நிறைந்த சைவ உணவு, இட்லி சாம்பார் கிடைக்கின்றன. இது போலவே அந்தந்த நாட்டுக்காரர்களுக்கு ஏற்ற வண் ணம் அவரவர்கள் விரும்பும் சைவ உணவு வழங்கப்படுகிறது. திருப்தியுடன் சாப்பிட்டு விட்டு எழுந்திருக்கிறோம்.

ராமகிருஷ்ண மடத்துச் சந்நியாசி நம்மை அழைத்துக் கொண்டு மடம் முழுவதும் சுற்றிக் காண்பிக்கிறார். மடத்தின் துப்புரவும் அதன் அமைப்பும் மனத்தைக் கவர்ந்து விடு கின்றன. அதிலும் எந்தவிதமான சௌகர்ய மும் இல்லாத அந்தக் கதிர்காமக் காட்டுக்குள் இவர்கள் எப்படி இவ்வளவு சுத்தமாக மடத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்களோ! இந்த மடத்தின் தூய்மையைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எனக்கு அதற்கு முன் ஈழநாட்டில் ஏராளமான ரூபாய்கள் கொடுத்துத் தங்கியிருந்த 'ரெஸ்ட் ஹவுஸ்' என வழங்கும் ஓய்வு விடுதிகளின் நினைவு வந்தது. அங்கெல்லாம் ஓய்வு விடுதிகளையும், அதன் சூழ்நிலையையும் எவ்வளவோ சுத்த மாகத்தான் வைத்திருக்க முயன்றிருக் கிறார்கள். அங்குள்ள மேஜை, நாற்காலி, கட்டில், மெத்தை எல்லாம் சுத்தமாக இருந் தன. சூழ்நிலையும் கூடிய வரையில் சுத்த மாகத்தான் இருந்தது. ஆனால் அவர்கள் வழங் கும் சாப்பாட்டில் மட்டும் தான் சுகாதார சுத்தம் கிடையாது. சமைப்பவர்கள் சுத்த மாக இல்லை. ஓய்வு விடுதிக்கு அப்பால் உள்ள சூழ்நிலையின் சுகாதாரக் கேடால் ஈக்கள் கூட்டத்துக்கும் குறைவில்லை.

கதிர்காமத்திலும் வேண்டியமட்டும் ஈக்கள் இருக்கின்றன. ஆனால் ராமகிருஷ்ண மடத் தார் ஈக்களைக்கூட அல்லவா விரட்டி அடித் திருக்கிறார்கள்! கதிர்காமத்துக்கு வரும் யாத் ரீகர்களுக்கு வேண்டிய உணவும், இருக்க இடமும் அளிப்பதுடன் ராமகிருஷ்ண மடத் தின் தொண்டு முடிந்து விடவில்லை. அந்தக் கிராமத்தில் உள்ள மக்களுக்கும் சிறந்த முறையில் தொண்டு செய்து வருகிறார்கள் என்று அறிந்தேன். ஏழை எளிய மக்களின் குழந்தைகளுக்குப் பால் வழங்குகிறார்கள்.

அவர்கள் அறியாமையைப் போக்கக் கல்விப் பணி செய்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால்

" பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும் "

என்று பாரதி பறையறைந்து முரசு கொட்டினாரே அந்தக் கவியின் வாக்கை நிறைவேற்றி மகிழ்கிறார்கள் என்று துணிந்து கூறிவிடலாம். இவர்கள் ஆற்றும் தொண்டைப் பார்த்து விட்டு, " இதுவன்றோ தெய்வத் தொண்டு!" என்று சொல்லிச் சொல்லி வியந்து கொண்டே வந்தார் என்னுடன் வந்த கிறிஸ்தவ நண்பர்.

" இந்த ராமகிருஷ்ண மடத்தில் எல்லாம் இருக்கிறதே ராமகிருஷ்ணரையும், சாரதாமணி அம்மையாரையும், விவேகானந்தரையும் காணவில்லையே?" என்றார் கிறிஸ்தவ நண்பர்.

ராமகிருஷ்ண மடத்துச் சந்நியாசி புன்முறுவல் பூத்தார். எங்களை யெல்லாம் அழைத்துக் கொண்டு அருகில் இருந்த அறைக்குச் சென்றார். அறைக் கதவைத் திறந்தார். அடாடா! என்ன ஆச்சரியம்! உண்மையிலேயே அங்கு பகவான் ராமகிருஷ்ணர்மோன நிஷ்டையில் அமர்ந்திருந்தார். எங்களுக்கெல்லாம் ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. எங்கள் திகைப்பைப் புரிந்து கொண்ட சுவாமி, "இது சிலைதான் !" என்றார்.

எல்லாருக்குமே அது சிலைதான் என்று தெரிந்தாலும் அந்த உருவத்தைப் பார்த்தவுடன் நாங்கள் திருப்பெருந்திரு பரமஹம்ஸரையே பார்த்து விட்டது போன்ற பரமானந்தத்தைப் பெற்று விட்டோம்.

ராமகிருஷ்ணரின் சிலைக்கு எதிரில் அன்னை சாரதாமணி தேவியாரின் திருவுருவமும், சற்றுத் தூரத்தில் சுவாமி விவேகானந்தரின் உருவச் சிலையும் இருந்தன.

அந்த முகங்களில் இருந்த தேஜோமயானந்தமும், கண்களில் மின்னிய ஞானக் கலையும் நம்மைக் கவர்ந்து விடுகின்றன. ஆகா! இப்பேர்ப்பட்ட அற்புதச் சிலைகளைச் செய்த சிற்பிகள் யார்? அவர்கள் மனிதர்களா? அல்லது தேவர்கள்தானோ?

அந்தப் புண்ணிய மூர்த்திகளைத் தரிசித்து விட்ட மனத் திருப்தியுடன் ராமகிருஷ்ண மடத்திலிருந்து புறப்பட விரும்பினோம்.

புறப்படுவதற்கு முன்னால் அங்கு தங்கியிருந்ததற்கும், சிற்றுண்டிகள் அருந்தியதற்கும் எவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்க விரும்பினோம். எங்கள் விருப்பத்தைப் புரிந்து கொண்ட அந்தச் சந்நியாசி, "இது என்ன ஹோட்டலா, நீங்கள் சாப்பிட்டதற்கெல்லாம் பணம் வசூலிப்பதற்கு?" என்று சொல்லிவிட்டார். எங்களுடன் வந்திருந்த நண்பர் "நாங்கள் ஏதாவது மடத்துக்கு நன்கொடை வழங்கலாமல்லவா?" என்று கேட்டார்.

"அதை எப்பொழுதும் வரவேற்போம்" என்று சிரித்துக்கொண்டே பதில் சொன்னார் ராமகிருஷ்ண மடத்துச் சந்நியாசி.

மடத்துக்கு நன்கொடை கொடுத்த பணம் முக்கியமல்லவானாலும் மடத்தின் தொண்டை மட்டும் மறக்க முடியவில்லை. பாலிலிருந்து நீரைப் பிரித்து விட்டுப் பாலை மாத்திரம் அருந்தும் அபூர்வ சக்தி அன்னப்பட்சிக்கு உண்டு என்று சொல்லுவார்கள் அல்லவா? அதுபோல உலகத்து சமயங்களில் உள்ள உயர்ந்த அம்சங்களையும், பாரத தேசத்தின் பண்பாட்டுக்கும் பெருமைக்கும் நாகரிகத்துக்கும் உள்ளவாறு பல விசேஷ அம்சங்களையும் சேர்த்துக் கொண்டு மக்களுக்குத் தொண்டாற்றுவதற்காக அருமையான திட்டம் வைத்துக் கொண்டிருக்கும் ராமகிருஷ்ண மடத்திலிருந்து புறப்பட மனமே யில்லை. எங்களை வரவேற்று உபசரித்த சந்நியாசியிடமிருந்து பிரியாவிடை பெற்றுக்கொண்டோம்.

*** *** ***

நேயர்களை இப்பொழுது இலங்கைத் தீவில் உள்ள மிகச் சிறந்த மலை வாசஸ்தலமான நுவரேலியாவுக்கு அழைத்துச் செல்லப் போகிறேன். அங்கு போவதற்குள் வழியில் சில அருமையான இடங்களை யெல்லாம் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அதையும் பார்த்து விடுவோம். திருகோணமலை என்ற ஊருக்குப் பக்கத்தில் 'பறவைத் தீவு' ஒன்று இருக்கிறது. இந்தத் தீவில் உலகில் உள்ள அத்தனை விதமான பறவை இனங்களும் இருக்கின்றன. அந்தப் பறவைக் கூட்டத்தைப் பார்ப்பதற்காக உலகின் பல பாகங்களிலிருந்தெல்லாம் பறவை ஆராய்ச்சி நிபுணர்கள் வருகிறார்களாம். அந்தப் 'பறவைத் தீவை' நாளையதினம் பார்க்கலாம். **(தொடரும்)**



சுத்தமான, திடமான பற்கள்
ஆக்டிவ் க்ளோரோபில்
சேர்ந்த அற்புதமான
பச்சை 'கோலினஸ்'
டூத்பேஸ்ட்
Kolynos
Chloroph
★ பற்களைச் சுத்தமாயும் பிரகாசத்துடனும் வைக்கிறது
★ பற்களை சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது
★ ஈறுகளுக்குப் பலமளிக்கிறது
★ வாய் நாற்றத்தை அகற்றுகிறது
'கோலினஸ்' நுரை
தனிச் சிறப்பு வாய்ந்தது
ஜீயாப்ரே மானர்ஸ் அண்டு கம்பெனி பிரைவேட் லிட்.
ரிஜிஸ்தர் செய்து கொண்டு உபயோகிப்பவர்கள்
GK. 3029

மாதர்குல திலகங்கள்



தாய் தந்தையர் தங்களுடைய குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும்போது நல்ல நல்ல பெயர்களாகத்தான் வைக்கிறார்கள். மகன் கோமுகவரனாக விளங்க வேண்டுமென்று விரும்பி, ''கோமுகவரன்'' என்று பெயர் இடுகிறார்கள். ஆனால், நடப்பது வேறு. 'கோமுகவரன்' ஒரு என். ஜி. ஓ. வாக விளங்கி வாழ்க்கைப் போராட்டம் நடத்தி வருவார். ''சாந்த நாயகி'' என்பது சிறந்த பெயர் அல்லவென்று சொல்ல முடியாது. ஆனால், அந்தப் பெயர் தாங்கி வளரும் பெண் குழந்தையோ பிற்காலத்திலே எப்போதும் ''கோப நாயகி''யாக விளங்குகிறாள். ஆனால் பெயருக்குத் தக்கபடி குண விசேஷங்களும் பொருத்தமாக அமைந்த பாக்கியசாலிகள் லட்சத்தில் ஒருவர் இருப்பதே அபூர்வம்.

படத்திலே சிவப்பழமாகக் காணும் மதுரை திருமதி பொன்னம்மாள் அவர்கள் அத்தகைய பாக்கியசாலிகளில் ஒருவர். பெயருக்குத் தகுந்தவாறு குண விசேஷங்களிலும் இம் மூதாட்டியார் பொன்னம்மாளாகவே திகழ்ந்து, தங்கமான நற்பணிகள் பல புரிந்து வருகிறார். இங்கத் தள்ளாத 77-வது வயதிலும் அவருக்குள்ள தமிழ் ஆர்வம் சிறிதும் தளர்ச்சி பெறவில்லை. திருமதி பொன்னம்மாள், மதுரை நகரில் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக விளங்கிய காலஞ் சென்ற திரு எம். இரவியம் பிள்ளையின் துணைவியாராவர். திரு இரவியம் பிள்ளையின் உதார குணத்துக்கு ஓர் ' எடுத்துக் காட்டாக, திருநெல்வேலி ''மதுரை இரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரி''யைக் குறிப்பிட வேண்டும்.

திருநெல்வேலியின் பழம் பெருமை மிக்க இந்த ''இந்துக் கல்லூரி''யை ஏறக்குறைய முப்பது வருஷங்களுக்கு முன் பொருளாதார நெருக்கடி காரணமாக நிர்வாகிகள் மூடிவிடலாம் என்ற தீர்மானத்துக்கு வந்து விட்டார்கள். எனினும், பூட்டைக் கையில் எடுக்கு முன் இந்தக் கல்லூரியின் கடன் தொல்லைகளைப் போக்கி, நிர்வாகத்துக்குப் பண உதவி புரியவும் யாராவது கிடைக்க மாட்டார்களா என்ற நம்பிக்கையோடு, மதுரை வந்தார்கள். மதுரையில் அவர்களுடைய நல்லதிர்ஷ்டம், திரு இரவியம் பிள்ளை அவர்களிடம் கொண்டு போய்ச் சேர்த்தது. 'பெருந் தொகை பண உதவி இன்றேல் கல்லூரிக் கதவுக்குத் தாளிடு விழா நடத்த வேண்டியதுதான்' என்று உருக்கமாகக் கூறினார்கள். இதைக் கேட்டுத் தெரிந்துகொண்ட திருமதி பொன்னம்மாள் அவர்களின் மனம் இளகிற்று. கல்லூரிக்கு உடனே உதவிசெய்ய வேண்டுமென்று கணவரைக் கேட்டுக் கொண்டார். துணைவியாரின் விருப்பத்துக்கு இணங்க, திரு இரவியம் பிள்ளை அவர்கள் ஒரு லட்ச ரூபாய் நன்கொடை வழங்கினார். திரு இரவியம் பிள்ளை அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரரின் பெயர் திரு தாயுமானவ சுவாமிப் பிள்ளை என்பதாகும். திரு இரவியம் பிள்ளை அவர்களது அபிமானத்துக்குப் பாத்திரமானவர். நன்கொடை பெற்ற கல்லூரி நிர்வாகிகள், இந்துக் கல்லூரி புனர் ஜன்மம் எடுத்ததாக மகிழ்ந்து, கல்லூரிக்கும், ''மதுரை ஸ்ரீ இரவியம், தாயுமானவர் இந்துக் கல்லூரி'' என்று புதுப் பெயர் வைத்தார்கள். கல்லூரியின் அறநிதி ஆணையாளராகத் திருமதி பொன்னம்மாள் அவர்கள் இன்றும் பணியாற்றி வருகிறார்.

திருமதி பொன்னம்மாள் தமது கணவர் செய்த நற்பணியை மேலும் சிறப்பிக்கத் தமது குடும்பத்து மற்றும் சில பெண்மணிகளின் ஆதரவையும் கொண்டு விஞ்ஞான கூடம்—'ஸையின்ஸ் ஹால்' ஒன்றும் கட்டச் செய்திருக்கிறார். கல்வித் தொண்டுடன் கடவுள் தொண்டும் செய்து வருகிறார். மதுரை மாநகர் எல்லையிலேயே மாவாலிப்பட்டி கிரைத் துறையில் ஏராளமான செலவில் பெரியதோர் சிவன் கோவிலையும் பதினேழு ஆண்டுகளுக்கு முன்பே கட்டியிருக்கிறார். பாரத நாட்டின் மாதர் குல திலகமாக விளங்கி வரும் திருமதி பொன்னம்மாள் பல்லாண்டு வாழப் பிரார்த்திக்கிறோம்.



புது வாழ்வு

காந்தன்

தமிழில் பேசும் படங்கள் தயாரிக்கப்பட்டு வெளிவந்தபொழுது அவைகள் பேசும் படங்களாக இல்லை; பெரும்பாலும் பாடும் படங்களாகத்தான் இருந்தன!

மேற்படி பாடும் படங்களின் தரத்தை மதிப்பிடுவதற்கு, அப்படங்களில் அடங்கியிருக்கும் பாட்டுக்களின் எண்ணிக்கையைத்தான் படாதிபதிகள் ஆதாரமாகக் கொண்டிருந்தனர்; முப்பத்தெட்டு பாடல்கள், ஐம்பது பாடல்கள், அறுபத்தெட்டு பாடல்கள் என்று படத்தின் பாடல்களைத்தான் கணக்கிட்டு விளம்பரம் செய்வார்கள்.

சினிமா என்றால் என்ன, நாடகத்துக்கும் சினிமாவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன, எந்த முறைகளைக் கையாண்டால் சினிமா சிறப்பாயிருக்கும், சினிமாவிலுள்ள வசதிகளை எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் அந்தக் காலத்துத் தமிழ்ப் படாதிபதிகள் சிந்தித்துப் பார்க்கவே யில்லை. ஒரு படத்தில் அதிகபட்சம் எத்தனை பாடல்களைப் புகுத்தலாம் என்பதில்தான் அந்தக் காலத்துப் படாதிபதிகளின் சிந்தனை முழுவதும் செலவாகி வந்தது.

காலப்போக்கில் இந்த நிலைமை மாறி, தமிழ்ப் படங்களில் வரவரப் பாடல்கள் குறையத் தொடங்கின. காட்சி ஜோடனைகள், ரசகமான கருத்துக்கள், நல்ல நடிப்பு, படத்தின் 'டெம்போ', விறுவிறுப்பான வசனம் முதலியவைகளெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக இடம் பெற்று, 'இனிமேல் தமிழ்ப்படங்களுக்கு நல்ல காலம் பிறந்து விட்டது' என்று எண்ணிக் குதூகலப் பட முடிந்தது. படாதிபதிகள் கொஞ்சம் பெரிய மனசு வைத்து, புதுக் கருத்துக்களையும் புதிய போக்கையும் கொண்ட திரைக்கதையை எடுக்கத் துணிந்துவிட்டால் தமிழ்ப் படத்துக்குவிமோசனம்பிறந்து விடும் என்ற நம்பிக்கை ஒளி விடும் சமயத்தில் ஒரு பெரிய அதிர்ச்சியாக ஸர்வோதயா பிக்சர்ஸாரின் ''புது வாழ்வு'' வெளி வந்திருக்கிறது.

எம். கே. தியாகராஜ பாகவதர் 'டைரக்ட்' செய்து, நடித்து, தயாரித்திருக்கும் படம் ''புது வாழ்வு.'' எத்தனையோ தமிழ்ப் படங்களில், கதாநாயகன் பாகம் ஏற்று, படம் முழுவதும் பாடித் தள்ளிப் பெயர்போனவர் தியாகராஜ பாகவதர்! பாகவதர் படம் என்றால், அதில் நிச்சயம் காதல் இருக்கும்; புதுப் புதுக் கவர்ச்சிகரமான மெட்டுக்களில் பாட்டுக்கள் நிறைய இருக்கும் என்பது தீர்மானமான விஷயம்; பெரும்பான்மையான பாட்டுக்களைப் பாகவதரே பாடியிருப்பார் என்றும் நிச்சயம் எதிர் பார்க்கலாம். மேற்படி படத்தை, பாகவதர் நடித்திருக்கும் படம் என்று சொல்லுவதைவிட, பாகவதர் பாடியிருக்கும் படம் என்று சொல்லுவது மிகவும் பொருத்தமா யிருக்கும்! நின்றால் பாட்டு, உட்கார்ந்தால் பாட்டு என்று பாடல்களைப் பொழியும் ஒருவர் நடிக்கவும் வேண்டும் என்றால் அது முடிகிற காரியமா? ஆகவேதான் பாகவதர் என்றுமே நடிப்பைப் பற்றிப் பொருட்படுத்தியதில்லை யென்று நினைக்கிறேன்!

''திருநீலகண்டர்,'' ''சிந்தாமணி,'' ''சிவகவி'', ''அம்பிகாபதி'', ''ஹரிதாஸ்'' முதலிய படங்கள் பாகவதரின் இனிமையான பாட்டுக்களுக்குப் பிரசித்தி பெற்றவை. ''சொப்பன வாழ்வில் மகிழ்ந்தேன்'', ''ராதே உனக்குக் கோபம் ஆகாதடி'' முதலிய பாடல்கள் இன்னும் பட ரஸிகர்கள் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அங்க சேஷ்டைகள் இல்லாமல், ஆடாமல், அசையாமல் இருந்து மதுரமான சாரீரத்தில், புதிய புதிய வர்ண மெட்டுக்களில் அந்த நாளில் பேசும் படங்களில் பாடித் தமக்கென ஒரு தனியிடம்

பெற்றவர் தியாகராஜ பாகவதர்! இவற்றுள் "ஹரிதாஸ்" படத்தைப் பார்த்தவர்கள் "புது வாழ்வு" படத்தைப் பார்க்க வேண்டாம். இல்லை, "புதுவாழ்"வைப் பார்த்தவர்கள் "ஹரிதா"ஸைப் பார்க்கவில்லையே என்று கவலைப்பட வேண்டாம்! இரண்டு படங்களுக்கும் ஆதார சுருதியா யிருப்பது "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் முது மொழிதான்.



பணக்காரனாயிருந்த ஹரிதாஸ், தாய் தந்தையர்களைக் கொடுமைப்படுத்தி வீட்டை விட்டு வெளியேற்றி, இன்பக் கேளிக்கைகளில் ஈடுபட்டு, அல்லற்பட்டு, நொந்து, கால் ஒடிந்து, "அம்மை அப்பா, உங்கள் அன்பை மறந்தேன்!" என்று பாடிக் கதறிக் கண்ணீர் உகுத்து, பிறகு பெற்றோர்களைக் கண்டு, அவர்களைத் தெய்வங்களாகப் போற்றி வணங்குகிறான். இது "ஹரிதாஸ்" படம்.

ஏழையா யிருந்த வைகுண்டம், பணக்காரக் காதலியின் மூலம், இசைக் கலையில் தேர்ந்து, புகழேணியில் ஏறி, தாய் தந்தையர்களை அவமதித்துப் பேசி, பிறகு நிலைமை தலைகீழாக மாறி, தாய் தந்தையர்களைத் தெய்வமாகப் போற்றி, அவர்களை வண்டியில் ஏற்றி இழுத்து, பாடிக்கொண்டே வீதியோடு வந்து, பிறகு பழைய காதலியைக் கண்டு பெற்றோரின் ஆசியுடன் அவள் கரம் பற்றுகிறான். இது "புது வாழ்வு" படம். வைகுண்டம் பாகத்தை ஏற்றவர் பாகவதர் என்று சொல்ல வேண்டியதில்லை.

பாகவதரின் ஆரம்பக் காதலில் பங்கு பற்றியிருப்பவர் லலிதா (வல்லி). அடுத்த கட்டத்தில், அவர் நல்ல நிலைக்கு வந்து புகழடைய ஆரம்பித்த போது மாதுரி தேவி அந்தப் பாகத்தை ஏற்கிறார். முதல் காதலில் பாகவதரின் மெய்ஞ்ஞான சித்தர் பாடல் இடம் பெறுகிறது. இரண்டாவது காதலில் கவர்ச்சிகரமான பல திறுசுப் பாடல்கள் அமோகமாக இடம் பெற்றிருக்கின்றன.

படப்பிடிப்பு, ஒலி இரண்டு முக்கியமான அம்சங்களும் "புது வாழ்வு" படத்தை வேண்டிய மட்டும் ஏமாற்றியிருக்கின்றன.

பாகவதர் குரலில் முன்பு இருந்த இனிமை இல்லை என்றாலும், குளுமையான குரலில் தெம்மாங்கிலிருந்து பெரிய கீர்த்தனம் வரையில், பன்னிரண்டு பாடல்களைப் பாடி, இப் படத்தில் கானமழை பொழிந்திருக்கிறார்.

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், தங்கவேலு, டி. எஸ். துரைராஜ், டி. எஸ். பாலையா முதலிய நடிகர்கள் இப் படத்தில் நடித்திருக்கின்றனர். யாருடைய நடிப்பும் இந்தப் படத்தில் சோபிக்காமற் போனது மிகவும் வருந்தத் தக்கதுதான்.

மாதுரிதேவி, குமாரி துளசி, லலிதா (வல்லி) ஆகிய நடனமணிகளின் நடனம் படம் முழுவதும் நிறைந்திருக்கிறது.

கதை, வசனம் எழுதும் பணியில் பழைய சினிமாக் கதாசிரியர் இளங்கோவன், ஏ. கே. வேலன், இறைமுடி மணி, சரதா முதலியவர்கள் பங்கு பற்றியிருக்கின்றனர். பாடல்களும் பலரால் இயற்றப்பட்டிருக்கின்றன; சித்தர் பாட்டும், மகாகவி பாரதியார் பாட்டும், சுவாமி ராமலிங்கப் பெருமான் பாட்டும், பாபநாசம் சிவன் பாட்டும்கூடச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

எவரெஸ்ட் சிகரத்தைக் காணப் புறப்பட்டவர்கள், அரும்பாடுபட்டு, கொஞ்ச தூரம் மலைமேல் ஏறினதும் திடீரென்று பனிச் சரிவின் காரணமாக மளமளவென்று கீழ்நோக்கி வந்து விழுந்துவிட்டால் அவர்கள் மன உணர்ச்சி எத்தகையதா யிருக்கும் என்று நான் இது வரையில் சிந்தித்துப் பார்த்ததில்லை. "புது வாழ்வு" படத்தைப் பார்த்ததும் மேற்படி உணர்ச்சியை என் இதயத் துடிப்பிலேயே நன்றாக உணர முடிந்தது.

சினிமா பார்ப்பவர்கள் விழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் படாதிபதிகள் ஒரு நாளும் மறக்கலாகாது. எல்லாப் படாதிபதிகளுக்கும் "புது வாழ்வு" ஒரு எச்சரிக்கை!

ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது.]

73

உலகம் படைத்தவன் மக்களைச் சிருஷ்டிக்கும்போது யக்ஞம் அதாவது தியாகத்துடன் சிருஷ்டித்ததாகக் கீதையில் சொல்லப்படுகிறது. இந்தக் காமதேனுவைக் கொண்டு பிழையுங்கள் என்று சொல்லி மனித சமூகத்தையும் வேள்வியையும் உலகம் படைத்தவன் தோற்றுவித்தான் என்பது கீதாவாக்கியம். யக்ஞம், வேள்வி, தியாகம் இவை யனைத்துக்கும் ஆங்கிலத்தில் ஒரே பெயர் — Sacrifice. தனக்குப் பயன்படும் படியான ஒரு பொருளைத் தெய்வத்துக்கென்று அளித்து விடுவது யக்ஞம் அல்லது வேள்வி. பிறருக்குக் கொடுத்து விட்டுத் தன் உரிமையைத் துறந்து விடுவது தியாகம். 'தியாகத்தால் உங்களுடைய எல்லா ஆசைகளையும் தீர்த்துக் கொள்ளுங்கள்' என்பது உலகம் படைத்தவனுடைய வாக்கு என்றால் மனித வர்க்கத்தினுடைய முன்னேற்றத்துக்கு வழி ஒவ்வொருவனும் தன்னலத்தை அதிகமாகக் கருதாமல் பிறருக்குத் தன்னுடைய பொருளை மனப்பூர்வமாக உதவ வேண்டும் என்பது அர்த்தம்.

கீதையில் இன்னும் சொல்லப்படுகிறது: வேள்வி செய்யாமல் உண்பவன் திருட்டுச் சோறு உண்கிறான். இதன் பொருள் என்னவென்றால், சமூகத்தினுடைய உதவியால் ஒருவனுக்கு வயிறார உண்ண உணவு கிடைக்கிறது; அந்த உணவைத் தின்பவன் தன்னால் இயன்றதைச் சமூகத்துக்குச் செய்து வர வேண்டும். இல்லாவிடில் அவன் உண்ட சோறு திருட்டுச் சோறாகும்.

எல்லாரும் உழைத்து அவனவனுக்கு வேண்டிய உணவை அவனவன் சம்பாதித்து அவனவனுக்கு வேண்டியதற்கு மேல் சேர்த்து வைத்துக் கொள்ளாமல் இருந்தால் யாருமே பசியால் கஷ்டப்பட மாட்டார்கள். எல்லாருக்குமே போதிய ஓய்வும் இருக்கும். ஜனத் தொகை அதிகமாகி விட்டது என்கிற பேச்சு இருக்காது. உலகத்தில் வியாதியும் இருக்காது. வேறுவிதத் துயரமும் இருக்காது. இந்த முறையை ஒப்புக் கொண்டு எல்லாரும் உழைத்து உண்டால் அந்த உழைப்பு மிகச் சிறந்த வேள்வியே யாகும். உணவுக்கு மாத்திரம் அன்றி உடலையும் மூளையையும் கொண்டு வேறு பல தொழில்களும் செய்யலாம். ஆனால் அவையெல்லாம் சுயநலத்துக்கல்லாமல் சமுதாய நன்மைக்காகச் செய்யப்படவேண்டும். இவ்வாறு நடைபெற்றால் ஏழைகளென்றும் பணக்காரர்கள் என்றும் மேலோர் என்றும் கீழோர் என்றும் தீண்டும் சாதி என்றும் தீண்டத்தகாத சாதி என்றும் வேறுபாடுகள் இல்லாமல் நாடு சந்தோஷமாக இருக்கும்.

இது நடைமுறையில் ஆகாத காரியமாக இருக்கலாம். அதற்காக அந்த வழியில் நாம் முயற்சி செய்ய வேண்டியதில்லை என்றல்ல. முற்றிலும் இந்த வேள்வி நியதிப்படி செய்து தீர்க்காவிட்டாலும் நம்முடைய உணவுத் தேவைக்குச் சமமாக ஏதேனும் ஒரு வழியில் சரீரத்தைக் கொண்டு உழைப்பது என்று மட்டுமாவது வைத்துக் கொண்டோமானால் கடமையை வெகுவாகச் செய்தவர்களாவோம்.

இப்படி வாழ்க்கையை நடத்தினோமானால் நம்முடைய தேவைகள் ரொம்பக் குறையும். நம்முடைய சாப்பாட்டு முறையும் வரம்பு மீறாமல் சாமான்ய வகையில் நிற்கும். உயிரைக் காப்பதற்கு உண்போம். உண்டு களிப்பதற்காகவே உயிரைப் பெற்றோம் என்று வாழ மாட்டோம். நான் சொன்னதில் யாரேனும் ஐயப்பட்டால் அவர் செய்து பார்க்கலாம். ஒருவன் தான் உண்ணும் உணவைத்தானே உழைத்துச் சம்பாதிக்க முயன்றால் அப்படி அடைந்த உணவை மிகவும் ருசிப்பான். தன்னுடைய தேக சிரமத்தினால் உண்டான அன்னத்திலும் காய் கறிகளிலும் அமுதம் போன்ற சுவை காண்பான். ஆரோக்கியம் வளரும். அதற்குமுன் மிக அவசியம் என்று அவன் எண்ணிய பல உணவுப் பொருள்கள் அனுவசியம், வேண்டியதே யில்லை என்று காண்பான்.

நம்முடைய உணவுக்காக உடலைக் கொண்டு சிரமம் எடுப்பதே கடமையா? மூளையை உபயோகித்து உணவுக்கு வேண்டிய அளவு சம்பாதிக்கலாகாதா? என்று கேட்பீர்கள். இல்லை என்பேன்.

உடலுக்கு வேண்டியதை உடலைக் கொண்டே சம்பாதிக்க வேண்டும். மூளையைச் செலுத்தி, தேக உழைப்பின்றிச் செய்யும்படியான தொழில் உள்ளத் தூய்மைக்கும் ஆன்ம உயர்வுக்கும் பயன்பட வேண்டும். அதன் வழி உடலுக்கு வேண்டிய உணவை விலைக்கு வாங்கலாகாது. மூளையைக் கொண்டு செய்யும் தொழிலுக்குக் கூலி கேட்கலாகாது. நல்ல முறையில் நடைபெறும் சமூகத்தில், வைத்தியர்களாவது நீதி நிபுணர்களாவது அவர்களைப் போன்ற மற்றவர்களாவது சமுதாயத்துக்குத்தான் உழைப்பார்கள். அறிவை விலைக்கு விற்க மாட்டார்கள். வரும்படிக்காகத் தங்கள் மூளையை உபயோகப்படுத்த மாட்டார்கள்.

நான் சொன்ன விதத்தில் உணவும் உடல் உழைப்பும் பிணைக்கப்பட்டால் ஒரு சத்தமும் குழப்பமுமின்றிச் சமூகம் சீர்ப்பட்டுப்போகும். தத்தம் சுயலாபத்துக்கென்றும் பிழைப்புக்கென்றும் போட்டியிடுவதற்குப் பதிலாகச் சமூக சேவையில் ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவார்கள். மிருக வாழ்க்கை மறைந்து உண்மையான மனித வாழ்க்கை தோன்றும். ''நகரங்களை விட்டுக் கிராமங்களுக்குச் செல்லுங்கள்'' என்று உபதேச மந்திரத்தின் பொருள் இதுவே. உடல் உழைப்பின் வழியாகவே வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். மூளையைக் கொண்டு செய்யும் தொழில்களுக்குக் கூலி கேட்கலாகாது.

[ஹரிஜன், 29—6—35]

டாக்டர் சேதுப் பிள்ளை

சமீபத்தில் பல்கலைக் கழகம் தனது நூற்றாண்டு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடியது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அந்தச் சமயம் சென்னை சர்வகலாசாலை ஒரு நல்ல காரியம் செய்தது. சென்னை பல்கலைக் கழகத்திலே தமிழ்த் துறைத் தலைவராக அமர்ந்து நீண்ட நாட்களாக அருந்தமிழ் ஆராய்ச்சிப் பணி புரிந்துவரும் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுக்கு டாக்டர் பட்டம் கொடுத்துக் கௌரவித்தது. சென்னை சர்வகலாசாலை டாக்டர் பட்டம் கொடுப்பதற்கு முன்பே பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களுக்குத் தமிழ்ப் பெரு மக்கள் மிக உயரிய ஸ்தானத்தைத் தங்கள் உள்ளத்தில் நல்கி விட்டார்கள். அத்துடன் 'சொல்லின் செல்வர்' என்று அருமையோடும் உரிமையோடும் அழைத்துப் பாராட்டி வந்தார்கள். அப்படிப் பட்ட பேராசிரியருக்கு டாக்டர் பட்டம் வழங்கியதில் சென்னை சர்வகலாசாலை திரு சேதுப்பிள்ளை அவர்களை மட்டும் பாராட்டியதாகக் கருதவில்லை, தமிழ்ப்பெரு மக்கள் ஒவ்வொருவரையும் அவர்கள் ரஸனைத் திறத்தையும் பாராட்டியதாக எண்ணி மகிழ்கிறார்கள்!

இந்த மகிழ்ச்சி சென்னை நகரில் இரண்டு நாட்கள் பெரு வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடியது. சென்னை சர்வகலாசாலையில் மற்றத் துறைகளில் பணியாற்றும் பல பேராசிரியர்கள் சேர்ந்து மார்ச்சு 22ம் தேதியன்று டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் தலைமையில், சொல்லின் செல்வரைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். அன்று டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் டாக்டர் சேதுப்பிள்ளை அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, வெள்ளி அசோக ஸ்தூபியைநல்கிக்கௌரவித்தார்.பேராசிரியர் அ. சீநிவாசராகவன், திரு கே. பாலசுப்பிரமணிய அய்யர், டாக்டர் சதாசிவன், பேராசிரியர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, சரித்திரப் பேராசிரியர் கே. கே. பிள்ளை, கன்னடப் பேராசிரியர் திரு எம். எம். பட் முதலியோர் முனைமாரப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் சென்ற 26-3-57 அன்று கோகலே மண்டபத்தில் அண்ணாமலை சர்வகலாசாலையின் துணை வேந்தர் திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் எழுத்தாளர் சங்கம் ஒரு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தது. இக் கூட்டத்தில் திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரியார், அருள் திரு அருள்சாமி, திரு மீ. ப. சோமசுந்தரம் ''சோமு'', திரு கி. வா. ஜகந்நாதன், திரு டி. கே. சண்முகம் முதலியவர்கள் பாராட்டிப் பேசினார்கள். திரு புத்தனேரி ரா. சுப்பிரமணியம் யாத்த வாழ்த்துப் பாடலை திரு டி. கே. சண்முகம் இனிமையாகப் பாடிச் சபையோரை மகிழ்வித்தார்.

டாக்டர் சேதுப்பிள்ளை அவர்கள் ''தமது மூச்சு உள்ளளவும் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் சேவை செய்வதே தமது பணியாக இருக்கும்'' என்று பெருத்த கரகோஷத்திடையே கூறினார். தமிழ் எழுத்தாளர் சங்கக் காரியதரிசி திரு அழ. வள்ளியப்பா வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது முடிந்தது!

சென்னை சர்வகலாசாலை பல ஆண்டுகளுக்கு முன் மகா மகோபாத்யாய உ. வே. சாமிநாதய்யர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அதற்குப் பிறகு இப்பொழுதுதான் திரு ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கியிருக்கிறது. இப்படிச் சென்னை சர்வகலாசாலை மிக மிக அருமையாக உண்மையான தகுதியும் திறமையும் உள்ள அறிஞர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்குவதாலேயே, அது அளிக்கும் டாக்டர் பட்டத்துக்குச் சிறப்பும் பெரு மதிப்பும் இருக்கிறது. ஆனாலும் அது வழங்கிய டாக்டர் பட்டத்துக்குள் தமிழுக்கு அளித்த இந்த டாக்டர் பட்டங்கள் மூலமாகச் சென்னை சர்வகலாசாலை தன்னுடைய சிறப்பை மேலும் உயர்த்திக் கொண்டது என்றால் சிறிதும் மிகையாகாது.

சொல்லின் செல்வர் டாக்டரானார்



1. சென்னை சர்வகலாசாலையின் பல்வேறு துறைகளில் பணியாற்றும் பேராசிரியர்கள், இதுவரை தாங்கள் கையாண்டு வந்த சம்பிரதாயத்துக்கு மாறாக, தூய தமிழிலேயே பேசி டாக்டர் சேதுப்பிள்ளையைப் பாராட்டியதுடன் தங்கள் சார்பாகப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியார் மூலமாக வெள்ளி அசோகஸ்தூபியை வழங்கினார்கள்.

2. தமிழ்நாட்டு மரபுக்கு ஏற்ப டாக்டர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தார்கள்.

3. திரு அழ. வள்ளியப்பா வாழ்த்துரை வாசிக்கிறார்.

4. தலைவர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையுரை நிகழ்த்துகிறார். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அழைப்புக் கிணங்க, சொல்லின் செல்வரைப் பாராட்டத் திரளாக வந்திருந்த கூட்டத்தில் ஒரு சிறு பகுதி.





போட்டோ: விச்

பாதி விலைக்கும் குறைவு

15 நாட்களுக்கு மட்டும்

எல்லாக் கெடிகாரங்களும் புகழ் பெற்ற தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டவை

பத்து வருஷங்களுக்கு உத்தரவாதம்


இலவசம் - 3 கைக் கெடிகாரங்கள் ஒரே சமயத்தில் வாங்குபவர்களுக்கு ஒரு கைக் கெடிகாரமும், இரண்டு வாங்குவோருக்கு ஒரு பாக்கெட் கெடிகாரமும், ஒன்று மட்டும் வாங்கினால் ஒரு பவுண்டன் பேனாவும் இலவசம்.




பாக்கெட் கெடிகாரம்	~~26/-~~ 13/-
ரேடியம் பாக்கெட் கெடிகாரம்	~~30/-~~ 15/-
ஜெர்மனி டைம்பீஸ்	~~30/-~~ 15/-
உயர்ரக அலாரம்	~~34/-~~ 17/-



21 ஜு. வாட்டர்புரூப் குரோம்	~~80/-~~ 39/-
21 ஜு. ,, ரோல்டு கோல்டு	~~86/-~~ 42/-
15 ஜுவல்ஸ் வாட்டர் புரூப்	~~75/-~~ 38/-



21 ஜு. வாட்டர்புரூப் குரோம்	~~88/-~~ 42/-
21 ஜு. ,, ரோல்டு கோல்டு	~~95/-~~ 45/-
17 ஜுவல்ஸ் வாட்டர் புரூப்	~~75/-~~ 37/-



15 ஜு. ரோல்டு கோல்டு	~~75/-~~ 35/-
15 ஜு. ,, 10 மைக்ரோன்ஸ்	~~276/-~~ 138/-

PIONEER WATCH CO

POST BOX No. 11428 - CALCUTTA-6

உங்கள் நரம்புகள்!

வலுவுள்ளதாக உறுதியுடன் இருக்க வேண்டும் — அதுவும் ஓய்வில்லாத கவலையும் நிறைந்த தற்கால வாழ்க்கையில்

அஸ்வான்

நீண்டகாலமாய் மனோபலமும் தேக திடனும் வியர்த்தமாகியிருந்தாலும் ஈடு கொடுத்து போஷாக்கு அளிக்கக்கூடிய ஒரு உயர்ந்த டானிக்

இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள். எப்போதும் கைவசமிருப்பதாக வைத்திருங்கள்



சிறியோர்

•

முதியோர்

•

நோயாளிகள்

யாவருக்கும்

உகந்தது

பெங்கால் கெமிகல்

கல்கத்தா : பம்பாய் : கான்பூர்


•

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:

ஆர் எல். கௌடர் & கோ.
59. பந்தர் தெரு — சென்னை

ஆந்திர ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:

சத்ய நாராயண பார்மஸி
குமி தெரு. விஜயவாடா - 1 & விஜயநகரம்



"இன்றைக்கு உங்கள் மானேஜர் என்ன உதவி கேட்டார்?"

இடக்காக ஆரம்பித்தாள் காந்திமதி. தினம் தினம் தாமதத்துக்குக் காரணம் சொல்லி வந்ததால் இந்தக் கேள்வி உள்ளே நுழைந்த நெல்லையப்பனை எதிர்கொண்டழைத்தது. மனைவியின் குரலில் கொஞ்சல், கோபம் இருப்பது பழகிய காதுக்கு மட்டுமென்ன, பண்பட்ட உள்ளத்துக்கும் தெரியுந்தானே!

"உம், இதோ சொல்லுகிறேன். நீ எதற்கும் புறப்படத் தயாராக இருப்பாயா?"

கேள்விக்கு எதிர்க் கேள்வியே விடையாக வந்துவிட்டது. நெல்லையப்பன் அலுவலகத்தில் புதிய மானேஜர் வந்து மூன்றுவாரம் ஆகிறது. கணவன் மூன்று வாரமும் வீட்டுக்குத் தாமதமாக வந்தால், காந்திமதி கம்மா இருந்தால் அவள் பெண் ஜன்மமா? ஊருக்குப் புதிதான மானேஜருக்கு, நெல்லையப்பன் ஒருவனே துணை. வீட்டுக்குப் புதிய வேலையாள் வேண்டும்; பால்காரனை மாற்ற வேண்டும்; சலவைத் தொழிலாளி, விறகுக்கடை பற்றுவரவு..... அட குடும்பம் என்றால் எத்தனை சில்லறைத் தொல்லைக்குத் துணை நிற்பார்களோ, அத்தனை பேரையும் அறிமுகம் செய்து வைக்கும் கைங்கர்யம் எல்லாம் நெல்லையப்பனைச் சேர்ந்ததாகி விட்டன.

இலைபோட்டுக் கறிவகைகள்பரிமாறப்பட்டு, சூடான வெந்நீரும் வந்தது. மனசுக்குள் கிடந்த கோபத்தை அடக்கிக்கொண்டு சாதம் பரிமாறினாள் காந்திமதி. அவள் முகமே சொல்லி விட்டது பூகம்பத்தின் முன்னோட்டமாக. சாப்பிடும்போதே மெதுவாக விஷயத்தைச் சொன்னான்.

"அவர் மனைவிக்குப் பிரசவ நேரம். பெண் துணை நீதான். வேலைக்காரி தவிர, பேருக்கு ஒரு கிழட்டு அத்தையம்மா இருக்கிறாள். உன்னை அனுப்புவதாகச் சொன்னேன். நம்முடைய நர்ஸ் வேதம்மாவை அழைத்து வருவதாகவும் சொல்லியிருக்கிறேன்."

காந்திமதிக்கு வந்த கோபம் தணிந்தது. பிறருக்கு உதவிமட்டுமல்ல, பேறு காலத்தில் பெண்ணுக்குத் துணை இருப்பதை அவள் பாக்கியமாக நினைத்தாள்.

"அவர் உங்கள் ஆபீஸ் மானேஜராக இல்லாவிட்டாலும், இந்த உதவி செய்ய வேண்டியதுதான். கைராசி உள்ளவள் வேதம்மாள்.....அது சரி, உங்கள் மானேஜர் இந்த இக்கட்டான நிலையில் எவ்வாறு மாற்றலாகி வந்தார்? மாதமான மனைவியை ஊரில் விட்டு வந்திருக்கலாமே?"

"இது என்ன காலம்? விமானத்திலும்,பேறு நடக்கிற காலம். நீ என்னமோ முந்நூறு மைல் பிரயாணத்தைப் பெரிதுபடுத்துகிறாய். நீ புறப்படத் தயாராக இரு."

"அது சரி. எத்தனாவது பிரசவம்?"

"இது தலைப் பிரசவம்."

காந்திமதிக்கு ஒரே ஆச்சரியம். மானேஜரின் வயசைக் கேட்கவும் அவளுக்கு வெட்கம். இருந்தாலும் அவர் குழந்தை குட்டி இல்லாதவராக இருக்கலாம்.

நெல்லையப்பன் சட்டையை மாட்டிக் கொண்டு நகர்ந்தான். திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்த தன் தாயாரை எழுப்பி, "அம்மா, இவருடைய மானேஜர் சம்சாரத்துக்குப் பிரசவ சமயம். பெண் துணை வேண்டுமாம். நானும் அவரும் போகிறோம். வீட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள். நானும் அவரும் காலையில் வந்து விடுகிறோம்" என்று கூறிப் புறப்பட்டாள் காந்திமதி.

மானேஜர் வீட்டுக்குள் நுழைந்ததும் அவருக்கு நாற்பது வயதிருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டாள் காந்திமதி. உள்ளே அறைக்குள் முனகிக்கொண்டிருந்த பெண்ணைப் பார்த்தாள்! காந்திமதியின் மனசிலே புதிர் பின்னிக் கொண்டது.

“வாருங்கள் அம்மா. நீங்கள்தான் ஆறுதல் சொல்ல வேண்டும் எனக்கு.”

“ஒரு கவலையும் வராது. முருகன் துணை செய்வான். பிறப்பது ஆண் குழந்தை” என்று காந்திமதி சம்பிரதாயச் சிரிப்புச் சிரித்தாள். வேதனைக்குள் குமைந்த தாயுள்ளத்திலும் உவகை பூத்தது.

“உங்கள் வாக்குப் பலிக்க வேண்டும். நர்ஸ் வந்துவிட்டாளா? வேலைக்காரப் பொன்னியும் சொன்னாள், யாரோ வேதம்மா என்று. அவள்தான் இந்த ஊரில் கெட்டிக்காரியாம்.”

“கவலையே வேண்டாம். அந்தம்மாள் பார்க்கும் கேஸ்கள் அத்தனையும் வெற்றி. நூற்றுக்குத் தொண்ணூறு ஆண் குழந்தைகள்.”

வேதனையால் மேலே பேச முடியாது துவண்ட நாரைப் போல அவள் சாய்ந்திருந்தாள். அவள் பெயர் என்னவோ? அவளுக்குத் துணையாக யாரோ ஒரு விதவை அம்மாள் நடமாடிக் கொண்டிருந்தாள்.

“அந்த அம்மாள் உங்களுக்கு உறவா?”

“ஆமாம், என் உறவினர். அத்தை முறை.”

கேட்க நினைத்த கேள்வியைக் காந்திமதி அடக்கிக் கொண்டாள். அவளுடைய தாய் தந்தை, அக்கா தங்கை, அல்லது மானேஜரின் உறவுக்காரர்கள் யாருமே இல்லை. திடீரென்று அயலூருக்கு மாற்றல் ஏற்பட்டதால் யாரும் துணைக்கு வராதிருக்கலாம். என்ன இருந்தாலும் பெற்ற தாய் வராதிருக்கலாமா?

“இன்னும் நர்ஸைக் காணவில்லையே, அம்மா. உங்கள் பெயர்?”

“என் பெயர் காந்திமதி.”

“அப்படியா? என் பெயர் கனகம்!” என்றாள் அவள் முனகிய குரலில்.

“வந்துவிடுவாங்க நர்ஸ் வேதம்மா” என்று கூறிய காந்திமதி பிறகு அத்தையம்மாளிடம் சென்று “வெந்நீர் இருக்கிறதா, காப்பிக்குப் பால், மற்றும் உபகரணங்கள் இருக்கின்றனவா?” என்று கேட்டுக் கொண்டாள்.

சமையலறைக்கு வெந்நீர் எடுக்கப் போன பாக்குக் கடிக்கும் நேரத்தில் அத்தையம்மாள் எவ்வளவு சுருக்கமாகச் சொல்ல முடியுமோ, அவ்வளவும் சொல்லி விட்டாள். கனகம் இரண்டாந்தாரமாய் வாழ்க்கைப்பட்டவள். இதுமுதல் பிரசவம். தாய் தந்தையைப் பறிகொடுத்து அநாதையாகப் போய் ஏழையாக இருந்தவள். தன்னுடைய தாய் மாமன் வீட்டிலே கொடுமையில் வளர்ந்து. மாமன் கை நிறையத் தனக்குப் பணம் வாங்கிக் கொண்டு, கனகத்தைத் தள்ளி விட்டான். ஆறு வருஷங்களுக்குப் பின் இதுதான் முதல் குழந்தை. வெந்நீர் கொதிக்கும் நேரத்துக்குள் இத்தனையும் காந்திமதிக்குத் தெரிந்து விட்டன. அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ள செய்திப் புள்ளிகளை இணைத்து, கனகத்தின் வாழ்க்கைக் கோலத்தை மனத்தில் போட்டு முடித்தாள் காந்திமதி.

“ஆஸ்பத்திரிக்கே போக வேண்டியது வருமோ?” என்று வினவினாள் கனகம்.

“சொன்னால் சொன்னபடி நர்ஸ் வேதம்மா வந்துவிடுவாள். ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும் அடுத்த கேஸ் பார்க்கப் போக மாட்டாள்” என்றாள் காந்திமதி.

“அப்படியா? ஆஸ்பத்திரிக்குப் போக என் மனசு இடம் கொடுக்கவில்லை.”

“இந்த நாளில் ஆஸ்பத்திரிதானே சகல வசதியும், உள்ள இடம்? ஆபத்து இல்லாத இடமும் அதுதான்!” என்றாள் காந்திமதி.

வேதனைக்குள் குமைந்த கனகம் தன்னுடைய மனசை யாரிடம் சொல்லுகிறோம், ஏன் சொல்லுகிறோம் என்ற உணர்ச்சியின்றிச் சொல்லி விட்டாள். “அங்கே பிரசவமானால் ‘அவர்கள்’ பார்க்க வருவார்கள். அப்போது பலரும் என்னைப் பார்த்துப் பலபடியாகப் பேசுவார்கள்.”

அட மனமே! தான் இரண்டாந்தாரமாய் வாழ்க்கைப்பட்டது பெருமை; அதைப் பிறர் பேசுவது தவறு. தன் வயசையும், கணவன் வயசையும் சுட்டிப் பலர் பேசுவார்கள் என்ற காரணத்தினால் ஆஸ்பத்திரிக்குப் போகவில்லை. காந்திமதிக்குச் சிரிப்பு வந்தாலும் அடக்கிக் கொண்டாள். என்றோ ஒருவர் பிரசவ ஆஸ்பத்திரிக்குள் நாலாம் நம்பர் கட்டிலைக் காண வந்தபோது ‘இது உங்கள் மகளா, மருமகளா? என்று கேட்டாளாம் நர்ஸ். இரண்டாந்தாரம் என்று சொல்ல வெட்கப்பட்ட காட்சியை— காந்திமதி மனத்துக்குள் எண்ணிப் பார்த்துக் கொண்டாள். கனகமும் இதே காரணத்தால் மன உளைச்சல் படலாம்.

மணி பத்தடித்துப் பத்து நிமிஷம். வாசலில் குதிரை வண்டி வந்து நின்றது. ஜன்னல் வழியாகப் பார்த்தாள். வெண்தாமரைபோல, நர்ஸ் வேதம்மா இறங்கிக் கொண்டிருந்தாள். நெல்லையப்பன் “வாருங்கள்” என்று வரவேற்றான்.

“இவர்கள் சம்சாரந்தான்...” என்று அறிமுகம் செய்ததைக் காதில் வாங்காமலே, ‘நல்லபடியாக நடக்கும்’ என்று வீட்டுக்குள் போனாள் நர்ஸ். அறை சுத்தமாகவும் காற்றோட்டமாகவும் இருந்தது. தனக்கெனப் போடப்பட்டிருந்த நாற்காலியில் அவள் அமரவில்லை. நோயாளியின் அருகில் போய் அன்பாகத் தடவிக் கொடுத்தாள். நாடி பார்த்தாள்.

“என்ன நீங்கள் சிரிக்கவில்லை?” என்று நோயாளியைக் கேட்டாள். கனகம் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு சிரிக்க முயன்றாள்.

“நான் கையைப் பிடித்ததும், எந்தப் பெண்ணும் சிரிப்பது வழக்கம். அதற்காகச் சொன்னேன். ‘உங்கள் பெயர்...” என்று வினவினாள் வேதம்மாள்.

“என் பெயர் கனகம்.”

“பிறக்கப் போகிறது தங்கக் கட்டி. உலகத்தில் இதற்கு முன்னும், இதற்கு அப்பாலும் இன்பப்படுகிறவர் இருக்கிறார்கள். நீ மட்டும் இத்தனை வேதனையும் படுவதாக எண்ண வேண்டாம். உன்னைப் போல எல்லாச் சகோதரிகளும் இதே இன்பத்தை....”

கனகத்துக்குச் சிரிப்பு உதட்டைப் பொத்துக் கொண்டு வந்தது. பொல்லாத கைகாரி நர்ஸ் வேதம்மா. அழுது வடியும் கண்ணீரில் ஆனந்தக் கண்ணீரும் ஊற்றெடுத்தது. ஏதோ ஊசி மருந்து, மாத்திரை...

கனகம்மாள் தாயானாள்!

அத்தையம்மா ஓடோடிப்போய், "பெண் பிறந்திருக்கிறது" என்று அடுத்த அறையில் சொன்ஞள். மானேஜர் கண்களில் ஒளி வந்தது.

உதட்டில் புன்னகை; மனத்திலே மகிழ்ச்சி.

குழந்தையின் அழுகுரல் கேட்டதும், அவர் மனசிலே குழந்தையையும், அதே சமயம் கனகத்தையும் பார்க்கும் ஆவல் கொப்புளித்தது. நர்ஸ் அம்மா ஏதேதோ ஏவல்கள் சொல்லிக் குழந்தையைத் தகப்பனிடம் காட்டுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள்.

மணி இரவு பதினென்றரைக்கு மேலாகி விட்டது. அப்போது குழந்தையைக் கையில் ஏந்திக் கொண்டு அடுத்த அறைக்குள் வந்தாள் நர்சம்மா. ஆசை தவழும் கண்களோடு மானேஜர் பார்த்தார். நல்ல சதைப் பிடிப்பு. தலை ரோமம் கூட வளைவுச் சுருள்கள்.

"பாருங்கள், பெண் ரொம்ப அதிர்ஷ்டமுள்ளது" என்று சொல்லிப் பழகிய வார்த்தையை உச்சரித்துக் கொண்டே வந்தாள் வேதம்மா.

"ஆமாம் எல்லாம் உங்கள் கிருபை" மானேஜரின் பார்வை முழுதும் அந்தப் பச்சிளங் குழந்தையின்மீது இருந்தது.

நெல்லையப்பன், "வேதம்மா நல்ல கைராசியுள்ளவங்க; பார்த்தீர்களா?" என்று புகழ்மாலை சூட்டிக் கொண்டிருந்தான்வேதம்மாளுக்கு.

"குழந்தையைக் கையில் வாங்கிக் கொள்ளுகிறீர்களா?" என்று கேட்டாள் வேதம்மா.

தொடக் கூசியவர் போலப் பயந்து அசட்டுத்தனமாகச் சிரித்தார். மறுக்கவும் முடியாமல் வாங்கவும் முடியாமல் தவித்தார்.

"ஹூம்! ஆண்பிள்ளைகளுக்கு எடுக்க முடியாது" என்று காந்திமதியம்மாள் கையிலே கொடுத்து விட்டு, நாற்காலியில் வந்து அமர்ந்தாள். மானேஜர் தமது அறைக்குள் போய்ப் பணமும் வெள்ளித் தட்டிலே வெற்றிலைப் பாக்கும் கல்கண்டும் எடுத்து வந்தார்.

"என்ன நெல்லையப்பன், இப்படி வாருங்கள்" என்றுஅழைத்து பீஸ் விஷயமாக அவரை மெதுவாகக் கேட்டார்.

"கொடுங்கள். இருபத்தைந்து ரூபாய் வரையில் வாங்குவது உண்டு. கொடுத்ததை அவர்கள் வாங்கிக் கொள்வார்கள்."

"ஐம்பது ரூபாய் வைத்திருக்கிறேன். இன்னும் பத்து தினங்கள் பார்த்துவர வேண்டும். அப்போது வேறு பணம் கொடுக்கிறேன்."

"ஆகா! நன்ருய்ச் சொன்னீர்கள்."


இருவரும் பேசிக்கொள்வது என்னவென்று அனுபவம் நிறைந்த நர்ஸ் வேதம்மாவுக்குத் தெரியும். அவள் களைப்பின் மிகுதியால் மட்டுமின்றி ஏதோ சிந்தனையில் வேறு ஆழ்ந்திருந்தாள்.

தட்டிலே பழம், பாக்கு வெற்றிலை கல்கண்டு, பத்துரூபாய் நோட்டு ஐந்து இவற்ருேடு மிகவும் பயபக்தியுடன், "எடுத்துக் கொள்ளுங்கள்" என்று தெய்வத்தின் முன் வரும் பக்தனைப்போல் வந்தார். நர்ஸ் வேதம்மாள் நன்றியுடன் வாங்கியபோது மானேஜரின் கண்களைப் பார்த்தாள்.

அந்தக் கண்கள்.....!

தெரியுமா உங்களுக்கு?

நூறு ஆண்டுகளுக்கு முன் நீரில் மூழ்கிச் செல்லவும் ஆகாயத்தில் பறக்கவும் சக்தியற்றிருந்த மனிதர்கள் இன்று நீர்மூழ்கிக் கப்பல்களிலும் விமானங்களிலும் சென்று இயற்கை நியதியை வென்றிருக்கிருர்கள். மின்சாரம், மோட்டார், வெள்ளித்திரை, ரேடியோ, டெலிபோன், முதலிய அற்புதங்கள் சென்ற நூறு ஆண்டுகளுக்குள் கண்டுபிடிக்கப் பட்டவைதான். மேகங்களை வென்று நினைத்த இடத்தில் மழை பெய்யும்படி செய்யும் முயற்சியில்கூட ஆராய்ச்சி நிபுணர்கள் வெற்றி பெற்று வருகிருர்கள். இவ்விதமாக நாளுக்கு நாள் புதிய அற்புதங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.



மந்திரக் கம்பளத்தில் யாரோ பறந்து சென்றதாக அராபியக் கதையில் காண்கிறேம். பறக்கும் தட்டுகள் பார்வையில் தென்பட்டதாக அடிக்கடி பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இதோ இந்தப் படத்தைப் பாருங்கள்! மந்திரக் கம்பளத்தைப் போலவோ, பறக்கும் தட்டுகளைப் போலவோ இது கட்டுக் கதையல்ல; இது உண்மையிலேயே ஒரு பறக்கும் மேடை! இது இப்போது பூமியிலிருந்து சுமார் பத்து அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறது. இதை ஓர் அமெரிக்க நிபுணர் உற்பத்தி செய்துள்ளார். இதில் நிற்கும் விமானியின் பாதுகாப்புக்காகச் சுற்றிப் பலமான கம்பிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேடைக்குக் கீழ்ப்புறத்தில் கண்ணுக்குத் தெரியாமல் விசிறி வேலை செய்கிறது. இதில் உள்ள யந்திரங்கள் சாதாரண விமானங்களில் உள்ள யந்திரங்களைப் போல் சிக்கலானவை அல்ல. விமானி கைப்பிடிச் சக்கரத்தைச் சுற்றித் தன் இஷ்டப்படி பறக்கும் மேடையைத் திருப்பலாம். இது இன்னும் பரிசோதனைக் கட்டத்திலேயே இருக்கிறது. பரிசோதனைகள் முடிந்த பின் இது பொதுமக்களின் உபயோகத்துக்கு வரலாம். மோட்டார் வைத்துக்கொள்ள முடியாதவர்கள் சைக்கிள்களை உபயோகிப்பது போல், விமானங்களை வைத்துப் பராமரிக்க முடியாதவர்கள், இந்தப் பறக்கும் மேடையை வைத்துக் கொள்ளலாம். இந்த அதிசய மேடையை உபயோகிப்போர் புழுதி, ரஸ்தாப் போக்குவரத்து விதிகள் முதலிய தொல்லைகளுக்கு உட்பட வேண்டியதில்லை அல்லவா?

ஒரு கணம் அவள் உடம்பிலே உச்சி முதல் உள்ளங்கால் வரையில் ரத்தம் துள்ளிப் பாய்ந்தது. அவள் கரங்கள் நடுங்கின. மானேஜரும் அவளை உற்றுப் பார்த்தார். நெல்லையப்பன் ஒன்றும் புரியாமல் 'என்ன சார்?' என்றான். மறுகணம் நர்ஸ் வேதம்மா, ''பணத்தையும் வெற்றிலையையும் வைத்துக் கொள்ளுங்கள்!'' என்று கூறித் தட்டை மானேஜர் கையிலேயே கொடுத்தாள்.

மானேஜர் உடல் பதறிற்று; நாக்கு தழ தழத்தது. அவர் காலைத் தொட்டுக் கண்ணிலே ஒற்றிக் கொண்டாள் வேதம்மா.

''நான் கொடுத்து வைத்த பாக்கியசாலி. என்னைத் தெரிகிறதா?''

குழந்தை போல அடக்க முடியாமல், ''மோகனம்,....என்னை மன்னித்துவிடு. நீ..... நீ...நீ...'' என்றார். அவர் வாய் குழறியது.

''நான் பாக்கியசாலி. விடை கொடுங்கள். கணவரும் குழந்தையும் சௌக்கியம். நான் பத்து தினங்களல்ல...என்றைக்கும் வந்து வைத்தியம் செய்வேன். விடை கொடுங்கள்.''

அவள் விசுக்கெனப் போய் விட்டாள். வெளியே நின்ற குதிரை வண்டியில் சாமானைக் கொண்டுவைத்த நெல்லையப்பன் யந்திரம் போலப் பின்னால் போனான். அவனுக்குப் பொறி தட்டிப் போயிருந்தது.

''பணத்தை எடுத்துக் கொள்ளவில்லையே..''

''வேண்டாம். நீங்கள் எனக்குப் பேருதவி செய்தீர்கள். என் வாழ்நாளில் மறக்கவே மாட்டேன்.''

''எனக்கு ஒன்றும் புரியவில்லையே?''

''என்னை இக்கதிக்கு ஆளாக்கி விட்ட பெருமை உங்கள் மானேஜரைச் சார்ந்தது. இல்லாவிட்டால் எல்லோரையும் போலக் குடும்பம், கஷ்டம் என்று இருப்பேன். உலகத்துக்கு உதவு என்று மறைமுகமான உதவி செய்தார்கள், அவர்கள்'' என்றாள் வேதம்மா.

''உம்!''

''உள்ளே போய்க் கேளுங்கள். நானேக்கு நான் வரலாம் என்றால், அழைத்தால் வருவேன். இல்லாவிட்டால் வரமாட்டேன்....''

நெல்லையப்பன் நகரும் வண்டியைக் கண் இமைக்காமல் பார்த்தபோது, தேம்பியழுது கண்ணீரைத் துடைத்துக் கொண்டு போகும் வேதம்மாவைக் கண்டான். நாற்காலியில் கல்லெறிந்துத் தட்டின் முன் சோர்வுற்றுக் கலங்கிய மானேஜரிடம் வந்து, 'எதற்காக வருத்தம்? விட்டுத் தள்ளுங்கள்' என்றான்.

''மோகனா ஏதாவது சொன்னாளா?''

''ஒன்றும் சொல்லவில்லை. உங்களால் உலகத்துக்கு உபகாரியாக இருப்பதில் அவர்களுக்கு மிக்க பெருமையாம். அதற்கு நன்றியைக் கூறுங்கள் என்றார்கள்.''

''ஓகோ. எத்தனை வருடங்களாக இந்த ஊரில் இருக்கிறாள்?''

''ஏழெட்டு ஆண்டுகளாக. ஆரம்பத்தில் கஷ்ட ஜீவனம். இப்போது வீடு வாசல்—வந்ததே குதிரை வண்டி இவை யாவும் சொந்தம். நல்ல கைராசி. பணம் குவிகிறது.''

''அப்படியா? இந்தப் பாவி கொடுத்து வைக்காதவன்.''

''என்ன சொன்னீர்கள்?''

''மோகனா என் முதல் தாரம். அவள் என் இரண்டாந்தாரக் கணத்துக்கு நர்ஸாக வருவாள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.''

''அதற்காக மிகவும் பெருமைப்பட்டார்கள் வேதம்மா!''

''அத்தனையும் எனக்கு நஞ்சாக இருக்கிறது. அவள் என்னை மணந்து, ஆறும்மாதம் பள்ளியில் படிக்க ஆரம்பித்தாள். நான் தடுத்தேன். கெஞ்சினாள். என் சொல்லை மீறிப் படிக்கப் போனதால் மாமனார் வீட்டிலேயே நிறுத்தி விட்டேன். திரும்பியும் பார்க்கவில்லை. என் மாமனார், மற்ற உற்றார் உறவினர் கெஞ்சினார்கள். ஒரு வருஷம் அவள் படிப்பை விட்டு என் வீட்டோடு வந்தும் வைராக்கியமாக இருந்தேன். அன்பில்லாதவன் வீட்டில் எப்படி அவள் வாழ முடியும்? அவள் போனவள் போனவள்தான். நானும் ஆறு ஆண்டுகள் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தேன். மோகனத்தை மறந்துவிட்டேன். வயதும், முதல் தாரத்தைத் தள்ளி வைத்தவன் என்ற காரணங்களும் சேர்ந்து ஏழையான கனகத்தை மணக்கும்படி செய்தன.''

''ஆமாம், வேதம்மா மோகனமாக இருந்த போது படிப்பைத் தடைசெய்தீர்களே, ஏன்?''

''நான், எஸ்.எஸ்.எல்.ஸி. முடித்து உத்தியோகம் பார்க்கிறேன். அவள் பெரியமனுஷி ஆவதற்கு முன்பே எஸ்.எஸ்.எல்.ஸி. தேறி விட்டாள். என்னைவிட அதிகமாக இண்டர் படிக்க ஆரம்பித்தது என் மனசுக்குப் பிடிக்கவில்லை. அவமானமாக நினைத்தேன்.'' —

"சரி, மனசை அலட்டிக் கொள்ளாதீர்கள். உங்களை இன்னார் என்று அறிந்ததும் காலைத் தொட்டு வணங்கி விட்டார்களே!"

"அதைத்தான் என்னால் கொஞ்சமும் தாங்க முடியவில்லை."

"தமிழ்ப் பண்பு அப்படி மெய்மறக்கச் செய்துவிட்டது" என்றான் நெல்லையப்பன்.

மறுகணம் மானேஜர் அங்குமிங்கும் நடந்த படி ஏதோ யோசனையில் ஆழ்ந்தார். அடுத்த அறையிலுள்ளவர்கள், மெதுவாக ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

"நர்சம்மாவுக்குப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டீர்களா? மிக்சர் மருந்து அனுப்பு வதாகச் சொல்லவில்லையே!" என்றுகாந்திமதி நெல்லையப்பனைக் குறி வைத்துக் கேட்டாள்.

"நான் போய் வாங்கி வருகிறேன். சைக்கிளில் போகிறேன்."

"மிஸ்டர் நெல்லையப்பன்! வேண்டாம். வேறு டாக்டரிடம் வாங்கி வாருங்கள். இது மட்டுமல்ல, நான் இன்று இரவே இவ்வூரை விட்டுப் போகிறேன். மாற்றல் உத்தரவு எங்காவது வாங்குவேன். கனகத்தையும் குழந்தையையும் ஒருமாதத்தில் நீங்கள் அனுப் பிவைக்க வேண்டும். என்னால் இந்த ஊரில் அரைமணி இருக்க முடியாது." மானேஜர் புறப்பட்டு விட்டார். கனகம் புழுவாய்த் துடித்தாள். கெஞ்சினாள்.

ஒருமாதம் சென்ற பின்னர், குழந்தையும் தாயும் புறப்பட்டார்கள். வழி வனுப்ப நர்ஸ் வேதம்மா வந்ததுதான் ஆச்சரியம்!

"கனகம், போய் வா. ஆயிரம் ஆயிரம் பிரசவங்கள் பார்த்திருக்கிறேன். நான் செய்த பாக்கியத்தால் என் குழந்தையை நானே பார்க்கும் பாக்கியம் கிடைத்தது."

"அக்கா...." என்றாள் கனகம்.

"சே, தவறு! நான் நர்ஸ். என்றுமே தாய்மை அடையமுடியாத தாயுள்ளம் பெற்ற வேதம்மா நான். உன் அக்கா மோகனம் செத்துப் பதின்மூன்று வருடமாயிற்று!"

"நான் என்றும் உங்கள் தங்கை. நீங்கள் செய்த உதவியை என்றும்மறக்கமாட்டேன்."

"அடுத்த பிரசவத்துக்கும் நீ இங்கு வந்து விடு. அவரை அழைத்து வராதே...."

இருவருடைய கலங்கிய கண்களும் சந்தித் தன. கண்ணீர்த் துளிகள் சிந்த, குழந்தையை முத்தமிட்டபடியே கனகத்தின் கையில் கொடுத்தாள் நர்ஸ் வேதம்மா.

"இவனுக்கு வேதம் என்று பெயர்..."

"வேண்டாம். இறந்தவள் பெயரை வேணு மானால் கூப்பிடு. மோகனம் என்று சொல்."

ரயில் இரு மனங்களையும் பிரித்துக் கொண்டே நகர்ந்தது.

காந்திமதி, "உங்களைப்போல யாருமே இட மனத்துடன் இருக்க முடியாது" என்று வேதம்மாளிடம் மனம் விட்டுச் சொன்னாள்.

"இதை எனக்குத் தந்தவர் கனகத்தின் கணவர். நான் தாயாகிவிட்ட பெண்களுக்குப் பணிபுரியும் சேவகி. அவ்வளவே. வாருங்கள் என் வண்டியிலேயே போகலாம்."

காந்திமதியும் அவளையடுத்து நெல்லையப்ப னும் நர்ஸ் அம்மாளுடன் வண்டியில் ஏறி னார்கள். தெய்வத்துடன் அமர்ந்த உணர்ச்சி அவர்கள் மனத்தில் நிறைந்தது.

களவும் காவலும்

ராஜி

கடகடவென்று கைவண்டி உருண்டு வரும் சப்தம் கேட்டுக் காளத்தி கன ஜரூராக எழுந்து நின்றான். குப்பையும் செத்தையும் நிறைத்து வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்த சாத்தப்பன் வண்டியை நிறுத்தி விட்டு, "அண்ணே, சௌக்கியமா?" என்று குசலம் விசாரித்தவாறே நெருங்கி வந்தான்.

"சௌக்கியத்துக்கு ஒரு குறையும் இல்லை. ஆனால் உத்தியோகத்துக்குத்தான் தலையை வலிக்கிறது!" என்று அலுத்தவாறே கூறிய காளத்தி வண்டியிலிருந்த குப்பை செத்தைகளை ஒன்று விடாமல் கிளறிப் பார்த்தான். பிறகு, "தம்பி! நீ போகலாம்" என்று அவனுக்கு விடை கொடுத்தான்.

காளத்தி அந்தப் பெரும் தொழிற்சாலையின் காவற்காரர்களில் ஒருவன். வேலைவிட்டு வெளியே போகிறவர்களையெல்லாம் சோதனை செய்து பார்த்து, அவர்கள் ஒரு பொருளும் கொண்டு போகவில்லை என்று மனத்தைச் சமாதானம் செய்து கொண்ட பின்னர் அவர்களை வெளியே அனுப்புவது அவன் அலுவல்களில் முக்கியமானது ஒன்று.

"அண்ணே, நீ என்ன சொல்கிறாய்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!" என்று கேட்டான் சாத்தப்பன் தயங்கியபடியே.

"என்ன சொல்கிறேன்? சுரைக்காய்க்கு உப்பில்லை என்று சொல்கிறேன். நீ பாட்டுக்கும் உன்னுடைய காரியத்தைப் பார்த்துக் கொண்டு போகிறாயா?" என்று உப்பாக வெடித்தான் காளத்தி.

"எதற்கு அண்ணே, என் மேலே கோபம்? நான் ஒன்றும் உனக்குத் தீங்கு இழைக்கவில்லையே!" என்று கேட்டான் சாத்தப்பன்.

"தம்பி, மன்னித்து விடு! என் கஷ்டம் எனக்கு. இன்றோடு என் உத்தியோகத்துக்குச் சீட்டுக் கிழித்து விட்டார்கள். அந்தத் தாபத்திலே உன்னோடு கடுமையாகப் பேசி விட்டேன்!" என்று தாழ்ந்து கொடுத்துப் பேசினான் காளத்தி.

"என்ன! உத்தியோகத்துக்குச் சீட்டுக் கொடுத்து விட்டார்களா?...."

"ஆமாம், தம்பி! ஆமாம். என் தலையிலே அப்படி எழுதியிருக்கிறது. குடும்பத்தை நினைத்தால் மனசு கதிகலங்குகிறது. உனக்குத் தெரியும், சின்னதும் பெரிதுமாக ஏழெட்டுக் குழந்தைகள். இந்த நாளிலே இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பார்த்தால் எப்படித்தான் வேலை கிடைக்க வயிறு வளர்க்கப் போகிறேனோ, தெரியவில்லை" என்று ஒரு கஷ்ட புராணமே பாடி விட்டான் காளத்தி.

"கவலைப்படாதே, அண்ணே! படைத்தவன் படியளக்காமற்போவானா? அது சரி, அண்ணே! திடுதிப்பென்று உன்னை இப்படி வேலையைவிட்டு நீக்க, நீ என்ன அண்ணே குற்றம் செய்தாய்?"

"நீதான் சொல்லேன், நான் என்ன குற்றம் செய்திருப்பேன் என்று! நானோ காவற்கார உத்தியோகம் பார்க்கிறேன். நம் தொழிற்சாலையில் தினம் ஏதாவது ஒரு பொருள் காணாமற் போகிறதாம்!"

"நல்லாச் சொன்னியே! அது எப்படிக் காணாமற் போகுமாம்? நீதான் துருவித் துருவிப் பார்க்கிறாயே!"

"கண்கொத்திப் பாம்பாட்டமாகக் காரியத்தில் கண்ணும் கருத்துமாயிருந்தும் கூடக் கெட்ட பெயர் வாங்க வேண்டியிருக்கிறது, பாரேன்!" என்றான் காளத்தி.

"ஆமாம், ஆமாம்! எந்தமாதிரி பொருள் காணாமற் போகிறதாம்?" என்று கேட்டான் சாத்தப்பன்.

"நம் தொழிற்சாலையில் எந்த மாதிரிப் பொருள் உற்பத்தி செய்கிறாங்க?"

"இந்த மாதிரிக் கைவண்டிதான்?"

"இதுதான் தினம் ஒன்று வீதம் காணாமற் போகிறதாம்!"

இதைக் காளத்தி கூறியபொழுது சாத்தப்பனின் முகம் பேயறைந்தாற் போல் மாறியது. "ஏன், அண்ணே! என்னைத் திருடன் என்கிறாயா?" என்று உதறல் எடுக்கக்கேட்டான்.

"நான் எங்கே சொன்னேன்? எனக்குத்தான் உன்மேல் முழுசாக நம்பிக்கை இருக்கிறதே! இருந்தாலும், தம்பி, நான் இன்றைக்கு வேலையை விட்டுப் போகிறேன். வேலையை விட்டுப் போகிறோமே என்ற கவலைகூட எனக்கு அவ்வளவு இல்லை; நம் வேலையில் சரியில்லை என்ற குற்றச்சாட்டோடு போகிறோமே என்றுதான் வருத்தமாயிருக்கிறது. இந்த வண்டி காணாமல் எப்படிப் போகிறது என்று தெரிந்தால், கொஞ்சம் மன நிம்மதியோடு போவேன்! உனக்குத் தெரிந்தால் சொல்லு, தம்பி!" என்றான் காளத்தி.

அவனது உருக்கமான பேச்சு சாத்தப்பனை மயக்கி விட்டது போலும்! "அண்ணே! என்னை மன்னித்துவிடு! தினம் ஒரு வண்டியாக இப்படிக்குப்பை செத்தையைப்போட்டுக் கொண்டு போகிறவன் நான்தான்!" என்றான்.




"அதுதானே கேட்டேன்! அந்தச் சந்தேகம் எனக்கு வெகு நாட்களாகவே உண்டு! மேலதிகாரிகள் என்னைக் கடிந்து கொள்வதற்கு முன்பாகவே, கண்டுபிடிக்க வேண்டும் என்று திட்டமிட்டேன். ஆண்டவன் கருணையிலே வெற்றியும் கண்டேன். 'படைத்தவன் படியளக்காமல் போவானா?' என்றாயே! உனக்குப் படிபடியாக மோர் அளக்கப் போகிறான், பார்!" என்று கூறிக் கழுத்தில் கையைக் கொடுத்துச் சாத்தப்பனைத் தள்ளினான் காளத்தி.


4—7-4

நீங்கள் செய்யும் தொழில் என்ன?

வியாபாரம் . . . தச்சுவேலை . . . எலக்டிரிஷியன் . . .
மெகானிக் . . . இஷ்டமான பொழுது போக்குத்தொழில்?

எதுவானாலும், இதுவரை விற்பனை செய்யப்படாததும், ஒவ்வொருவரும் வாங்கக்கூடிய விலையில், கச்சிதமான, சக்திநிறைந்த 'உல்ப் கப்' ¼" எலக்டிரிக் டிரில், உங்களுக்கு மிகவும் அத்தியாவசியம்.
முதன் முதலில் 'உல்ப் கப் டிரிலுடன்' தொடங்கி, உங்கள் தொழிற்சாலை முழுவதும், மின்சார சக்தியால் செலுத்தப்படும் ஆயுதங்களால் முன்நிறுப்பு செய்யுங்கள்.
இதுவரை கை ஆயுதங்களால் செய்யப்பட்டுவரும், துவாரமிடுதல், பாலிஷ் செய்தல், சம்ப அறுப்புபோன்ற வேலைகளிலுள்ள பிரயாசம், தாக்கம். இவைகளை 'உல்ப் கப்' ஏற்கொண்டு, உங்களுக்கு சௌகரியத்தை அளிக்கும். இலகுவாய் திருப்பக்கூடியதுமட்டுமன்றி எடையில் இலேசானதும் கூட. மிகவும் சுலபமாக வேலை செய்யலாம்.
சிரமமின்றி உங்களால் அதிகப்படியான வேலைகள் செய்யமுடியும்.





Wolf Cub

ராலிஸ் இன்டியா லிமிடெட்,
320, லிங்கச்செட்டித் தெரு, மதராஸ். பம்பாய் • கல்கத்தா • டெல்லி

மாலவல்லியின் தியாகம்







அத்தியாயம் 15

சிம்மவர்மனின் சதி

அவன் தன்னுடைய பெயர் பூதுகன் என்று கூறியதைக் கேட்டதும் தேனார்மொழியாள் அப்படித் திகைத்து நின்று விட்டதில் எவ்வித ஆச்சரியமும் அடைந்துவிடவில்லை. அவள் அவனைப் பற்றியும் ஒரளவு அறிந்து கொண்டிருக்கிறாள் என்பதைத்தான் அப்போது அவள் இருந்த நிலை விளக்கிக் காட்டியது. அவனை நேரில் அனேகர் பார்த்திராவிட்டாலும் தமிழகத்திலே தீவிர நாஸ்திகவாதியாகிய பூதுகனைப் பற்றி எவரும் கேள்விப் பட்டிருக்காமல் இருக்க முடியாது. அதுவும் சோழநாட்டில் பிறந்தவர்கள் யாரும் அவனைத் தெரிந்து கொள்ளாமலிருக்க முடியாது. இந்த நிலையில் தேனார்மொழியாள் அவனைப் பற்றி அறிந்து கொண்டிருந்ததில் வியப்பில்லையல்லவா?

பூதுகன் என்ற பெயரைக் கேட்டதும் தேனார்மொழியாள் திகைப்படைந்து போனதற்கு முக்கிய காரணம் அவனுடைய உருவம் தான். தீவிர நாஸ்திகவாதியாகிய பூதுகனைப் பற்றி அவள் நினைக்கும் போதெல்லாம் அவள் மனக்கண்முன் ஏதோ குரூரமான உருவம்தான் நிற்கும். ஆனால் இன்று அவனையே நேரில் பார்த்து விட்டதும் முக வசீகரம் நிறைந்த தெய்வீக புருஷன் போல்தான் அவன் காணப்பட்டான். அவன்தான் பூதுகன் என்று அறிந்ததும்

கி.ரா.கோபாலன்

அவளுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தை விட அத்தகைய நாஸ்திகவாதி தன்னை நாடி எதற்காக வந்திருக்க வேண்டும் என்ற ஆச்சரியம்தான் மேலும் அவள் மனத்தைக் குழப்பியது.

"தாங்கள்தானு அவர்? தங்களைச் சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சி.." என்கிற வார்த்தைகள் அவளை அறியாமலேயே அவள் உள்ளத்திலிருந்து வெளி வந்தன. அதைத் தொடர்ந்து. "தாங்கள் என்னை எதற்காக நாடி வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"பயப்படாதீர்கள். உங்களோடு நாஸ்திக வாதம் பேச நான் வரவில்லை. முக்கியமாக இது ஒரு பெண்ணைப் பற்றிய விஷயம்" என்ருன் பூதுகன்.

"பெண்ணைப் பற்றிய விஷயமா? யார் அந்தப் பெண்? என்ன விஷயம்?" என்று கேட்டாள் அவள் பதற்றத்தோடு.

பரத சாஸ்திரம் கற்றுக் கொண்டிருந்தாள். குழந்தைப் பருவத்திலிருந்தே மிக நன்ருக நாட்டியம் ஆடுவாள். நாட்டியத்துக்கு வேண்டிய இலட்சணம் பொருந்திய உடல் அமைப்பு. அதோடு நல்ல அழகி. கலையிலும் தேர்ச்சி பெற்றவள். அதிருக்கட்டும், அவளைப் பற்றி இங்கு பேசவேண்டிய காரணம் என்ன?" என்று கேட்டாள்.

"அந்த வைகைமாலையின் நாயகன் நான்—மாலவல்லி வைகைமாலைக்கு அந்தரங்கமான தோழி என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்ருன் பூதுகன்.

"அது தெரியாது. இருக்கலாம், அவர்கள் இருவரும் நெருங்கிய தோழியாக இருப்பது வரவேற்கத் தக்கது தான். சிறந்த நாட்டியக்காரி வைகைமாலை. அதைப் போலவே சிறந்த



"அலையூர் கக்கையின் பேத்தி மாலவல்லியைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவளைப் பற்றிப் பேசத்தான் உங்களை நாடி வந்தேன்" என்று சொன்னுன் பூதுகன்.

"அவளைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய அக்கறை உங்களுக்கு ஏற்பட்டதின் காரணம் என்ன?" என்று வியப்புடன் வினவினுள் அவள்.

"காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள வைகைமாலையைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்..."

"தெரியாமலென்ன? எனக்கு நன்ருகத் தெரியும். அவளுடைய சகோதரி சுதமதியும் நானும் தான் சதுர்வேதிமங்கலத்தில் இசைக்கலை பயின்ழேம். அப்பொழுது நான் வைகைமாலையோடு நெருங்கிப் பழகி யிருக்கிறேன். அவள்

பாடகி மாலவல்லி. உயர்தரமான இசையும் சிறந்த நாட்டியமும் சேர்ந்தால் இந்த உலகத்தில் தெய்வத்தையே எதிரே கொண்டு வந்து நிறுத்தி விடலாம்" என்ருள் தேனுமொழியாள்.

"நாட்டியத்தின் மூலமாகவும், சங்கீதத்தின் மூலமாகவும் எங்கோ இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் தெய்வங்களை யெல்லாம் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து நிறுத்துவதில் எனக்குச் சந்தோஷம்தான். ஆனல் தெய்வங்களை இழுத்துக் காட்டுவதை விட அழிந்துபோன சிறந்த சாம்ராஜ்யத்தை மறுபடியும் ஸ்தாபிக்கவைப்பது மிகவும் நல்லது என்பதுதான் எனது அபிப்பிராயம்—அதிருக்கட்டும், உங்களுக்கு மாலவல்லியைப் பற்றி ஏதேனும் தெரிந்தால் என்னிடம் சொல்லுங்கள்" என்ருன்.

"மாலவல்லியைப் பற்றி எதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்கள்? அதுதான் தெரியவில்லை. அவளைப் பற்றி நான் பச்சாத்தாபப் படுவதெல்லாம் இந்த இளம் வயதில் அவள் அறியாமையால் பௌத்த பிக்ஷுணிக் கோலம் பூண்டதுதான். முதலில் பௌத்த மதத்தில் பற்றுக் கொண்டு அதில் சேர்ந்த அவள், திடீரென்று பிக்ஷுணியாகி இவ்வூரில் தங்காமல் காவிரிப்பூம் பட்டினத்துக்குப் போய் விடுவாள் என்று நான் நினைக்கவில்லை. இனிய குரலும் இசை ஞானமும் பெற்றிருந்த அவளுக்கு அரச சபையில் நல்ல மதிப்பு இருந்தது. போகட்டும், அவள் காவிரிப்பூம்பட்டினம் வந்ததும், அங்கு வைகைமாலைக்குத் தோழியானதும் மிகுந்த திருப்தியையே அளிக்கின்றன..." என்றாள் தேனார்மொழியாள்.

"அப்படி நீங்கள் திருப்தி அடைவதற்கு இல்லாமலேயே போய் விட்டது. அவள் சப்டாதிவன புத்த சேதியத்தில் இருக்கும்போது இரவு வேளைகளில் ரகசியமாக வைகைமாலையின் வீட்டுக்கு வந்து அவளுடைய நாட்டியத்துக்கேற்பச் சில பண்கள் பாடிவிட்டுப் போவாள். ஆனால் திடீரென்று ஒரு நாள் அவள் அந்த விஹாரத்திலிருந்து எங்கேயோ மறைந்து விட்டாள்....." என்றான் பூதுகன் அமைதியாக.

பூதுகனின் வார்த்தையைக் கேட்டுச் சிறிது ஆச்சரியம் அடைந்த தேனார்மொழியாள், "அவள் பௌத்த விஹாரத்திலிருந்து மறைந்து விட்டாளா? ஏன்? என்ன காரணம்? அவள் எங்கே போயிருப்பாள்?" என்று படபடப்போடு கேட்டாள்.

"அவள் எங்கே போயிருப்பாளோ! ஆனால் அவள் கண் மறைவாகப் போன அன்றைய தினம் புத்த விஹாரத்தில் படு கோரமான கொலை யொன்று நடந்திருக்கிறது. எல்லோரும் அந்தக் கொலைக்கு மால



வல்லிதான் காரணமாக இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறார்கள்...'' என்றான்.

''நீங்கள் சொல்வதைக் கேட்டால் பெருத்த விபரீதமாக இருக்கிறதே? நாளுக்கு நாள் இந்தப் புத்த விஹாரங்களில் நடக்கும் அட்டூழியங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றனவே! கள்வர்கள், சூழ்ச்சிக்காரர்கள் எல்லோரும் புத்த சங்கத்தைச் சரணென்று அடைந்ததால் அல்லவா இவைகள் எல்லாம் ஏற்படுகின்றன? புத்த பெருமானின் வைராக்கிய சீலம் எங்கே? அன்பு நெறி, அறவழிகள் எங்கே? இந்தப் போதி சங்கங்களில் சேர்ந்த சிலரின் கொடிய நடத்தைகள் எங்கே?...அந்தப் புனிதமான சங்கங்களில் மிக வஞ்சகர்களும் கொலைபாதகர்களும் உன்னத சாம்ராஜ்யங்களையே கவிழ்க்கும் சூழ்ச்சி நிறைந்தவர்களுமான ரவிதாசன் போன்றவர்களுக்கு இடம் இருக்குமானால் அதைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?'' என்றாள் தேனார்மொழியாள் மிகவும் மனக்கிலேசம் அடைந்து விட்டவள் போல.

'ரவிதாசன்' என்ற பெயரை அவள் வாய்மூலமாகவே கேட்டதும் பூதுகன் சிறிது வியப்படைந்தான். இப்பொழுது தான் வந்த காரியத்துக்கு ஏதோ பலன் ஏற்பட்டது போல் அவனுக்குத் தோன்றியது.

''ரவிதாசனை உங்களுக்குத் தெரியுமா! உங்களுக்குத் தெரியாமல் எப்படி இருக்க முடியும்? அவன் இக் காஞ்சிமா நகரிலிருந்துதானே புத்தபிக்ஷு கோலத்தில் காவிரிப்பூம் பட்டினம் வந்தவன்? ரவிதாசனைப்பற்றித்தெரிந்த உங்களுக்கு இன்னொரு உண்மையைச் சொல்லப் போகிறேன். பூம்புகாரில் உள்ள புத்த சேதியத்தில் நீங்கள் சொல்லும் அந்த வஞ்சகனாகிய ரவிதாசன்தான் கொலை செய்யப்பட்டுக் கிடந்தான்...'' என்று கூறினான் பூதுகன்.

இதைக் கேட்டதும் அவள் திகைப்புற்றுப் பரபரப்போடு, ''ஒழிந்தானா பாவி. அவனைப்போல் அவனைச் சேர்ந்தவர்களும் ஒவ்வொருவராக ஒழிந்து தொலைந்தால் இந்த உலகம் பிழைக்கும்...'' என்றாள் அவள் ஏதோ சிறிது மன ஆறுதல் அடைந்தவள் போல.

''அவன் ஒழிந்த வரையில் சரிதான். ஆனால் அவன் ஒழிந்ததோடு ஆபத்து விட வில்லையே! அவனைக் கொலை செய்த பழி மாலவல்லியைப் போன்றவர்களின் தலையில் அல்லவா சுமரும் போலிருக்கிறது...?'' என்றான் பூதுகன்.

தேனார்மொழியாள் இதைக் கேட்டதும் ஆத்திரமும் கோபமும் அடைந்தவளாக, ''மாலவல்லியின் மீது எனக்குக் கோபம் உண்டு—ஏன், சிறிது பொறாமையும்கூட உண்டு. ஆனால் அவள் இத்தகைய கொடூரமான செயலைச் செய்திருக்க மாட்டாள் என்றுதான் நான் சொல்லுவேன். யார் சொன்னாலும் நான் நம்ப மாட்டேன். இதன் காரணமாக அவளுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுவதாக இருந்தாலும் அதிலிருந்து அவளை மீட்க நான் தயாராயிருக்கிறேன். இந்தச் சாம்ராஜ்யமே அவளுக்கு எதிராக நின்றாலும் அவளை மீட்டுவிட எனக்குத் தைரியம் உண்டு. சாமர்த்தியமும் உண்டு. ஆனால் இந்த மாலவல்லியின் வாழ்க்கையில் ஏதோ சில ரகசியங்கள் இருக்கின்றன என்றுதான் நினைக்கிறேன்'' என்றான். அவன் மேலும் தொடர்ந்து, ''நீங்கள் நினைப்பதுபோல் மாலவல்லியின் வாழ்க்கையில் சில ரகசியங்கள் உண்டு. ஆனால் அவை ஒன்றும் பிரமாதமானவையல்ல. இயற்கையாக இளம் உள்ளங்களில் ஏற்படும் செய்கைகள்தான் அவை. அவள் தகாத இடத்தில் மனத்தை வைத்துவிட்டாள். அதன் காரணமாகவேதான் அவள் பௌத்த பிக்ஷுணிக் கோலம் கொள்ள நேர்ந்தது என்பது என் அபிப்பிராயம்'' என்றாள்.

'' ஆசையும் மோகமும் யாரை விட்டன? ஆனால் இது ஒரு சாதாரணக் காதல் விவகாரமாய் இல்லாமல் பெரிய சாம்ராஜ்ய விவகாரமாக இருக்கும் போலிருக்கிறதே...?'' என்றான் பூதுகன், மெதுவாக அவள் மனத்தைக் கிளறி உண்மையை அறிந்து கொள்ள.

''பெரிய சாம்ராஜ்யத்தின் காவலர்களாக இருப்பவர்களின் காதல் விவகாரங்கள் எல்லாம் அப்படித்தானே இருக்கும்? எங்களைப் போன்ற பெண்கள் அழகில் ஊர்வசி, ரம்பையைத் தோற்கடித்தாலும் ராஜசபைக் கணிகையர்கள்தானே. என்போன்றவர்கள் கலைத் தேர்ச்சியாலும், அழகாலும் அரசரின் அன்பு பீடத்தில் அமர்ந்தாலும் அரசிக்குரிய பீடத்தில் அமர முடியாதல்லவா? ஆனால் ஒரு பெண்ணின் காதலுக்காக ஒரு சாம்ராஜ்யமே போரில் ஈடுபட்டு அழிந்து விடலாம். ஒரு பெண்ணின் காதல் காரணமாக ஒரு பெரிய சாம்ராஜ்யமே போரின் அபாயத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டு விடலாம்'' என்றாள்.

தேனார்மொழியாளின் வார்த்தையைக் கேட்டதும் பூதுகனின் மனத்தில் ஒரு எழுச்சி ஏற்பட்டது.

'' நான்கூட அப்படித்தான் நினைத்தேன். பூம்புகாரில் அவளைச் சந்திக்க வந்த ஒரு அழகான வாலிபனை நான் விசாரித்தபோது, அவன் கங்க



ஏப்ரல் 12 தமிழ் நாடெங்கும்..
விஜயாவின்
மாயாபஜார்
டைரக்ஷன் : K.V. ரெட்டி B.Sc. (HONS)
தயாரிப்பு
நாகிரெட்டி & சக்ரபாணி
ஸ்டூடியோ
வாஹினி

பாடியைச் சேர்ந்தவனென்றும் ஒரு சாதாரணப் போர்வீரன் என்றும் சொல்லிக் கொண்டான். ஆனால் அவன் வார்த்தைகளில் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அவன் பார்வையில் ஒரு அரசகுமாரனாகவோ அல்லது ஒரு பிரபுவாகவோ இருக்க வேண்டும் என்றுதான் நான் நினைத்தேன். அவனுடைய கம்பீரமான உருவத்தையும் அவன் சவாரி செய்யும் குதிரையையும் பார்த்தவர்கள் அவனை ஒரு சாதாரணப் போர்வீரன் என்று மதிக்க மாட்டார்கள்'' என்றான் பூதுகன்.

தேனார்மொழியாள் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே, ''பல்லவ சாம்ராஜ்யத்தில் பாடகியாக விளங்கிய மாலவல்லி பிக்ஷுணிக் கோலம் பூண்டதும் கங்க நாட்டு இளவரசரும் சாதாரணப் போர்க்கோலம் பூண்டு விட்டார் போலிருக்கிறது. காஞ்சியில் இந்தக் காதல் தொல்லையால் ஏற்பட்ட அபாயத்தைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்றுதான் பௌத்த பிக்ஷுணியாகிப் பூம்புகாரை அடைந்திருக்க வேண்டும் மாலவல்லி. அவள் பெரும் புத்தியுடன் தன்னால் இரு அரசாங்கங்களுக்குள்ளும் நட்புரிமை பாராட்டிக் கொண்டிருப்பவர்களுக்குள் மோதல் ஏற்படக்கூடாது என்பதற்காகத் தன் காதலைத் துறந்து துறவுக் கோலம் பூண்டு காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்திருக்க வேண்டும். அத்தகைய கோலம் பூண்டு அங்கு சென்றும்-வேறு தலைமறைவான இடத்துக்குச்சென்றும் அந்த வினை அவளை விடாமல் பின் தொடர்ந்தால் என்ன செய்வது?'' என்றான்.

''மாலவல்லிமிகுந்த தியாக சிந்தை உள்ளவளாகத்தான் இருந்தாள் என்பதை நானும் அறிந்து கொண்டேன். ஆனால் பெருத்த அபாயங்கள் ஏதேனும் தனக்கு ஏற்படலாம்; அல்லது வேறு சிலருக்கு ஏற்படலாம் என்று அறிந்திருந்தும் அவளால் தன் மனக் காதலைத் துறக்க முடியவில்லை என்றுதான் தெரிகிறது. புத்த பெருமானின் வைராக்கிய சீலம் எல்லோருக்குமே ஏற்பட்டு விடுமா? வைராக்கியமாக இருந்து விடலாம் என்று மனம் எண்ணலாம். உலக பந்தங்களை உதறி விட்டுவிடுவது போல் சீவர ஆடையுடுத்தி எங்கேனும் கிளம்பி விடலாம். ஆனால் தானாக வந்து ஒட்டும் உறவுகளை வைராக்கிய சித்தத்தோடு உதறி எறிவதுதான் மிகக் கடுமையான விரதம். பாவம், அவள் ஒரு பெண். அவள் மனம் இவ்வளவு பக்குவம் அடைந்திருக்க முடியுமா? எனக்கு இன்னொரு சந்தேகம். சமண மதத்தினனாக இருந்த ரவிதாசன் திடீரென்று பௌத்த துறவியாகி மாலவல்லி இருக்கும் புத்த விஹாரத்துக்கு வந்தது தான் சிறிது ஆச்சர்யம் அளிக்கிறது. அவன் மாலவல்லியிடம் மிகுந்த கண்காணிப்பாக இருந்தான் எனத் தெரிகிறது. அவளுக்கும் அவனுக்கும் ஏதன் காரணமாகவோ தொடர்பு இருக்குமோ எனச் சந்தேகிக்கிறேன்.....?'' என்றான்.

''உங்கள் சந்தேகம் சரிதான்—ரவிதாசன் மாலவல்லியைக் கவனிப்பதற்காகவேதான் புத்தபிக்ஷுக் கோலம் தாங்கிப் பூம்புகாருக்கு வந்திருக்கிறான். ரவிதாசன் சிம்மவர்மனின் தோழன். சிம்மவர்மனைப் பற்றியும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்....'' என்றாள்.

''சிம்மவர்மனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் பல்லவ மன்னனுக்கு ஒரு வகையில் சகோதரன் ஆக வேண்டும் இல்லையா...?'' என்றான்.

''ஆம். உங்களுக்குப் பல்லவ சாம்ராஜ்யத்தின் பாரம்பரியம் தெரியும் என்று நினைக்கிறேன். இந்த வம்சத்தில் இரண்டு கிளைகள் உண்டு. இதிலொன்று இப்பொழுது அரச வம்சத்தில் அமர்ந்திருக்கும் பீமவர்மனின் கிளை, மற்றது சிம்ம விஷ்ணுவின் கிளை. முதல் கிளையாகிய சிம்ம விஷ்ணுவின் வம்சத்தினர்தான் வரிசைக் கிரமமாய் அரசர்களாயிருந்தனர். அந்த வம்சத்தில் பரமேசுவர போத்தரையனுக்குப் பின் அந் நாட்டை யாளுவதற்கு யாரும் இல்லாது போய் விட்டதால் இரண்டாவது கிளையாராகிய பீமவர்மனின் வம்சத்தில் உதித்தவர்களில் ஒருவரும் இப்பொழுது பேரரசராக விளங்குபவரின் பாட்டனுமாகிய நந்திவர்ம போத்தரையர் அரசாட்சியைக் கைக்கொள்ள நேர்ந்தது. அதிலிருந்து இந்த இரு கிளையினருக்குள்ளும் உள்ளூறப் புகைச்சலும் பகையும் இருந்துகொண்டுதான் இருந்தன. அந்தச்




சிம்மவிஷ்ணுவின்வம்சத்தில் வந்தவனை சிம்மவர்மனை இப்பொழுது பகைஉணர்ச்சியில் மித மிஞ்சியவனாக இருக்கிறான். இந்த அரசாங்கத்துக்கு ஏதேனும் கெடுதல் விளைவிக்க வேண்டும் என்ற சித்தம் தான் அவனுக்கு எப்பொழுதும். அரசர் சைவராய் இருக்கிறார் என்று இவன் சமணனாகி இருக்கிறான். மதப் புகைச்சலும், இனப் புகைச்சலும் இல்லாது இருக்கும இந்த நாட்டில் அதைக் கிளறிவிடவேண்டும் என்பதற்காகவே அவன் சமணனாகி இருக்கிறான். இன்னொரு ரகசியமும் உண்டு. ராஷ்டிரகூட மன்னனை அமோகவர்ஷனின் மகள் கங்காவைத்தான் நமது மன்னர் மணந்திருக்கிறார். அமோகவர்ஷன் தன் மற்றொரு மகளான சந்திரப்பிரபாவைக் கங்க நாட்டு ராஜமல்லருடைய மகனாகிய பரமானந்தனுக்கு மணம் செய்து கொடுத்திருக்கிறார். கங்க நாட்டு அரசரும், ராஷ்டிரகூட அரசரும் இந்த விவாகத்தின் காரணமாகப் பல்லவ மன்னரோடு உறவு முறையும் நட்புரிமையும் கொண்டவர்களாகி விட்டனர். நாம் இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது கங்க குல மன்னனை ராஜமல்லனும் ராஷ்டிரகூட அரசனை அமோகவர்ஷனும் ஜைன மதத்தைச் சேர்ந்தவர்கள். பல்லவ மன்னரோ சைவ சமயத்தில் தீவிரப் பற்றுதல் உள்ளவர். இதை உணர்ந்த சிம்மவர்மன் தானும் ஒரு ஜைன சமயத்தவனாகிப் பல்லவ அரசர் ஜைனசமயத்துக்கு ஏதோ தீங்கு நினைப்பதாகக் காட்டி இம்மூன்று மன்னர்களுக்குள்ளும் சமய சம்பந்தமான குழப்பத்தை ஏற்படுத்திப் பெரும் பகையை வளர்க்கப் பார்க்கிறான். இவையெல்லாம் மன்னருக்குத் தெரியுமோ தெரியாதோ? தெரிந்திருந்தாலும் பெருந்தன்மையோடும், பொறுமையோடும் தான் சிம்மவர்மனின் சூழ்ச்சிகளுக்கு இடங் கொடுத்து வருகிறார் என்றுநான் நினைக்கிறேன்...'' என்று சொல்லி நிறுத்தினாள்.

பூதுகனுக்குத் தேனார்மொழியாள் சொல்லிய வார்த்தைகளிலிருந்து பல விஷயங்கள் விளங்கின. அவன் ஏதோ ஆழ்ந்து சிந்திப்பவன் போல, "நீங்கள் சொல்வதெல்லாம் எனக்கு விளங்குகிறது. ஆனால் மாலவல்லியின் காதல் விஷயம் தான் புரியவில்லை. கங்ககுல இளவரசன் பரமானந்தன் ராஷ்டிரகூட இளவரசி சந்திரப்பிரபாவை மணந்து கொண்டான் என்கிறீர்கள். அப்படி இருக்கும்போது மாலவல்லியிடம் அவனுக்குக் காதல் ஏற்பட்டது எப்படி..?''என்றான்.

''மாலவல்லியைக் காதலித்தவன் பரமானந்தன் இல்லை. அவனுடைய தம்பி பிரதிவீபதி...'' என்றாள்.

''பிரதிவீபதியா? சரிதான்! பாவம். அவன்தான் தன்னை விரவிடங்கன் என்று சொல்லிக் கொள்ளுகிறான் போலிருக்கிறது. இத்தகைய ராஜகுமாரர்களெல்லாம் காதலுக்காக எவ்வளவு பெயர் மாற்றம் உருவ மாற்றமெல்லாம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது? போகட்டும்—ஒரு அழகிய இராஜகுமாரன் ஒரு அழகிய இசைக் கணிகையைக் காதலிப்பது என்பது சகஜம். வேண்டுமானால் தாராளமாக அவளைக் கங்கபாடிக்கே அழைத்துச் செல்லலாமே? இதெல்லாம் ராஜ வம்சத்தினருக்குச் சகஜம் தானே? இவ்வளவு கஷ்டம் எல்லாம் எதற்கு..?''


தேனார் மொழியாள் சிரித்தாள். ''அதில்தான் இடையூறு இருக்கிறது. சிம்மவர்மன் தன்னுடைய தங்கையாகிய அமுதவல்லியை இந்தப் பிரதிவீபதிக்கு விவாகம் செய்து வைத்துவிட வேண்டும் என்று பிரயத்தனப்படுகிறான். அந்த சம்




பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டுவிட வேண்டும் என்பதற்காக அரசர்மூலமாக ஏற்பாடு செய்து கொண்டு வருகிறான். அதோடு அந்தக்காமுகனுக்கு மாலவல்லியிடமும் கொஞ்சம் மோகம் இருக்கிறது. பிரதிவீபதிக்குச் சிம்மவர்மனின் தங்கை அமுதவல்லியிடம் மோகம் இல்லை. பிரதிவீபதிக்கு மாலவல்லியின்மீது காதல். இக்காதலுக்கு இடையூறாக முளைத்திருக்கிறான் சிம்மவர்மன். அவனுடைய அதிகாரங்களுக் கெல்லாம் மன்னர் இடங் கொடுத்திருக்கிறார். உத்தம குணசீலரான மன்னர் மாலவல்லிக்கும் பிரதிவீபதிக்கும் உள்ள உள் அந்தரங்கமான காதலை அறிந்தால் அதற்கு இடையூறாக எந்தப் பெண்ணையும் பிரதிவீபதிக்கு மணம் முடித்து வைக்கப் பிரியப்படமாட்டார் என்பதை அறிந்து. அவருக்குத் தெரிவதற்கு முன்னால் மாலவல்லிக்கும் பிரதிவீபதிக்கும் ஏற்பட்டிருக்கும் காதலுக்கு எவ்வளவு இடையூறு செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்யச் சித்தமாயிருக்கிறான் சிம்மவர்மன். பிரதிவீபதியும் தன்னுடைய காதலைப்பகிரங்கமாகச் சொல்லிக்கொள்ள முடியவில்லை. அவனுடைய தகப்பனார் ஜைனசமயத்தில் தீவிரப் பற்றுக் கொண்டவர். தம்முடைய குமாரன் ஒரு பெண் மீது மோகம் கொண்டு, கேவலம் ஒரு கணிகையை மணந்துகொள்வதை அவர் விரும்ப மாட்டார். இப்பொழுதே வயதான நிலையிலிருக்கும் அவர் ஆயுட்காலம் அதிக நாள் நீடிக்காது. அதற்கு மேல் மாலவல்லியை மணந்து கொள்ளலாம் என்று பிரதிவீபதி நினைக்கிறான்'' என்றாள் தேனார்மொழியாள்.

பூதுகன் ஒரு பெருமூச்சு விட்டான். அவனுக்குஎல்லா விஷயங்களும் விளங்கி விட்டன. ஆனால் அந்நிலையில் ரவிதாசனைக் கொன்றவர்கள் யாரா யிருக்க முடியும் என்றுதான் அவனுக்கு விளங்கவில்லை. வீரவிடங்கன் என்ற பெயரில் உலவும் பிரதிவீபதியே ரவிதாசனைக் கொல்வதற்கு ரகசியமான ஏற்பாடு ஏதாவது செய்திருக்கலாமா என்று நினைத்தான். எப்படியோ அவன் இங்கு வந்ததில் அநேக விஷயங்கள் தெரிந்து கொண்டான். இதன் மூலமாக இன்னும் சிறிது பிரயாசைப்பட்டால் அதையும் தெரிந்துகொண்டு விடுவது கடினமில்லை, என்று அவனுக்குப் பட்டது. அவன் ஒரு அலட்சியச் சிரிப்போடு, ''எப்படியோ பல்லவ சாம்ராஜ்யத்துக்கு எதிராகச் செய்யும் இச்சூழ்ச்சிகளையெல்லாம் மறுபடியும் இந்த நாட்டில் சோழ சாம்ராஜ்யம் தலையெடுப்பதற்குரிய வண்ணம் உபயோகித்துக் கொள்ளலாமே என்ற எண்ணம் எனக்கு. நீங்கள் சோழவள நாட்டைச் சேர்ந்தவர்கள். அதிலும் குடந்தைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். பூம்புகாரிலுள்ள வைகைமாலைக்கும், அவள் சகோதரி சுகமதிக்கும் உள்ள உணர்ச்சியும் ஆர்வமும் உங்களுக்கு இல்லாமல் போய் விடுமா?'' என்றான்.

பூதுகனின் வார்த்தையைக் கேட்டுத் தேனார்மொழியாள் பரபரப்போடும் ஆச்சர்யத்தோடும் விழித்தாள். அழகு நிறைந்த அவள் முகத்தில் சட்டென்று ஏற்பட்ட பிரகாசமும் மலர்ச்சியும் மேலும் ஒரு பேரழகைத்தான் எடுத்துக் காட்டின. இந்தச் சமயத்தில் வாயிற் கதவை யாரோ தடதடவென்று தட்டும் சத்தம் கேட்கவே, தேனார்மொழியாள் பரபரப்பு அடைந்தவண்ணம் ''நீங்கள் தயவுசெய்து அதோ அந்த அறையில் போய் இருங்கள்; யாரோ வந்து கதவைத் தட்டுகிறார்கள். நான் போய்க் கதவைத்திறக்கிறேன்'' என்றாள், சிறிது பயமும் கொண்டவளாய். (தொடரும்)





அன்புக்குரிய சுஜாதா,

கடிதங்கள் எழுதுவதைப் பற்றிச் சொன்னேனல்லவா? கடிதங்களையும் அழைப்புகளையும் சரியாகப் படிப்பதும் மிகவும் முக்கியமானது. அதில் என்ன பிரமாத கஷ்டமென நினைக்கலாம். அவைகளில் எவ்வளவோ வேடிக்கைகள் நடந்து விடுகின்றன. கடிதங்களின் உறையை ஒழுங்காகப் பிரிப்பது நன்றாக இருக்கும். தாறுமாறாகக் கிழிப்பது பார்க்க அருவருப்பு. நமக்கு வரும் கடிதங்களைக் குறிப்பிட்ட ஓர் இடத்தில் வைப்பது நல்ல வழக்கம். அதை எந்தப் புத்தகத்துக்கு உள்ளேயாவது வைத்து விட்டுத் தேடுவது, புத்தகத்தை இன்னொருவருக்குக் கடன் கொடுப்பது, புத்தக சாலையைச் சேர்ந்த புத்தகமானால் நினைவின்றி அப்படியே கடிதத்தை அதில் வைத்து அனுப்புவது எல்லாம் வீண் சிரமம்.

சாதாரணமாக, கடிதம் வந்தால் அதை உடனே முழுவதும் படித்து விடுவது நல்லதல்லவா? பின்னால் படித்துக் கொள்ளலாமென்று வைப்பது தவறாகும். அதில் அன்றே அவசரமாக ஒரு சமாசாரத்தை விசாரித்து எழுதச் சொல்லி இருப்பார்கள். அல்லது அவர்களுக்கு ஒரு விசேஷமோ, நோயோ ஏதையாவது குறிப்பிட்டிருப்பார்கள். அந்தக் கடிதத்துக்கு உடனடியாகப் பதில் எழுத வேண்டியிருக்கும்.

நாங்கள் ஒரு சமயம் ரயிலில் வட இந்தியாவுக்குப் போகும்போது நாகபுரியில் தெரிந்தவர்களுக்குச் சாப்பாடு கொண்டு வரச் சொல்லி எழுதியிருந்தோம். அவர்கள் தேதியைச் சரியாகப் பார்க்கவில்லை போலும். நாங்கள் வருவதற்கு முதல் நாளே சாப்பாட்டை எடுத்துக்கொண்டு வந்துவிட்டுப் பின் ஏமாந்து திரும்பி இருக்கிறார்கள். பிறகுதான் கடிதம் எழுதித் தெரிவித்தார்கள்.



கல்யாணப் பத்திரிகையைச் சரியாகப் படிக்காமல் போய் விட்டால் அதனால் வரும் சிரமத்தைப் பற்றிக் கேட்க வேண்டாம். கல்யாணம் மறு நாளைக்குத்தான் இருக்கும். முதல் நாளே அவர்கள் வீட்டுக்குப் போய்ப் பிறகு ஏதோ கூறிச் சமாளித்துக் கொண்டு வருவதைத்தவிர வேறு வழியில்லை.

எங்கள் உறவினர் வீட்டில் விருந்து என்று போனில் கூப்பிட்டிருந்தார்கள். டெலிபோன் அழைப்பை நேரிடையாகக் கேட்காததனால் அதேயேயுள்ள வேறொரு சிநேகிதர் வீட்டில்தான் விருந்தென்று நினைத்து அதற்கான ஏற்பாட்டுடன் போய் விட்டோம். நாங்கள் போன சமயம் வேறு யாருமில்லை; சந்தடியில்லை. அவர்களும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு சாவகாசமாக இருந்தார்கள். எங்களை அன்புடன் வரவேற்றுப் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். எங்களுக்குப் பசி அதிகமாகிவிட்டது. வெகு நேரத்துக்குப் பிறகு காப்பியாவது சாப்பிட்டுப் போகணுமென்று அவர்கள் செய்த உபசாரத்தைக் கேட்டு எங்களுக்கு அழுகையும், ஏமாற்றமுமாக இருந்தது. பிறகுதான் நாங்கள் எங்கள் பிழையை உணர்ந்து கொண்டோம்.

சில சமயம் நம்மைத் தெரிந்தவர்கள் கண்ட இடத்தில் ஆசையாகப் பேசுகிறார்கள். "அவர்களை நமக்குத் தெரிந்திருக்கும். ஆனால் நினைவு வருவதில்லை. அந்தச் சமயம் "யாரென்று புரியவில்லை. தயவுசெய்து சொல்லுங்கள்" என்று மரியாதையாகக் கேட்டுவிடுவது மேல். அல்லது சாதுர்யமாகப் பொதுவாகப் பேசி அவர்கள் யாரென நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். இவை இரண்டுமின்றி ஒரு சிநேகிதியை மற்றொருத்தியாக நினைத்துப் பேசுவது தமாஷாக, அல்லது தவறாக முடியும்.

நமக்குத் தெரிந்தவர்கள் வீட்டில் குழந்தை பிறக்கிறது. அதை உடனே போய்ப் பார்க்க இயலாமல் போய்விடலாம். பிறகு அவர்களைப் பொது இடங்களில் பார்த்தால் என்ன குழந்தையென்று கேட்பது விரசமாக அல்லது அலட்சியமாகத் தோன்றும். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். வேறு யாரிடமாவது விவரத்தை விசாரித்துக் கொண்டு பிறகு அவர்கள் வீட்டுக்குப் போவதுதான் புத்திசாலித்தனம். முதலில் செய்த பிழையைச் சாமர்த்தியமாகத் திருத்திக் கொள்ள வேண்டும் அல்லவா? சரியாகத் தெரியாவிட்டால் குழந்தைக்கு என்ன பெயர் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டுவிடுவது நல்லது.

ஒரு வீட்டில் இரண்டு மாப்பிள்ளைகள் இருந்தார்கள். ஒருவருடைய தாய் இறந்து போய் விட்டாள். அதைச் சரியாக அறிந்து கொள்ளாத ஒரு அம்மாள் அன்னை இருக்கிற மாப்பிள்ளையிடம் போய் உருகித் துக்கம் விசாரித்திருக்கிறாள். இரவு சாப்பாட்டின்போது மாப்பிள்ளை இல்லை. அவர் கோபித்துக் கொண்டு ஊருக்குக் கிளம்பிப் போய்விட்டார். எப்படியிருக்கிறது?

இப்படிக்கு,
பூமாதேவி.

அவள் அழகில் வெற்றி இருக்கிறது — அவள் அழகில் ஒரு இரகசியம் இருக்கிறது

'' நான் வத்னியை உபயோகிக்கிறேன் ''
என்று மதுபாலா கூறுகிறார்.

"மூன்று நல்ல காரணங்களுக்காக:

அது கடைசி செதில்வரை புதுமையும் நறுமணமுமுள்ளது.

அது உயர்ந்த ரகமும் ஸ்வதேசியுமானது.

அது கோத்ரெஜினால் தயாரிக்கப்பட்டது''



மதுபாலா மேலும்
கோத்ரெஜ்
டாய்லெட் பவுடர்
கூந்தல் தைலம்
சலவை சோப்புத் தூள்களை
உபயோகிக்கிறார்

''அவைகள் மிகவும் நம்பகமானது'' என்று கூறுகிறார்.

100% இந்திய
நிர்வாகம்
மூலதனம்



Godrej கோத்ரெஜ்
ரிஜிஸ்டர்டு

வத்னி*

சாவி மார்க்

வத்னி 'பேபி' விலை 2½ அணாதான்

★''தாய்நாடு'' என்று அர்த்தங்கொண்ட 'வதன்' என்ற வார்த்தையிலிருந்து திரிபு பெற்றது.

சைபால்

CIBOL

வெட்டுக்காயம், சொறி சிரங்கு, வேனல் கட்டி தீப்பட்ட புண், முகப்பரு கரப்பான், சேத்துப் புண்

முதலிய வியாதிகளைப் போக்குவதில் கைகண்ட களிம்பு

★

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி

மதுரை

சுலேகா

பவுண்டன் பேனா மை

இப்பொழுது 8 வித கலர்களில் கிடைக்கும்

ராயல்–புளு, புளு-பிளாக், கறுப்பு சிவப்பு, நல்ல சிவப்பு, வயலட் பழுப்பு மற்றும் பச்சை



Contains SOLVENT "S-50"

சுலேகா ஒர்க்ஸ் லிட்.

கல்கத்தா - டேல்லி - பம்பாய்-சென்னை

நீரிழிவு

குணமாகும்

சிறு நீரில் சர்க்கரை காண்பது நீரிழிவு (DIABETES) நோயின் முக்கிய அறிகுறி. உங்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாயிருந்தாலும், உடல் உருகிக் கொண்டு வந்தாலும் அடிக்கடி நீர் இறங்கினாலும் உங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இக் கொடிய உடல் உருக்கி நோய், தான் பற்றினவர்களைக் கடைசி மூச்சு உள்ள வரையில் விடுவதில்லை; கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை மரண வாயிலுக்கு இழுத்துச் செல்லும். நீரிழிவு வியாதியைக் குணப்படுத்த இஞ்செக்ஷன்கள் போடப்படுகின்றன; ஆனால் அவற்றினால் வியாதி கொஞ்சமும் குணமாவதில்லை. இஞ்செக்ஷன்கள் நீரில் சர்க்கரையைக் குறைக்கின்றன — அதுவும் மருந்துச் சக்தி உள்ள வரையில்தான். ஆகவே, உபாதையைத் தடுக்க வாழ்நாள் முழுவதும் ஊசிகள் போட வேண்டியதுதான். இதனால் அதிகச் செலவு ஏற்படுவதோடு கஷ்டமும் உண்டாகிறது. நோய் குணப்படுத்தாது போனால் நீங்கள் புண்களினாலும், கண் நோய், பல் நோய், வயிற்றுக் கோளாறு முதலிய பலவித வேதனைகளால் சிரமப்பட நேருகிறது.

நீரிழிவு வியாதியை, வீனஸ் சார்ம் மாத்திரைகளை உபயோகித்து, சிக்கனமாகவும், சுலபமாகவும் நிச்சயமாகவும், பத்திரமாகவும் சிகிச்சை பெறுங்கள்.

பண்டைக்கால யுனானி வைத்திய முறைகளைக் கொண்டு, அரிய மூலிகைகளின் சேர்க்கையுடன் தயார் செய்யப்படும் வீனஸ் சார்ம் மாத்திரைகள், நோயை அடியோடு அகற்றுவதுடன், எத்தனையோ பேர்களை இஞ்செக்ஷன் அல்லது ஒருவிதமான பட்டினி இல்லாமல் குணமாக்கியிருக்கிறது. இதை உபயோகித்தும் பல ஆயிரக் கணக்கானவர்கள்; இந்நோயின் மரணப் பிடியிலிருந்து தப்பியிருக்கிறார்கள். இம் மருந்தை உபயோகிக்கத் தொடங்கிய இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம், நீரில் சர்க்கரை குறைகிறது; அத்துடன் அதிக நீர் இறங்குவதும் நிற்கிறது. சில நாட்கள் உபயோகித்தாலே நோய் தணிந்து திருப்தி ஏற்படுகிறது. வீட்டிலிருந்தபடி வீனஸ் சார்ம் சிகிச்சையைத் துவங்குங்கள். விசேஷ பத்தியம் எதுவும் இல்லை. நீங்களே அதன் குணத்தை அறிவீர்கள். இதுபற்றிய விரிவான இலவச ஆங்கிலப் பிரசுரத்தை வரவழைத்துப் பாருங்கள்.

50 மாத்திரைகள் கொண்ட புட்டி ஒன்றின் விலை 6-12-0

(பாக்கிங் தபாற் செலவு இனாம்)

வீனஸ் ரிஸர்ச் லாபரேட்டரி (K. M.)

தபால் பெட்டி நெ. 587. கல்கத்தா



9. "பல் துலக்குதல்"

"ஏண்டா! காலையில் எழுந்தவன் இப்படி பிரும்மமா உட்கார்ந்துக் கொண்டு விட்டாய்?"

"உம்...?"

"உம்மாவது அம்மாவது? 'எழுந்தாலும், பல்லைத் தேய்த்தாலும்: முகத்தைக் கழுவினாலும்' என்று ஏதாவது வழியாக வாய்க்காலாக இல்லாமல்... இடித்த புளியாநிரி கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்து விட்டாய்?"

வாஸ்தவந்தானே? முன் சொன்ன விதம் காலைக் கடன்களை முடித்துக் கொண்ட பிறகு பல் தேய்ப்பது தினசரி திட்டத்தில் அடுத்தபடியான விஷயம். இதற்காக ஒரு செங்கல் துண்டை எடுத்துக் குளத்தின் படிக்கட்டில் — பல்லைக் கடித்துக் கொண்டு கறகறவென்று தேய்த்து எடுத்து விழுதை விரலில் எடுத்துப் பல் தேய்க்கத் தொடங்கக் கூடாது. மணல், அடுப்புக்கரி முதலியவையும் பல் துலக்க உகந்தவையல்ல.

'அட, சரிதான் ஐயா! பல்பொடி நல்லதா? பல்பசை நல்லதா? பல்குச்சி நல்லதா? எதை எடுக்கலாம் என்பதைச் சொல்லுவீரா? எதை எடுக்கக்கூடாது என்பதைச் சொல்லிக் கொண்டிருப்பீரா?' என்று கேட்கிறீர்களா?

'நரி வலம் சென்றாலும் சரி; இடம் சென்றாலுஞ் சரி. எனக்குப் பரவாயில்லை. மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் போதும்' என்றாராம் ஒருவர். அதுபோல, பல் குச்சியால் பல் தேய்த்தாலும் சரி; பல் பொடியால் தேய்த்தாலும் சரி; ஐயா! பல்லே தேய்க்காவிட்டாலும் எனக்கென்ன? ஆனால் பல் தேய்க்கிறேன் பேர்வழி என்று செங்கல், மணல், காரைக்கட்டி போன்றவைகளால் பல் தேய்க்கக் கூடாது. அந்த ஆபத்து வேண்டாம் என்று சொல்வதில் எனக்கு அதிகப் பொறுப்புண்டு. ஆகவே சொன்னேன்.

"துகளிலே காட்டமினை தோட்டுத்துலக்கீற்
துகளிலே காட்டாது தோடந்—றுகளிலேகண்
மெய்த்துவரை யோத்திருக்கின் மேனுன்
வரை மூரல்
மெய்த்துவரை யோத்திருக்குமே."

தூள் அல்லது சூரணங்கள்.

இதை வேணுமானால் பற்பொடி என்று அழையுங்கள். இலை, பற்குச்சி இவைகளால் பல்லைத் துலக்குவதுதான் முறையாகும். தூள் செய்ய ஏற்கும் பொருளோ, அல்லது நேரிடையாக வே உபயோகிக்க ஏற்கும் இலையோ, அல்லது பற்குச்சியோ துவர்ப்புச் சுவையுள்ளதா யிருக்குமானால் பற்கள் பலம் பெறும். ஈறுகள் கெட்டிப்படும். கார்ப்பு [காரம்], கைப்பு [கசப்பு] என்னுஞ் சுவையுள்ளவையும் ஏற்கத் தக்கவை தான்.

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என் பார்களே ஸார்! வேப்பங் குச்சியால் பல் தேய்ப்பதினால்..' என்றும் கேட்பீர்கள். இப்படி ஒவ்வொன்றாய்ச் சொல்லப் போனால் முடிவு ஏது? முக்கியமாக வழக்கத்திலிருந்து வரும் சிலவற்றின் விசேஷ குணத்தை மட்டும் விளக்கி விடுகிறேன்.

"வேலுக்குப் பல்லிறுகும்; வேர்புக்குப்
பற்றுலங்கும்:
பூலுக்குப் போகம் பொழியுங்காண்—
ஆலுக்குத்
தண்டா மறையாகுஞ் சாருவேல்.
நாயுருவி
கண்டால் வசீகரமாங் காண்."

வேலங் குச்சியால் பல் துலக்கினால், பல் இறுகும். வேலம் பட்டையைச் சூரணமாக்கியும் உபயோகிக்கலாம். வேப்பங் குச்சியால் பல் துலக்கினால் பற்கள் சுத்தமாகிப் பளபளக்கும். பூலாஞ் செடியின் இலையினால் பல் துலக்கி வர வீரியம் அதிகரிக்கும். ஆலம் விழுதினால் (பல்குச்சியாகப்) பல் தேய்த்தால் லக்ஷ்மி கடாக்ஷம் பெற்ற தோற்றமும், நாயுருவியினால் பல் தேய்த்தால் முக வசீகரமும் உண்டாகும்.

சொத்தை பிடித்த பற்களையுடையவர்கள் முக்கியமாக மாம்பழுப்பினால் பல் தேய்ப்பது நல்லது.

நண்பரொருவர், ஆஜானுபாகுவான சரீரம், பிடிவாத குணம். இவரைச் சம்பளத் தேதி வாக்கில் ஒருநாள் பூக்கடை சமீபத்தில் கண்டேன். "என்ன ஐயா! சம்பளம் வாங்கினதும் முதல் செலவு..ரோஜாக் கதம்பமாக்கும்!" என்று கேட்டேன்.

"இல்லை ஸார், பல் தேய்க்க வேலங் குச்சி வாங்கிப்போக வந்தேன்" என்று ஒரு கத்தைச் சுள்ளிகளைக் கைப்பையின் உள்ளிருந்து எடுத்தார். நண்பருக்கு ஒரு மாதத்துக்கு வேண்டிய பற்குச்சி களைக் கற்றை கற்றையாய் வாங்கி வைத்துக் கொள்ளும் பழக்கமாம். எப்படி? விறகுக் கட்டையாய்க் காய்ந்து போன குச்சிகளை மென்று பல் தேய்ப்பது, ஆபத்தை விலை கொடுத்து வாங்குவதற் கீடாகும். பச்சையாயிருக்கும் போதுமென்று, பற் குச்சியின் நுனியை மிருதுவாக்கிக் [கொள்வது முறை. வேலங் குச்சி பல்லுக்கு நல்லது என்பதற்காக விறகுபோல் வாங்கிச் சேர்ப்பதா! என்ன கொடுமை, பாருங்கள்." "கொண்டு போங்கள், ஐயா, இரண்டுநாட்கள் கழிந்தால் 'பாய்லர்' பற்றவைக்க உதவும்" என்று சொல்லி விட்டுச் சென்றேன்.



"கல்லும் மணலும் கரியுடனே பானைகளும்
வல்லதொருவைக்கோலும் வைத்துத் தம்—
பல்லதனைத்
தேய்த்திடுவாரேயாகிற் சேராளே சீதேவி;
வாய்த்திடுவாள் மூதேவி வந்து"

செங்கல் தூள், மணல், அடுப்புக்கரி, பானை, வைக்கோல், மற்றும் சாம்பல், கை விரல், பட்டுப்போன மரங்களின் குச்சி, பட்டை ஆகியவற்றைப் பல் துலக்க உபயோகித்தல் தகாது என்பதற்கு இதற்குமேல் என்ன சான்று வேணும்?

ஆயினும், அஜீரணமுள்ளவர், வாந்தி, சுவாசம், காசம் (ஆஸ்த்மா, இருமல்) ஜுரம், திருஷ்ணை என்னும் பெருந்தாக நோய், வாய்ப்புண், மார்பு வலி ஹிருத்ரோகம், தலைவலி, கண் நோய், காது நோய் முதலியவற்றால் பீடிக்கப் பட்டுள்ளவர், பல் குச்சியால் பல் தேய்க்கும் பழக்கமுள்ளவராயினும், மேற்சொன்ன நோய் வாய்ப்பட்டக் கால், வழக்கப்படி குச்சியால் பல் தேய்க்கக் கூடாது: பற் பொடிகளை உபயோகிக்க வேணும். இவ் வகையில், இரண்டொரு உதாரணங்கள். 'ஆஸ்த்மா' என்னும் நோயுள்ளவர் கரிசலாங்கண்ணி, பிரப்பங் கிழங்கு, குப்பைமேனி, நொச்சி இலை, எருக்கிலை, கருங்காலிப்பட்டை இவற்றின் சூரணம்—ஏதேனு மொன்றாயினும், கிடைத்தவற்றில் சிலவாயினும், எல்லாமுமேயாயினும்—பல் தேய்க்க ஏற்கத்தக்கது: பல் சுத்தமாவதோடு, வியாதி குணமாவதற்கும் வழிகோலும். வாய்ப் புண்ணுள்ளவர் நாவற்பட்டை, கருவேலம் பட்டை, குப்பைமேனி, அரசவேர்ப் பட்டை ஆகியவற்றின் சூர்ணத்தைப் பல் தேய்க்க உபயோகிக்கலாம். மருதம் பட்டையையும் எருக்கின் இலையையும் சூர்ணமாக்கி அஜீர்ணமுள்ளவர் பல்தேய்க்க உபயோகிக்கலாம். வேப்பம்பட்டை, மருதம் பட்டை, கருவேலம்பட்டை, மாவிலிங்கம்பட்டை, வெயிலில் காயவைத்த அரச இலை, எருக்கின் இலை, நொச்சி இலை ஆகியவற்றின் சூர்ணத்தை ஜுரம் உள்ளவர்கள் பல் தேய்க்க உபயோகிக்கலாம்.

பல்தேய்த்தான பிறகு வாயைக்கொப்பளித்துக் கொப்பளித்துத் துப்பித் துப்பிச் சுத்தமாக்கிக் கொள்ள வேண்டும். நாக்கையும் குழப்பித்தேய்த்துப் பிறகு வாய் கொப்பளிக்க வேண்டும்.

நாக்கை வழிக்கும் வியாஜத்தில்—"ஊ...வே; ஊ...வே" என்று ஓக்காளமும், ஊரதிரச் சத்தமுமிட்டு வாந்தியும் ஓரளவு எடுத்து ஊரைக் கூட்டும் 'ஹட யோகம்' ஒருநாளும் செய்யத்தக்கதல்ல.

எல்லோருக்கும் உதவக்கூடிய பல் பொடியின் முறையைச் சொல்கிறேன்.

சாக்குக் கட்டி என்னும் சீமைச் சுண்ணாம்பு [இது மருந்துக் கடைகளில் கிடைக்கும்] பூங்காவி [அல்லது செம் மண்] கடுக்காய்த்தோல், ஓமம், ஏலரிசி, லவங்கம் [இதைச் சிலர் கிராம்பு என்பர்] லவங்கப்பட்டை, சுக்கு, திப்பிலி, மிளகு, இவற்றின் தனித் தனி சூரணங்கள்; வறுத்துப் பொடித்த இந்துப்பு, பொரித்துப் பொடித்த வெங்காரம் என்னும் 12 சரக்குகள். இவற்றின் தனித்தனி சூர்ணங்களில் முறையே 100, 15, 5, 2½, 2½, 2½, 2½, 1, 1, 1, 1 தோலா [ஒரு ரூபாய் நிறை] வீதம் நிறுத்தெடுத்து யாவற்றையும் ஒன்றாய்க் கலந்து எடுத்து வைத்துக் கொள்ளவும். இதுதான் எனது அனுபவத்தில் மிக நல்லதெனக் கண்ட பற்பொடி.

(தொடரும்)



பிரகாசமுள்ள
வெண்ணிறப் பற்கள்
மட்டுமல்ல
அத்துடன்
ஆரோக்கியமான
ஈறுகளும்!
ஈறுகளை கெட்டியாகவும், ஆரோக்கியமாகவும் வைக்கவும் மற்றும் பற்களுக்கு ஸ்படிகத்தைப் போன்ற வெண்மையை அளிக்க வேண்டும் என்றே போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. உங்களை ஈறுகள் சம்பந்தமான நோய்கள் தொற்றிக்கொண்டு அவதி கொடுக்காதிருக்கவே யாவரும் அறிந்த இப்பற்பசையின் டாக்டர் ஆர். ஜே. போர்ஹான் டி. டி. எஸ் அவர்கள் பக்குவப்படுத்திய முறையில் விசேஷ காரப் பொருள் கலக்கப் படுகிறது. ரத்தக் கசிவு வீங்கிய ஈறு புண்ணானதும் மற்றும் கூசும் ஈறுகளை லேசாக போர்ஹான்ஸ் கொண்டு தேய்க்க வேண்டும். அவை உடனே கெட்டியான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பிவிடும் ஆனபடியால் இந்த இரட்டைக் காரியமுள்ள பற்பசையை நீங்கள் உபயோகித்து பளிச்சென இருக்கும் வெண் பற்களையும் நல்ல ஆரோக்கியமான ஈறுகளையும் உடையவர்களெனப் பெருமைப் படலாம்.
தந்த வைத்தியரால்
செய்யப்பட்ட டூத்பேஸ்ட்
போர்ஹான்ஸ்
ஈறுகளுக்குகந்தது
M-11



குட்டித் தமாஷ்

நீதிபதி : முதலில் நீங்கள் கூண்டில் ஏறி யதும் சத்தியம் செய்து கொடுப்பது எதற் காகத் தெரியுமா ?

சாட்சி : ஒரு பொய்யைப் பேசி விட்டால் அதை விடாமல் கைக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் !

★

எழுத்தாளர் : நீங்கள் ஒரு நடிகரா? நான் சினிமா பார்த்துப் பதினைந்து வருடங்களுக்கு மேலாகி விட்டன! உங் களைத் தெரியாதே !



நடிகர் : அப்படியா? நான் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்து இரு பது வருஷங்களாகி விட்டன! உங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள நியாயமில்லையே ?

★

மாஜிஸ்திரேட் :—ஏன் அப்பா ! நீ குதிரை யைத் திருடியது வாஸ்தவந்தானா ?

குற்றவாளி :—நான் குதிரையைத் திருட லீங்க! நான் கொள்ளைக் காட்டினேன்! அது என் பின்னாலேயே வந்து விட்டதுங்க !

★

"ஆமாம்! இன்றைக்குக் காலையில் கூப்பிடக் கூப்பிடக் காது கேட்காமல் விறைப்பாகப் பறந்து போனீர்களே, எங்கே போனீர்கள்?"



"விமான நிலையத்துக்கு என் நண்பரை வரவேற்கப் போயிருந்தேன்!"

★

முதல் வாலிபன் : எனக்கு இரண்டு இடத்தி லிருந்து ஜாதகங்கள் வந்திருக்கின்றன. ஒன்று பணக்காரப் பெண்ணின் ஜாதகம்! மற் றொன்று என் கல்லூரிக் காதலியின் ஜாதகம்.

இரண்டாவது வாலிபன்: அப்படியா? நீ உன் கல்லூரிக் காதலியைத்தான் மணந்துகொள்ள வேண்டும் !

முதல் வாலிபன் : பேஷ் ! உன் யோசனைப் படியே நடந்து கொள்கிறேன், அப்பா !

இரண்டாவது வாலிபன் : அந்தப் பணக் காரப் பெண்ணின் ஜாதகத்தை என்னிடம் கொடுத்து விடு, அப்பா !

பையன்: அப்பா! ஒருவர் பொய் சொல் கிறார், இம்சை செய்கிறார், அடிக்கிறார், அவ ருக்கு என்ன தண்டனை அப்பா கொடுப்பாய் ?

தகப்பனார் (நீதிபதி) : ஏன் ! அவர்களுக்கு ஆறுமாதச் சிறைத் தண்டனை கொடுக்கவேண் டும்! அதுசரி. யாரைப் பற்றிச் சொல்கிறாய் ?

பையன் : நம்ம அம்மாவைத் தான் சொல்கிறேன் !

★

சபையில் பிரசங்கம் நடக்க இருந்தது. ஆனால் கூட்டம் அதிகம் இல்லை. இதைக் கண்டு பிரசங்கி, "சபையோர்களே ! நான் எழுத்தாளன், பேச்சாளன், தலைவன், பாட கன் எல்லாம். இப்படிப் பட்ட பல குணங்கள் படைத்த என் பேச் சைக் கேட்க இவ்வளவு குறைந்த பேர்கள் வந் திருப்பது அவமானமா யிருக்கிறது !" என்றார்.



"அப்பா! நீங்கள் வெளி யில் தெரிந்து விடுமே என்று அவமானப்பட்டுத் தலைகுனிய வேண்டாம் ! இந்தக் கூட்டத்துக்கு வந்திருப் பவர்கள் அனைவரும் நம்முடைய குடும்பத் தைச் சேர்ந்தவர்கள்தான் !"

★


வக்கீல் :—உன்னுடைய வாக்குமூலத்தில் ரொம்ப யோக்கியன் என்று சொல்லி யிருக் கிறாயே, அது உண்மைதானா? நீ குற்றமே செய்யவில்லையா ?

குற்றவாளி :—ஆமாங்க ! நான் கீழே விழுந்து காயம் பட்டு அதிக இரத்தம் சிந்திப் போச்சுங்க! எனக்கு ஒரு வக்கீலுடைய இரத் தத்தைப் பாய்ச்சினாங்க! அதிலிருந்து என் மனசு கெட்டுப் போச்சுங்க!

"என்ன ஐயா ! விளக்கு இல்லாம லேயே ஆசக்கின் ஓட்டிக் கொண்டு போகிறாயே ?"



"இது ஆயிரம் விளக்குதானுங்களே ? நம்ம ஒரு விளக்கு இல்லாட்டா, பரவாயில்லேன்னுதான்."



குழந்தை சிரித்த

சமீபத்தில் அரியலூரில் நடந்ததைப் போன்ற ஒரு பயங்கரமான "ரெயில் விபத்து இனி உலகத்தின் எந்தப் பகுதியிலுமே நடைபெற வேண்டாம். இப்போது நாட்கள் பல கழிந்து விட்டன. நமது கண்ணீர்க் கரை உலர்ந்து, மனப்புண் ஆறி, தொல்லை தந்த பழங் கனவாய் அது மாறிவரும் வேளை. தினந்தோறும் நடைபெறும் புத்தம் புது நிகழ்ச்சிகளைக் கொண்டு நான் அதை மறந்துவிடத் தான் பார்க்கிறேன். பெரும் பகுதி மறந்தும் போய்விட்டது. ஆனால் அன்று நடந்த நிகழ்ச்சிகளில் ஒன்றே ஒன்று மட்டிலும் இன்னும் என்னுடைய மறதிப் போர்வைக்குள் மறைந்து கொள்ள மறுக்கிறது. அதை உங்களிடம் கூறிப் பகிர்ந்து கொண்டு விட்டால் எனக்கும் சற்று ஆறுதலாக இருக்கும். பகிர்ந்து கொண்ட பின் அதன் கனம் குறைந்து எனக்கு மறந்து போனாலும் போகலாம். சற்றுச் செவி சாய்ப்பீர்களா?

" கிழக்கே வெளுப்பதற்கு இன்னும் ஒரு நாழிகைப் பொழுதிருக்கும். அதற்குமுன் ஏற்படும் கருக்கிருட்டு வேளையில், அந்த இருளைக் கிழித்துக் கொண்டு, காலத்தை விரட்டிக்கொண்டு தூரத்தைப் பின்னால் தள்ளித் தூக்கிக் கொண்டு வெகு வேகமாக விரைந்தது துரித வண்டி. வெளியில் மழைத் தூற்றல்; சன்னல்கள் பல மூடிக் கிடந்தன. பொழுது புலரும் வேளையில் ரெயில் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று விடும். தொடர்ந்து செல்லும் பிரயாணிகள் அங்கு சூடாய்க் காப்பி சாப்பிடலாம்; வண்டி மாற்றிக் கொள்கிறவர்கள் மாற்றிக் கொள்ளலாம்; இறங்குகிறவர்கள் இறங்கலாம். வரவேற்பதற்காக உற்றார் உறவினர்களையோ, நண்பர்களையோ எதிர் பார்த்தவர்களும் உண்டு.

• ஆனால் புவனேசுவரி அப்படி யாரையும் எதிர்பார்க்கவில்லை. அவள் தம்பியே துணைக்கு வந்திருப்பதால் ரெயிலடியில் மாட்டு வண்டி

ஒன்றை வாடகைக்குப் பிடித்துக் கொண்டு மலைக் கோட்டைக்குப் போக வேண்டியதுதான்.

மூன்றாம் வகுப்புப் பெட்டியில் அக்காள் ஒரு மூலையிலும் தம்பி மற்றொரு மூலையிலுமாக உட்கார்ந்திருந்தார்கள். புவனேசுவரியை அடுத்துச் சில பெண்கள் முடக்கிக் கொண்டு தூங்கியதால் தம்பி தனியாக மறு கோடிக்குப் போய் விட்டான். புளிமூட்டை மாதிரி மனிதர்கள் சாமான் வைக்கும் பலகைகளிலும், கீழ்த் தளத்திலும், பெஞ்சுகளிலும் அடைத்துக் கொண்டு நெருக்கடிப் பட்டார்கள். வெளியில் மழை பெய்ததால் அந்த நெருக்கடியின் சூடு பிரயாணிகளுக்கு இதமாக இருந்தது போலும். அக்காள் தம்பி இருவரைத் தவிர மற்றவர்கள் கால் தூக்கத்திலோ, அரைத் தூக்கத்திலோ, முக்கால் தூக்கத்திலோ மூழ்கியிருந்தார்கள். தம்பி முன்பே நன்றாகத் தூங்கிவிட்டு இப்போது விழித்துக் கொண்டான்; அக்காளுக்குத் தூக்கம் வரவில்லை.

புவனாவுக்கு இருபதுக்குமேல் 'இரண்டு மூன்று வயதிருக்கலாம். பிரயாணக் களைப்போ, கண் விழிப்போ, அல்லது அவளுடைய தோற்றத்தில் தெரிந்த ஓர் தளர்ச்சியோ சொல்ல முடியாது; மிகவும் சோர்ந்த நிலையில் அவள் சாய்ந்து கொண்டு வந்தாள். என்றாலும் அந்தச் சோர்வும் களைப்புமே அவளுக்குத் தனி அழகைத் தந்தன. வட்டமான ரோஜா முகத்தில் கண்களைச் சுற்றிக் கோடிட்டிருந்த கரு வளையங்களும், பொங்கிய மார்பகமும், ஒரு காலை மடித்து அவள் உட்கார்ந்திருந்த நிலையும் அவளுடைய தாய்மையின் நிறைவைக் கூறின.

புவனா தனக்குள் எதையோ நினைத்துச் சிரித்துக் கொண்டாள். இந்தத் தாய்மை நிலையிலிருந்து அவளைத் தனியே பிரித்துப் பார்த்தால் கட்டு விடாத அவளுடைய கைகால்களின் வலிமையைக் காண முடியும். தந்தத்தில் கடைந்தெடுத்த உறுதியான மோகனச் சிற்பம் அவள்.

நகைகள் ஒன்றும் மிகுதியாக இல்லை. இரட்டை வடம் தங்கச் சங்கிலி, காதுகளில் கம்மல்கள், கைக்கு இரண்டு வளையல்கள். மாங்கல்யம் மட்டிலும் மஞ்சள் கயிற்றில் தொங்கி அவளுடைய மார்பகத்தில் பதிந்திருந்தது. ரோஜா நிற



வாயில் புடவையும், கறுப்புப் பட்டில் ஜாக்கெட்டும் உடுத்தியிருந்தாள்.

மழை நின்று விட்டதுபோல் தோன்றியது. சன்னல் கதவைத் திறந்து விட்டாள். எதிர்ப் பக்கம் அவள் தம்பியும் சன்னலைத் திறந்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தான். ரெயில் ஓடும் சத்தத்தில் இப்போது மாறுதல் தெரிந்தது. வழக்கமான 'ஜிகு ஜிகு' 'குபு குபு' வென்ற சத்தம் மாறிக் 'கட கட, கட கட' வென்ற சத்தம் கேட்டது. ரெயில் ஆற்றுப் பாலத்தில் ஓடுகிறதா? குபீரென்று அவள் முகத்தில் அறைந்த ஈரக் காற்று அவளிடம் புது வெள்ளத்தின் மணத்தை அள்ளிக் கொட்டியது.

குனிந்து பார்த்தாள். கீழே காட்டாற்று வெள்ளத்தின் குமுறல்தான் கேட்டதே தவிர, அதன் ஓட்டம் தெளிவாய்த் தெரியவில்லை. சன்னல் வழியே வெளிச்சம்பட்ட இடங்களில் நுங்கும் நுரையுமாகக் கொப்பளிக்கும் சந்தனக் குழம்பு தெரிந்தது. காரணமற்ற பயத்தால் அவள் சட்டென்று தலையை உள்ளுக்கு இழுத்துக் கொண்டாள். ஏன் இந்த பயம்?

மின்வெட்டும் நேரந்தான்...

திடீரென்று ஆயிரம் இடிகள் ஒன்றாய் இடித்தன.

"சட்டுச் சட சடார்! சடார்! சடார்!"

மலை பெயர்ந்து 'அந்தப் பெட்டியின்மேல் விழுந்து விட்டதா? மேல் பலகையில் உறங்கிய பிரயாணிகள் கீழே கிடந்தவர்கள் மீது விழுந்தார்கள். சன்னல் கதவுகள் பிய்த்துக் கொண்டன. மின் விசிறிகள் எங்கோ பறந்தன. விளக்குகள் அணைந்த கும்மிருட்டில், சற்று முன்பு புவனா பார்த்த புது வெள்ளம் குபு குபு வென்று, வண்டிக்குள் பாய்ந்தது. இருளில் ஒன்றுமே தெரியவில்லை. ஆயிரம் உயிர்கள் ஒரே சமயத்தில் அலறின, ஓலமிட்டன, ஊளையிட்டன, கதறின...இது போன்ற ஓர் ஓலத்தைப் புவனா தன் வாழ்நாளில் கேட்டதில்லை.- ரெயில் தடம் புரண்டு தண்ணீரிலும் தரையிலுமாய்க் கவிழ்ந்து விட்டது.

புவனாவுக்கு என்ன நடந்ததென்று தெரியாது. அவள் காட்டாற்று வெள்ளத்தில் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தாள். வெறி பிடித்த அந்த வெள்ளம் அவள் பிடரியைப் பிடித்து உள்ளே அழுத்தப் பார்த்தது. அவள் அதனுடன் போராடிக் கொண்டே அது இழுத்த பக்கமெல்லாம் போனாள்.

அத்தனை ஓலத்திலும் அவளுக்குத் தன் தம்பியின் குரல் தனியே கேட்டது.

"அக்கா! அக்கா! நீ எங்கே அக்கா இருக்கே?"

தம்பிக்குப் பதில் சொல்லும் நிலையில் அவள் இல்லை. தம்பி உயிருடன் இருக்கிறான் என்று ஒரு ஆறுதல்.

வெள்ளம் அவளை அழுத்தப் பார்த்தது: அவள் வெள்ளத்தை அழுத்தி வெளியே வரப் பார்த்தாள். சிறு வயதில் கற்றுக்கொண்ட நீச்சு அவளுக்குத் துரும்பாய்க் கைகொடுத்தது.

துரும்பு ஒடிந்து விடும்போலிருந்தது: அவள் அங்குமிங்கும் இழுபட்டுக் கொண்டிருந்தாள்; வயிற்றுக்குள்ளிருந்து துரும்பைத் தொலைப்பதற்கென்றே இரும்புக்குண்டு ஒன்று உருண்டு உருண்டு தொல்லை கொடுத்தது.

மனிதர்களின் மரண ஓலம் வெள்ளத்தின் குமுறலுக்குள் இப்போது அடங்கியது. புவனாவின் கைகள் சோர்ந்தன; கால்கள் பின்னிக் கொண்டன; கண்கள் இருண்டன. ஒரு வாய்த் தண்ணீர் அவள் குடித்து விட்டாள்.

'குழந்தை பிறந்தவுடன் தந்தியடிக்கச் சொல்!' என்று காதோடு காதாய்ச் சொல்லி வழியனுப்பினான் கணவன். கடவுளே! அந்தக் கணவனுக்காக, பிறக்கப் போகும் குழந்தைக்காக, என்னைக் காப்பாற்றிக் கரை சேர்க்க மாட்டாயா?

அவள் வயிற்றில் கடவுள் கட்டிவிட்ட இரும்புக் குண்டு அவளை மேலும் உள்ளே இழுத்தது. மூன்றாவது வாய்த் தண்ணீர் மூக்கின் வழி வந்தபோது அவள் தலையில் ஏதோ ஒன்று முட்டியது. இறுகப் பற்றிக் கொண்டு அவள் தலையைத் தூக்கினாள்.

அது சவுக்க மரம். இன்னும் பல மரங்கள் எதிரே தெரிந்தன. ஆனால் அணுவளவு கூட அந்த இடத்தைவிட்டு அசையஅவள் உடம்பில் வலுவில்லை. கிடைத்ததைப் பற்றிக்கொண்டு. அவள் தொங்கினாள்.

இடுப்பளவுத் தண்ணீருக்குக் கீழே எத்தனை ஆழமோ தெரியாது. சவுக்க மரச்சிலாம்புகள் அவளது மிருதுவான மார்பகத்தைமுள்ளாய்க் குத்தின. கால்களைக் கீழே நெருக்கமாக இடுக்கிக்கொண்டாள். வயிற்றை மட்டிலும் மரத்தில் அழுந்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. எத்தனை நேரந்தான் இப்படி அந்தரத்தில் தொங்குவது?

கண்கள் இருளுக்குப் பழகி விட்டனவோ, அல்லது பொழுதுதான், உண்மையில் விடிந்து கொண்டு வந்ததோ, சுற்றுப்புற உலகத்தை அவளால் பார்க்க முடிந்தது. அவளுக்கு முன்னாலும் பின்னாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாய்ப் பிணங்கள் மிதந்தன. அவளுடைய காலிலேயே ஒரு பெண்ணின் உடல் தட்டுப்பட்டது. வேகமாக உதறி விட்டாள். அடுத்தாற் போலிருந்த ஒரு மரத்தில் ஒதுங்கியது. அதைக்காணச் சகிக்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சவுக்கத் தோப்புக்குள் அவளுக்கு எதிரில் இன்னும் பத்தடி தூரந்தான் தண்ணீர் ஓடியது. அதுவும் வேகம் குறைந்து வற்றிக்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

அருள் வாக்கு

ஈச்வரன் இருக்கிறான். இருந்து தான் ஆக வேண்டும். ஒரு சின்ன அநுமானத்தை இப்பொழுது பார்க்கலாம்:—இந்த ஆஸனம் ஒருவன் பண்ணித்தான் ஆகியிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். பண்ணினவன் தெரியா விட்டால் பண்ணினது பொய் என்று சொல்லலாமா? வேறு ஆஸனங்களைப் பண்ண நாம் பார்த்திருக்கிறோம். அதைக் கொண்டு இதையும் பண்ணினவன் ஒருவன் இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்கிறோம். அவனுக்கு இதைப் பண்ணுகிற சக்தி உண்டு என்பதையும் அறிந்து கொள்கிறோம். அதைப் போல் எல்லாவற்றையும் பண்ணுகிறவன் ஒருவன் இருக்கிறான். அவன் சர்வக்ஞன் சர்வ சக்திமான்.

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடிபீடம்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★



கொண்டு வருவதாய்த் தோன்றியது. ஆனால் அவனால் இனி ஒரு அடிகூட நகர முடியாது.

சவுக்குத் தோப்புக்கப்பால் சில கூரைக் குடிசைகள் தென்பட்டன. ஆணும் பெண்ணுமாய்ச் சிறு கூட்டம் ஒன்று அங்கிருந்து விபத்து நடந்த இடத்தை நோக்கி ஓடியது. புவனா ஆவலோடு அந்த மனிதர்களைப் பார்த்தாள்; ஆனால் அவர்கள், இவளைப் பார்க்கவில்லை. தன் அடித்தொண்டையால் அவர்களை நோக்கிக் கத்தினாள். ஒரே ஒரு மனிதன் மட்டிலும் நின்று பார்த்துவிட்டு, இவளுடைய குரலையோ உருவத்தையோ தெரிந்து கொள்ளாமல் முன்போல் ஓடினான்.

கத்திய கத்தலுக்குச் சவுக்குத் தோப்பின் உறுமல்தான் எதிரொலி. தொண்டைத் தண்ணீர் வற்றியதுதான் மிச்சம். அடிவயிற்றை அவளுக்கு என்னவோ செய்தது. இதென்ன வேதனை? இன்னும் ஒருமாசம் இருக்கிறதே!

புவனாவின் கண்களுக்கு இப்போது தொலை தூரத்தில் ஒரு உருவம் நின்று தன்னைப் பார்ப்பது தெரிந்தது. மனித உருவந்தானா அது?

புவனா ஒரு கையில் மரத்தைப் பிடித்துக் கொண்டு ஒரு கையை ஆட்டினாள். மீண்டும் கூக்குரலிட்டாள்.

குடிசைகள் தெரிந்த திசைக்குச் சற்றுக் கிழக்கே தன்னிக் கைகளையும் கால்களையும் ஆட்டிக்கொண்டு அந்த உருவம் ஓடி வந்தது. பிடரியில் வந்து தொங்கும் பரட்டைத் தலை, நீண்ட முகம், சப்பைக் கன்னங்கள், சிறுத்த உதடுகள், இடுங்கலான கண்கள். அந்த மனிதனைப் பார்ப்பதற்கே புவனாவுக்கு மிகவும் பயமாக இருந்தது. எங்கோ சர்க்கஸ் கொட்டகையில் பார்த்த மனிதக் குரங்கின் நினைவு வந்தது அவளுக்கு.

முகந்தான் அப்படி இருந்ததே தவிர, உடல் இரும்புதான். இடுப்பில் மட்டிலும் அழுக்கு வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டிருந்தான். கரையோரமாக நின்ற அவன் தன் இடுங்கலான கண்களை இன்னும் இடுக்கிக் கொண்டு புவனாவையும் அவளுக்கு எதிரில் தெரிந்த பிரேதத்தையும் மாறி மாறிப் பார்த்தான். விகாரமான ஒரு சிரிப்பு அவனிடமிருந்து வெளிப்பட்டது.

தண்ணீரில் இறங்கி வந்த அவன் முதலில் புவனாவைக் கவனிக்காமல் அந்தப் பிணத்திடம் சென்றான். புவனாவுக்கு அடிவயிற்றில் புளியைக் கரைத்தது.

"ஐயா! ஐயா! என்னைக் காப்பாற்று, ஐயா!" என்று கூவினாள்.

அதை அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. நீந்திச் சென்று பிணத்தை முழங்கால் தண்ணீருக்குக் கொண்டு வந்தான். முகத்தின் பக்கம் திருப்பிக் காதுகளில் தொங்கிய தோடுகளை வெடுக்கென்று பறித்தான். கழுத்தில் ஒன்றையும் காணோம். தோடுகளைப் பத்திரமாக மடியில் வைத்துக் கொண்டு, பிணத்தை வேகமாக இழுத்து ஓடுகிற வெள்ளத்தில் தள்ளி விட்டான். பிறகு அவன் பார்வை புவனாவின் பக்கம் திரும்பியது.

மூக்குத்திகள், கம்மல்கள், சங்கிலி, வளையல்கள்...இவற்றை மட்டிலும் குறி வைத்தன அவன் கண்கள்.

புவனா புரிந்து கொண்டாள்.

"ஐயா! நகைகளெல்லாம் எடுத்துக்கொள்; நானே கழற்றித் தந்து விடுகிறேன். என்னை மாத்திரம் காப்பாற்றினால் உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு" என்றாள்.

அவன் பதில் பேசவில்லை; தண்ணீரில் தாவி அவள் பக்கமாக வந்து மரத்தைப் பிடித்துக் கொண்டான். முரட்டுத்தனமாக அவளுடைய இடது கை வளையல்களைப் பிடித்து இழுத்தான். ஒரு கையால் பற்றிக்கொண்டு மறு கையை நீட்டினாள். மணிக்கட்டில் சதை பிய்த்துக் கொண்டு ரத்தம் கொட்டியது. வலது கரத்துக்கும் அதே கதிதான்.

அந்த இடம் சரிப்படாதென்று நினைத்து அவளை மரத்திலிருந்து பிய்த்து இழுத்து இடுப்பளவுத் தண்ணீருக்குக் கொண்டு வந்தான். அவளாகவே கம்மல்களையும் மூக்குத்திகளையும் கழற்றிக் கொடுத்தாள். அதற்குள் அவன் வெடுக்கென்று கழுத்துச் சங்கிலியைப் பற்றி அறுத்தான். மஞ்சள் கயிற்றில் அவன் கைவைத்தபோது அவள் கையெடுத்துக் கும்பிட்டாள். கண்களில் நீர் முட்டியது.

"இதை மாத்திரம் தொடாதே ஐயா! உனக்குப் பெண்டாட்டி பிள்ளை இல்லையா?"

புவனா கரைப் பக்கம் ஓட யத்தனித்தாள். அவன் விடவில்லை. கூந்தல் அவன் பிடியில் அகப்பட்டிருந்தது.

"இந்த உயிரைக் காப்பாற்றினதற்கு நீ நகையை வைத்துக் கொள், ஐயா. என்னை விட்டு விடு! நான் எப்படியோ போய்ப் பிழைத்துக் கொள்கிறேன்."

முதல் முதலாக அவன் வாய் திறந்தான். அந்த வாயில் திருட்டுச் சாராய நெடி.

"சரிதான்! என்னைப் போலீஸிலே பிடிச்சுக் குடுக்கப் பார்க்கிறியா?"

"நீ என்னை விட்டுவிடு. நான் யாரிடமும் இதைச் சொல்ல மாட்டேன். நிறை மாதக்காரி ஐயா நான்! என்னோட பாவம் உன்னைச் சும்மா விடாது. எனக்கு உயிர்ப் பிச்சை கொடு; நான் இந்த உயிருள்ள வரை உன்னை மறக்க மாட்டேன்."

அவன் கால்களில் விழுந்து அவள் முட்டி மோதிக் கொண்டாள்; கதறினாள்.

நகைகளைப் பத்திரமாக மடியில் கட்டிக் கொண்டான். அவளை உருட்டி விழித்தான். ஒரே தூக்காகத் தூக்கித் தன் பலங்கொண்ட மட்டும் நடு வெள்ளத்தில் வீசினான். பிறகு திரும்பிப் பார்க்காமல் விபத்து நடந்த இடத்தை நோக்கி ஓடினான்.

புவனா என்ன செய்வாள்?—திரும்பவும் பழைய கதைதான்; அதைவிட மோசம். அப்போதாவது உடலில் வலு, உள்ளத்தில் தெம்பு, எண்ணத்தில் நம்பிக்கை இவ்வளவும் இருந்தன. இப்போது என்ன இருக்கிறது?

புவனாவின் கண்கள் சுழன்றன. தண்ணீரைத் தாய் என்று சொல்கிறார்களே, அந்த மாபாவித் தாயை நினைத்துக் கொண்டாள்; கண் கண்ட தெய்வமான கணவனையும், காணப் போகும் தெய்வம் என்று நம்பிய குழந்தையையும் நினைத்துக் கொண்டாள். தெய்வம், நூற்றுக்கணக்கான பேர்களை நொடிப் பொழுதில் தின்று ஏப்பம் விட்ட தெய்வம், அவளைக் கைவிடவில்லை.

கண்களைத் திறந்தபோது அவள் கரை தட்டிக் கிடந்தாள். ஈர மண்ணுக்கு அப்பால், புல் தரையில், நனைந்த புடவைக்குப் பதிலாகக் கிழிந்த கந்தல் ஒன்றைச் சுற்றிக் கொண்டு தலை மயிரை யாரோ ஒரு பெண்மணி துவட்டிக் கொண்டிருக்கும் நிலையில் கிடந்தாள். வைத்த கண் வாங்காமல் அந்தக் கிராமத்துப் பெண்ணை நோக்கினாள். நரகமும் சொர்க்கமும் அடுத்தடுத்த வீடுகள் போலும்.

"பச்சைக் கிளி மாதிரி இருக்கிறாயே அம்மா! கையெல்லாம் என்னம்மா ரத்தம்?"

ரத்தக் கண்ணீர் வராத குறை புவனாவுக்கு. கண்களை அவள் துடைக்கத் துடைக்க அது வற்றாத ஊற்றாகியது.

"வாயும் வயிறுமா இருக்கிறாயே, தாயே? நிறை மாசம் போலே இருக்கே?"

"ஆமாம், தாயே!"

'தாயே!' என்று புவனா நெஞ்சின் அடித்தளத்திலிருந்து அவளை அழைத்தாள்.

அரை நாழிகைப் பொழுதில் மருதாயி சிறிது சிறிதாகக் கேட்டு நடந்த கதை முழுவதும் புவனாவிடமிருந்து தெரிந்து கொண்டாள். 'ஆறு பவுன் நகைக்காக ஒரு பிள்ளைத் தாய்ச்சியைக் கொலை செய்கிற பாதகனைக் கூடவா இன்னும் இந்த மண் சுமந்து கொண்டிருக்கிறது?' எனக் கேட்டது அவள் மனம்.

புவனாவின் இடுப்பு விண்விண்ணென்று தெறித்தது. "ஐயோ, அம்மா!" என்று அவள் விட்டு விட்டுக் கதறினாள்.

"இடுப்புவலி போலேயிருக்கே? கைத்தாங்கலாக என் குடிசைக்குக் கூட்டிக்கிட்டுப் போறேன். அடுத்த வீட்டுக் கிழவிக்கு மருத்துவம் தெரியும். வா, அம்மா!"

அவளைத் தூக்கிப் பிடித்தபடி மேலே சாய்த்துக் கொண்டே நடந்தாள் மருதாயி. பத்தடி தூரம் வந்திருப்பார்கள். இன்னும் நாற்பதடி போனால் முதல் குடிசை அவளுடையது. புவனாவால் நடக்க முடியவில்லை. மயங்கிக் கீழே விழுந்து விட்டாள்.

பம்பரமாய்ச் சுழன்றாள் மருதாயி. தொட்டிலில் உறங்கும் தன் பையனை ஒரு கணம் எட்டிப் பார்த்துவிட்டு, ஐந்து வயதுப் பெண்ணை எதிர்க் குடிசையில் விட்டு விட்டு அடுத்த வீட்டுக் கிழவியிடம் ஓடினாள். வைக்கோலைக் கொண்டு வந்து தரையில் பரப்பினார்கள். கந்தலை விரித்தார்கள். உலைத் தண்

அருள் வாக்கு

ஒரு வீட்டில் திருட்டு நடந்துவிட்டது. திருடனைக் கண்டு பிடிக்க மண்ணில் பதிந்திருக்கும் அவனுடைய கால் அடையாளம் முதலியவைகளைக் கவனிக்கிறோம். சிருஷ்டி கர்த்தா ஒருவன் நமது கண்ணுக்குத் தெரியாமல் இருக்கிறான் என்று தெரிகிறது. அவன் இருக்கிறான் என்பதற்கு என்ன அடையாளம்? நாமேஒரு அடையாளம்.

ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

ணீர், சட்டிகள், தொப்புள் கொடி அறுக்கக் கத்தி எல்லாம் வந்தன. புவனா துடியாய்த் துடித்தாள்; ஒரு உயிரை இந்த உலகத்தில் தோற்றுவிப்பதற்காக அதைச் சுமந்த மற்றொரு உயிர் துடிக்கும் துடிப்பு.

சூரியன் கிழக்கே உதயமாகும் நேரத்தில் குழந்தையின் சிரமும் உதயமாகியது.

'வீல்' என்று கத்திக் கொண்டே பிறந்தான் ஒரு புது மனிதன்.

சவுக்கத் தோப்பு தன் துன்பத்தை மறந்து சிரித்தது. கிழவி பொக்கைப் பல்லைக் காட்டினாள். பிணங்களைச் சுமந்து வடிந்த புது வெள்ளம் ஒரு ஓரமாக விலகிக் கொண்டு எட்டிப் பார்த்தது. காலைப் பறவைகள் சிறகடித்தன. மருதாயி பூரித்துப் போனாள். புவனா மெல்லத் திரும்பித் தன் செல்வத்தைப் பார்த்தாள். இந்த உலகத்துக்கே விடியும் காலம் வந்து விட்டதா?

கிராமத்துப் பெண்கள் சிலர் அங்கு கூடி விட்டார்கள். குழந்தை தாயாரை உரித்துக் கொண்டு பிறந்திருந்தான். வட்ட முகம், பெரிய கண்கள், கைகளையும் கால்களையும் உதறிக் கொண்டு அவன் கத்தினான். ஒன்பது மாதத்தில் பிறந்தாலும் குறைமாதக் குழந்தையாக அவன் தோன்றவில்லை.

இதற்குள் சவுக்கத் தோப்பில் திடீரென்று சில அதிகாரக் குரல்கள் எழுந்தன. காக்கிச் சட்டையும் தொப்பியும் வைத்த போலீஸ் அதிகாரிகள் பிரம்புகளைச் சுழற்றிக் கொண்டு அந்தப் பக்கம் நடந்து வந்தார்கள்.

"என்ன கூட்டம் அங்கே?"

மருதாயி ஓடிப் போய் அவர்களை வழி மறித்தாள்.

"இங்கேயே நில்லுங்கய்யா! நீங்க அங்கே வரக் கூடாது."

"ஓஹோ! திருட்டுச் சொத்தைப் பங்கு போடற வேலையா? இல்லே, பிணத்தைக் கூறு போடறீங்களா?"

மருதாயி மாரியாத்தாளாக - ஆவேசம் வந்த மாரியம்மனாக மாறினாள்.

"உங்க மனசுக்கு நல்லதை நினைச்சுப் பார்க்கவே தெரியாதோ? திருட்டுப் பயலே, கொலைகாரப் பாவியை, பிள்ளைத் தாய்ச்சியைத் தண்ணீரிலே இழுத்துவிட்ட பிணந் தின்னிக் கழுகை விட்டுட்டு இங்கே எதற்காக ஐயா வந்தீங்க?"

மருதாயி ஆத்திரம் தீரக் கத்தி, அந்தப் பச்சைக் கிளியை பரதவிக்க வைத்த பாதகனின் செய்கையை அவர்களுக்கு உணரவைத்தாள். அவர்கள் நின்று யோசித்தார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு புரியாத பாஷையில் பேசிக் கொண்டார்கள். போலீசைக் கண்டவுடன் மற்றப் பெண்கள் நழுவியதால் கிழவி மாத்திரம் புவனாவின் அருகில் இருந்தாள்.

"போலீஸ்காரர்களில் ஒருவர் மருதாயியைப் பார்த்துப் பேசினார்:

"நாலைந்து பேர்களை நகையோடு பிடித்திருக்கிறோம். இங்கே கொண்டு வந்தால் அந்த அம்மாள் அடையாளம் காட்டுவார்களா? கூட்டிக்கொண்டு வருகிறோம்."

"கூட்டிக்கிட்டு வாங்கையா! உங்க பிள்ளை குட்டி நல்லா இருக்கணும்."

சற்றுநேரத்தில் கைகளில் விலங்கு மாட்டப்பட்ட ஐந்து கிராமவாசிகள் அங்கே கொண்டு வரப்பட்டார்கள். அவர்களில் ஒருவனைப் பார்த்தவுடன் வீறிட்டுக் கத்தி விட்டாள் மருதாயி. தேகமெல்லாம் அவளுக்குப் பதறியது.

"அம்மா! இதில் யாராவது உண்டா?" என்றார் போலீஸ் அதிகாரி.

பிரசவித்த பச்சை முகம் வேதனையுடன் ஒவ்வொரு மனிதனையும் உற்றுப் பார்த்தது. நான்காவதாகத் தலையைத் தொங்க விட்டுக் கொண்டு நின்ற பரட்டைத் தலையனை, இடுங்கிய கண்களுள்ள மனித மிருகத்தை, புவனா தன் கையை உயர்த்திக் காண்பித்தாள். பிறகு அவனைக் காணப் பயப்படுகிறவள்போல் தன் கண்களை மூடிக் கொண்டாள்.

சவுக்கத் தோப்பே அதிருவதுபோல் அலறினாள் மருதாயி.—"அட, பாவி! நீ தானா?"

புவனாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"இவன் என் புருஷனம்மா, புருஷன்!"

புவனாவுக்குச் சொல்ல முடியாத உணர்ச்சிகள் முகத்தில். தன் பலமெல்லாம் சேர்த்துக் கொண்டாள். அந்தப் போலீஸ் அதிகாரிகளைப் பார்த்துக் கெஞ்சுவதுபோல் வேண்டிக் கொண்டாள்.

"இவனை விட்டு விடுங்களையா; ஏதோ தெரியாமல் செய்துவிட்டான். நான்தான் பிழைத்துக் கொண்டேனே!"

கண்களில் நெருப்புத் தெறிக்கத் தன் புருஷனைப் பார்த்தாள் மருதாயி.

"இவனையா விடச் சொல்றீங்க? இந்தக் கொலைகாரப் பாவி என் புருஷனில்லே! ஐயா, இவனுக்கெல்லாம் பெண்டாட்டி எதுக்கு? பிள்ளை எதுக்கு?—அட பாவிப் பயலே, இந்தப் பச்சைப் பாலகன் முகத்தைப் பாருடா!—இந்தப் பச்சைக் கிளியோட முகத்தைப் பாருடா!—ஐயா, இவன் கள்ளச் சாராயத்துக்கு என் தாலியை அறுத்தவன் ஐயா! நான் பொறுத்திருந்தேன். இனிப் பொறுக்க மாட்டேன். இவனை விட்டா என் குடும்பம் நல்லா இருக்காது. இவனைக் கொண்டுபோய்ச் செயிலிலே அடையுங்கய்யா! தூக்குப் போட்டுக் கொல்லுங்கையா!..நானும் என் ரெண்டு புள்ளையும் எப்படியாவது போறோம்."

காறி அவன் முகத்தில் உமிழ்ந்தாள் மருதாயி. தன் கை வலிக்கு மட்டும் அவனை ஓங்கி ஓங்கி அறைந்தாள். போலீஸ்காரர்கள் அவனை அழைத்துக் கொண்டு திரும்பினார்கள்.

தன்னுடைய புருஷனின் உருவம் கண்ணுக்கு மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பிறகு துயரம் தாளாமல் மருதாயி கதறி அழுதாள். நீண்ட நேரம் அழுதாள். கடைசியில் புதிய குழந்தையின் அழுகை அவளுடைய அழுகையை நிறுத்தியது.

அதை எடுத்து உற்றுப் பார்த்தாள். பெற்றவளின் முகத்தருகே கொண்டு விட்டு முத்தம் கொடுக்கச் செய்தாள். தானும் ஒரு முத்தம் கொடுத்தாள்.

அழுகையை நிறுத்தி விட்டுக் குழந்தை ஒரு கணம் உதட்டை நெளித்தது. அது என்ன புன்னகையின் ரேகைத் துணுக்கா? சாவும், பயங்கரமும், கொலை கொள்ளையும், மிருகத் தனமும் நிறைந்த இந்த உலகத்தில் மனிதத் தன்மை அறவே அழிந்துவிடவில்லை என்பதற்காக அந்தக் குழந்தை மருதாயியைப் பார்த்து நம்பிக்கை கொண்டு அப்படிச் சிரிக்கிறதா?




நாய்க்கு எலும்புத்துண்டு அவசியம்போல

உங்கள் காருக்கு **மோபிலாயில்** அவசியம்

...கார் சுகமாக ஓட அத்தியாவசியமான ஒரு **ஸ்டான்வாக்** தயாரிப்பு

மோபிலாயில் எங்கள் மோட்டார் எண்ணெயின் வர்த்தகப் பெயரேயன்றி, மோட்டார் எண்ணெய்களைக் குறிப்பிடும் பொதுவான பதமல்ல. இது பறக்கும் செங்குதிரை அடையாளமுள்ள இடத்தில் மட்டுமே கிடைக்கும்.



ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி

(யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பெற்றது: கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)


புதுமை பெறுக!
இதம் பெறுக!
மணமுள்ள சார்மிஸ் டால்கம் பௌடர் உபயோகித்த பின் நீங்கள் பெறும் உணர்ச்சிகள் இவை. சார்மிஸ் குளுமையும் புத்துணர்ச்சியும் அளிக்கிறது ... உன்னத மனோ ரம்மிய மணம் கொண்டது.
சார்மிஸ்
டால்கம் பவுடர்
உன்னத, மனோரம்மிய மணத்துடன்.


நரஸூ காபி
அருந்தி அதன் பிரத்யேகமான ருசியை அனுபவியுங்கள்
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கோ. பிரைவேட் லிட். சேலம் & சென்னை



புது நாட்டின் பொன்வாழ்வு

"ஜெயமணி"

பாய்மரக் கப்பலில் போர்ச்சுகீயர்கள் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் திரிந்து கொண்டிருந்தபோது, சில மைல்களுக்கு அப்பால் அவர்களுடைய கண்களைப் பறிக்கும் ஒரு காட்சி தென்பட்டது. பாய் விரித்தது போல் பல மைல்கள் தூரத்துக்குத் தண்ணீர் பளபள வென்று தங்கமயமாக இருந்தது. சூரிய கிரணங்களின் ஒளியினால் தண்ணீர் அவ்விதம் மின்னுவதாகவும் சொல்வதற்கில்லை. ஏனெனில், அப்போது சூரியன் மற்றொரு திசையில் இருந்தது.

எனவே, அருகில் சென்று அந்த அற்புதமான காட்சியின் மர்மத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அந்தப் போர்ச்சுகீயர்களுக்கு உண்டாயிற்று. உடனே அவர்கள் தங்கள் கப்பலை வெகு வேகமாக அந்தப் பக்கம் செலுத்திக் கொண்டு சென்றார்கள்.

அவர்களுடைய கண்களைப் பறித்த அந்த ஒளி மண்டலம் தண்ணீரிலிருந்து வரவில்லை என்பதையும், கடற்கரையிலிருந்தே வருகிறது என்பதையும் அவர்கள் அறிந்தபோது அவர்களுடைய வியப்பு பன்மடங்கு அதிகமாயிற்று.

அவர்கள் கரையில் இறங்கிய அப் பிரதேசத்தில் தங்கமயமான மணல் பாய்போல் மைல் கணக்கில் விரிந்து கிடப்பதைக் கண்டு அவர்கள் ஆச்சரியக் கடலில் மூழ்கினர். பிறகு அந்த மணலைப் பரிசீலனை செய்தபோது, அது உண்மையிலேயே உயர்ந்த மாற்றுள்ள தங்கத் துகள் கலந்த மணல் என்பது தெரிந்தது.

அதிலிருந்துதான் அப் பிரதேசம் தங்கக் கடற்கரை அதாவது கோல்டுகோஸ்ட் என்று வழங்கலாயிற்று.

பதினைந்தாம் நூற்றாண்டில்தான் மேலே குறிப்பிட்ட சம்பவம் நிகழ்ந்தது. அதிலிருந்து முதலில் போர்ச்சுகலின் ஆதிக்கத்திலிருந்த கோல்டுகோஸ்டு பிறகு பிரிட்டிஷாரின் வசமாகி, நானூறு ஆண்டு அடிமை வாழ்வுக்குப் பிறகு இந்த மார்ச்சு மாதம் ஆறும் தேதி சுதந்திரம் அடைந்தது.

கானா என்ற பெயருடன் புது வாழ்வை ஆரம்பித்துள்ள அந்த நாடு சுதந்திரம் பெற்ற உடனே சிறிதும் காலதாமதம் செய்யாமல் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்தினராகச் சேர்ந்தது உலக மக்கள் வரவேற்க வேண்டிய விஷயமாகும்.

ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் இன்னும் சுதந்திரம் பெற முடியாமல் அல்லல்பட்டு வரும் நாடுகள் ஏராளமாக உள்ளன.

1945-ம் வருஷத்துக்குப் பின், அதாவது இரண்டாவது உலக மகாயுத்தத்துக்குப் பிறகு, ஒரு சில நாடுகளே சுதந்திரம் பெற்றுள்ளன என்பதையும், இன்னும் பல நாடுகள் அடிமை இருளிலிருந்து விடுதலை பெறவில்லை என்பதையும், இங்கு வெளியாகியுள்ள ஆப்பிரிக்கா படங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். அவை சுதந்திரம் பெறுவதற்காக ஐ. நா. சபையில் நடக்கும் போராட்டத்துக்கு இனி கானா நாடும் ஆதரவளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல் முதலிய நாடுகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டுச் சுதந்திரம் இழந்துள்ள நாடுகளே இங்குள்ள ஆப்பிரிக்கா படத்தில் கறுப்பு வர்ணத்தில் தீட்டப்பட்டிருக்கின்றன.

எரிகிற வீட்டில் பிடுங்கின வரையில் ஆதாயம் என்பதற்கு இணங்க, அக்காலத்தில் ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட குழப்பங்களையும் நெருக்கடிகளையும் தங்களுக்குச் சாதகமாக உபயோகப் படுத்திக் கொண்டு பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், போர்ச்சுகல் முதலிய சகல நாடுகளும் அக் கண்டத்தில் உள்ள நாடுகளைப் பங்கு போட்டுக்கொண்டன.

* * *

இந்த மார்ச்சு மாதம் ஆறும்தேதி வரையில் கோல்டுகோஸ்ட் என்ற பெயருடன் விளங்கிய ஆப்பிரிக்கா நாடு, அன்று சுதந்திரம் பெற்று கானா என்ற பெயருள்ள நாடாக மாறிப் புது வாழ்வு தொடங்கி விட்டது!

இந்தப் புதிய பெயர் கானா மக்கள் சம்பந்தப்பட்ட வரையில் பழைய பெயர்தான். சென்ற எழுநூறு ஆண்டுகளாக கானா மக்கள் கண்டு வந்த கனவு பலித்து விட்டது என்பதையே மேற்படி புதிய பெயர் காட்டுகிறது.

சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் சஹாரா பாலைவனத்தின் தென் பகுதியில் கானா என்ற மாபெரும் சாம்ராஜ்யம் இருந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. அதாவது கி. பி. 300—1100 ஆண்டுகளில் கானா சாம்ராஜ்யம் ஆப்பிரிக்காவில் மிகுந்த செல்வாக்குடன் இருந்ததாகத் தெரிகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் அராபியர்கள் படையெடுத்து வந்ததால், அந்த சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றது. அக்காலத்தில் சிதறி ஓடிய மக்கள் தான் இன்று கானாவில் வாழும் மக்கள் ஆவர்.

91,843 சதுர மைல்கள் விஸ்தீர்ணம் உள்ள கானாவில் நாற்பத்தாறு லட்சம் மக்களே வாழ்கிறார்கள். அவ்வளவு சிறிய நாடாக இருந்து அது இன்று உலகத்தின் கவனத்தை இழுத்திருப்பதற்கு முக்கிய காரணம் உண்டு.

கானாவைக் காட்டிலும் பன்மடங்கு பெரிய நாடுகள் இன்று ஆப்பிரிக்காவில் அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற முடியாமல் தத்தளித்து வருகின்றன. ஆப்பிரிக்காவின் பெரும் பகுதியும் அடிமை இருளால் சூழப்பட்டிருக்கிறது. அந்த நாடுகள் ஐரோப்பியர்களின் இரும்புப் பிடியில் அகப்பட்டுத் தவித்து வருகின்றன.

எனினும், மிகச் சிறிய தேசமான கானா இரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெற்றதைக் கண்டு மற்ற ஆப்பிரிக்க நாடுகளில் ஆதிக்

கம் செலுத்தும் ஐரோப்பியர்கள் அதிர்ச்சி யடைந்து விட்டார்கள். அவர்கள், ஆப்பிரிக்காவிலிருந்து தாங்கள் மூட்டை கட்டும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்பதை உணர்ந்து கொண்டு விட்டார்கள். எனவே, சுதந்திர இலட்சியத்தில் வெற்றி பெற்றுள்ள கனு, மற்ற ஆப்பிரிக்கா நாடுகளும் சுதந்திரம் அடைவதற்கான உத்வேகத்தையும் உறுதியையும் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சுதந்திரப் போராட்டத்தில் கனு மக்கள் இரத்தம் சிந்தவில்லையாயினும், கஷ்ட நஷ்டமின்றி எளிதில் சுதந்திர இலட்சியத்தை அடைந்துவிடவில்லை. கனு நாட்டின் தலைவர்களும் மக்களும் பல ஆண்டுகள் கஷ்ட நஷ்டங்களை அனுபவித்த பின்தான் சுதந்திரம் அடைவது சாத்தியமாயிற்று.

சுதந்திர கனுவின் முதலாவது பிரதமமந்திரி பதவிக்கு வந்துள்ள டாக்டர் குவாமி நக்ருமா முதலியதலைவர்கள் பிரிட்டிஷாரால் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில்கஷ்டப்பட்டார்கள்.

அவர்கள் சிறையில் இருந்தபோது, பிரிட்டிஷார் தயாரித்த கண் துடைப்பு அரசியல் திட்டத்தின் கீழ் 1951-ம் ஆண்டில் தேர்தல்கள் நடந்தன. ஆனால், தேர்தல்களின் முடிவு பிரிட்டிஷார் எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக முடிந்தது!

அந்தத் தேர்தலில் மொத்தம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 38 ஸ்தானங்களில் நக்ருமா கட்சிக்கு 34 ஸ்தானங்கள் கிடைத்து விட்டன. உள் நாட்டில் ஒற்றுமையின்மையும் கட்சிப் போட்டியும் இருந்ததின் காரணமாகத் தேசபக்தர்கள் அடங்கிய நக்ருமா கட்சிக்கு அத்தனை அதிக ஸ்தானங்கள் கிடைக்காது என்று பிரிட்டிஷ் சர்க்கார் எண்ணி யிருந்தார்கள். ஆனால், கனு மக்கள் பிரிட்டிஷாரை ஏமாற்றி விட்டார்கள்!



மறுபடியும் 1954-ல் அந்த நாட்டின் மக்கள் சபை விஸ்தரிக்கப்பட்டது. அவ்வாண்டில் நடந்த தேர்தலில் மொத்தம் உள்ள 104 ஸ்தானங்களில் நக்ருமா கட்சியினர் 72 ஸ்தானங்களைத் தட்டிக் கொண்டு போய் விட்டார்கள். எதிர்க் கட்சியினரும் அவர்களுடைய தலைவரும் படுதோல்வி அடைந்தார்கள்.

பிரிட்டிஷாரின் சூழ்ச்சி அத்துடன் நின்று விடவில்லை. அதன் பிறகு அவர்கள் பிரித்தாளும் முறையைக் கையாளமுற்பட்டார்கள். அந்த நாட்டில் உள்ள இரண்டொரு குட்டி மன்னர்களைத் தூண்டி விட்டார்கள். அவர்கள் அந்த நாட்டைத் துண்டாக்கி ஒவ்வொரு பிரதேசத்துக்கும் சுயாட்சி வழங்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். நக்ருமா ஒரு சர்வாதிகாரி என்ற பல்லவியைப் பாடி மக்கள் மனத்தை மாற்றுவதற்கு முயற்சித்தார்கள்.

நக்ருமா, அந்த விபரீத முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிந்து விடத் தீர்மானித்தார். தேர்தல்கள் நடந்த ஒரு வருஷத்துக்குள் மறு தேர்தல்கள் நடத்த உறுதி கொண்டார்.

ஐக்கிய ஆட்சி முறை வேண்டுமா? அல்லது பிரதேச சுயாட்சி முறை வேண்டுமா? என்பதை மக்களின் தீர்ப்புக்கு விட்டுவிட வேண்டும் என்பதற்காகவே நக்ருமா மறு தேர்தல் நடத்த முடிவு செய்தார்.

அந்தத் தேர்தலிலும் நக்ருமா கட்சியினரே பெரும்பான்மையான ஸ்தானங்களைப் பெற்றதால், பிரிட்டிஷாரின் கையாட்களான எதிர்க் கட்சியினர் வாயடைத்துப் போனார்கள்.

இருந்தாலும் அவர்கள் தங்கள் தீய முயற்சியை விடவில்லை. நாட்டில் ஒற்றுமையில்லாததால், கனு மக்களுக்குச் சுதந்திரம் அளிப்பதை ஒத்தி வைக்க வேண்டும் என்று பிரிட்டிஷாரைக் கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால் நக்ருமா சாத்துவிகமாகவும் பிரிட்டிஷார்மீது துவேஷம் கொள்ளாமல் நட்புடனும் இருந்ததால், சிறந்த ராஜதந்திரிகளான பிரிட்டிஷார் காலப்போக்கை உணர்ந்து கனு மக்களுக்குச் சுதந்திரம் அளித்துவிட்டார்கள்.

மேற்கொண்டு பிரிட்டிஷார் சூழ்ச்சி செய்ய இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே நக்ருமா, கனு காமன்வெல்த் நாடுகளின் ஒன்றாக இருந்து வரும் என்று பிரகடனம் செய்துள்ளார்.

சென்ற மாதம் ஆறும் தேதி கனுவில் சுதந்திர விழா நடந்தபோது, அதில் கலந்து கொள்வதற்காக பிரிட்டிஷ் ராணி எலிஸபெத் தம்முடைய பிரதிநிதியாக கென்ட் சீமாட்டியை அந்த நாட்டுக்கு அனுப்பி வைத்தார். அமெரிக்க ஜனாதிபதி ஜெனரல் ஐசனோவரும் தம்முடைய பிரதிநிதியாக உபஜனாதிபதி நிக்ஸனை அந்த நாட்டுக்கு அனுப்பியிருந்தார். இந்தியா உள்பட்ப் பல நாடுகளின் பிரதிநிதிகள் கனுவுக்குச் சென்று சுதந்திர விழாவில் கலந்து கொண்டார்கள். இதிலிருந்து சுதந்திர கனுவிடம் அமெரிக்கா, பிரிட்டிஷ் வல்லரசுகள் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளலாம்.

* * *

கானாவில் பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட்டுச் சுதந்திரப் பொன் கொடி ஏற்றப்பட்டபோது.

அழகிய பளபளப்பான
கூந்தலின் ரகசியம் . . .



. . . . .

அழகுமிக்க பளபளப்பான கூந்தலைப் பெற்றிருப்பதன் ரகசியம் ஒழுங்கான பாதுகாப்பு மட்டுமல்ல, சரியான தலைமயிர்த் தைலம் தேர்ந்தெடுப்பதும் கூட.

காஸ்ட்ராலை உபயோகிப்பதால் கூந்தல் நன்கு வளருகிறது. பொடுகு தடுக்கப்படுகிறது. மயிர் உதிர்வது நிற்கிறது என்றுணர்ந்தவர்கள் அதை தேர்ந்தெடுக்கிறார்கள்.

சுத்தப்படுத்தப்பட்ட விசேஷ எண்ணெயிலும் தயாரிக்கப்பட்ட இந்த ரம்மிய வாசனை கொண்ட கூந்தல் தைலம் தலைமயிருக்குப் புது பளபளப்பு தருகிறது.

5, 10 அவுன்ஸ் வசீகர புட்டிகளில் கிடைக்கும்

காஸ்டரால்

தனிப்பட்ட குணம் பெற்ற
கூந்தல் தைலம்



தி கல்கத்தா கெமிகல் கம்பெனி, லிட்,
கல்கத்தா - 29.

[தென் இந்தியக் கிளை : 1/143, மௌண்ட் ரோட், மதராஸ்]

Tamil-14

ஆஸ்த்மா சளி
முதல் நாளே கரைகிறது

ஆஸ்த்மா, பிராங்கைட்டிஸ், ஜலதோஷத்தால் மூச்சுத்திணறல், இருமல், தும்மல், மூச்சடைப்பு உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இப்போது மெண்டாகோ (Mendaco) அருந்தி அற்புத நிவாரணம் அடைகிறார்கள். இந்த நவீன, விஞ்ஞான, அமெரிக்க மருந்து இரத்தத்தின் வழியே சுவாசப் பைகள், சுவாசக் குழாய்கள், மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் தும்மலின்றி சுலபமாக சுவாசித்து குழந்தைபோல் தூங்கலாம். கெமிஸ்டிடம் மெண்டாகோ (Mendaco) வாங்குக. திருப்தி இன்றேல் பணம் வாபஸ்.

எல்லா சோதனைகளிலும்
தேர்ச்சி பெற்ற
ஆதர்ச டூத் பிரஷ்
இன்றே வாங்குங்கள்-
அதன் குணங்
களை தெரிந்து
கொள்ளுங்கள்.



எல்லா
கடைகளிலும்
கிடைக்கும்

இந்தியாவிலேயே மிக்க
அனுபவம் வாய்ந்த டூத் பிரஷ்
தயாரிப்பவர்கள்



கனாமக்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்து ஆரவாரம் செய்தார்களாம். அடிமை நாட்டில் பிறந்து வளர்ந்த அவர்களின் இருண்ட வாழ்க்கைக்கு ஒரு முடிவு ஏற்பட்டதைக் குறித்து அவர்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்ததில் ஆச்சரியம் என்ன?

சுதந்திர கனாவின் மணிக் கொடியில் உள்ள சிவப்பு நிறம், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தியாகம் செய்தவர்களின் ஞாபகச் சின்னமாகத் திகழ்கிறது.

நடுவில் உள்ள தங்க நிறம், கனாவில் உற்பத்தியாகும் ஏராளமான தங்கத்தையும், பொதுவாக நாட்டின் செல்வத்தையும் குறிக்கிறது.

அடியில் உள்ள பச்சை, அந்த நாட்டின் வனச் செல்வத்தையும், விவசாயச் செழுமையையும் பிரகடனப்படுத்துகிறது.

மத்தியில் உள்ள நட்சத்திரம், ஆப்பிரிக்கர் விடுதலை ஒளியாகத் திகழ்கிறது.

எனவே, இவ்வளவு சிறப்புப் பொருள்கள் பொதிந்துள்ள கொடி கனாவில் முதல் தடவையாக ஏற்றுவிக்கப்பட்டபோது கனா மக்கள் மனம் உருகி உணர்ச்சி வசப்பட்டது இயல்பேயாகும்.

சுதந்திரம் இழந்திருந்த மற்ற நாடுகளைக் காட்டிலும் கனா மக்கள் அடிமைத்தனத்தின் பயங்கரத்தை அதிகமாக அனுபவித்தவர்கள் என்று கூறலாம்.

ஏனெனில் இன்று சுதந்திர கனாவாக விளங்கும் கோல்டுகோஸ்டிலிருந்து அக்காலத்தில் பிரிட்டிஷார் மக்களைக் கப்பலில் ஏற்றிச் சென்று அமெரிக்காவில் அடிமைகளாக விற்று வந்தார்கள். சரக்குகளைப் போல் மக்களை ஏற்றுமதி செய்து அடிமைச் சந்தையில் விற்பதைக் காட்டிலும் கொடுமை வேறு என்ன இருக்க முடியும்?

பதினேழாம் நூற்றாண்டிலே கோல்டு கோஸ்டில் ஆதிக்கம் செலுத்திய பிரிட்டிஷார் அதற்கு முன் அந்த நாட்டுக்கு வந்த போர்ச்சுகல், டச்சு வியாபாரிகள் அடிமைகளை ஏற்றுமதி செய்வதையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

* * *

சுதந்திர கனா சிறிய நாடாயினும், இயற்கைச் செல்வம் கொழிக்கும் நாடாகும். அதன் ஜனத்தொகை இப்போதிருப்பதைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமானால் கூட கனா மக்களின் சுபீட்ச வாழ்வுக்கு எவ்விதக் குந்தகமும் ஏற்படாது.

பதினாறும் நூற்றாண்டில் அந்த நாட்டிலிருந்து தங்கமும் தந்தமும் ஏராளமாகக் கிடைத்ததால், அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி வந்தன.

பிறகுதான் கோகோ விவசாயத்தினால் அந்த நாட்டுக்கு மிகுந்த லாபம் உண்டாகும் என்பதை உணர்ந்தனர். பிறகு, அடர்ந்த காடுகள் அழிக்கப்பட்டுக் கோகோ சாகுபடி செய்யப்பட்டது.

இன்று கனாவின் பொருளாதார சுபீட்சத்துக்குக் கோகோ உற்பத்தியே முக்கிய காரணமாக இருந்து வருகிறது. அங்கிருந்து வருஷந்தோறும் சுமார் ஒன்பது கோடி பவுன் பெறுமானமுள்ள கோகோ வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறதெனில், அதன் முக்கியத்தை உணர்ந்து கொள்ளலாம்.

அதற்கு அடுத்தபடியாக ஒரு கோடி பவுன் தங்கமும், எழுபது லட்சம் பவுன் பெறுமானமுள்ள மரங்களும், ஐம்பது லட்சம் பவுனுக்கு மேல் மாங்கனீஸ் உலோகமும், நாற்பத்தைந்து லட்சம் பெறுமானமுள்ள வைரமும் கனாவிலிருந்து ஆண்டுதோறும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

கனாநாட்டின் தலைநகரான அக்ராவில் சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

கனாவில் உள்ள நதிகளில் மிகவும் முக்கியமான வோல்டா நதி அந்த நாட்டின் வடகோடியிலிருந்து தென்கோடி வரையில், வந்து கடலில் கலக்கிறது. அதன் நீளம் தொள்ளாயிரம் மைல் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

கனா, சஹாரா பாலைவனத்தை அடுத்திருந்தும் கூட அங்கு பல நதிகள் இருப்பது கனா மக்களின் அதிர்ஷ்டமேயாகும்.

கனாவின் சுபீட்ச நிலையை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக வோல்டா நதியில் அணைக்கட்டு அமைப்பதற்கான திட்டமும் உருவாகி வருகிறது.

எனவே, சுதந்திர கனா எதிர் காலத்தில் மிகவும் சுபீட்ச நாடாகத் திகழ்வதற்கான எல்லா வசதிகளும் அங்கு இயற்கையாகவே அமைந்திருக்கின்றன.

இவ்விதமாக அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் மற்ற ஆப்பிரிக்க நாடுகளுக்கு வழி காட்டும் அரிய வாய்ப்பு உருவத்தில் சிறிய, ஆனால் புகழில் பெரிய கனா நாட்டுக்குக் கிடைத்திருக்கிறது.


பாலர் மலர்
அழகு நிலா
○★○
பந்து வடிவமாயிருக்கும்
பகலில் எல்லாம் ஒளிந்திருக்கும்
அந்த ரத்தில் தொங்கியிருக்கும்
அழகு நிலா, அதோ பார்,
அழகு நிலா, அதோ பார்.
கப்பலைப்போல் ஊர்ந்துசெல்லும்
கடலைக் கூடக் கடந்து செல்லும்
அப்பம் போல வட்டமான
அழகு நிலா, அதோ பார்,
அழகு நிலா, அதோ பார்.
ஊருக்கெல்லாம் ஒரு விளக்காம்
உயரே காணும் தெரு விளக்காம்
யாரும் ஏற்றி வைக்க வில்லை
அழகு நிலா, அதோ பார்.
அழகு நிலா, அதோ பார்.
அழ. வள்ளியப்பா
சானா


மங்களவதி
சித்திரத் தொடர் கதை
11
1) தேவிதத்தன் தன் ஆசை நிறைவேறாமல் எப்படி அவலமாகப் போவதைக் கண்டு மனம் வெதும்பினான். இச்சமயத்தில் வனமாலை இன்பகரமான அந்தச் செய்தியைச் சொன்னாள்.
நீங்கள் தப்புவதற்கு ஒரு வழி இருக்கிறது.
தேவிதத்தன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு ஆவலுடன் கேட்டான்.
சொல், என்ன வெற்றிச் சக்கரம் சொல்!
5) மன்னர் கஜபதிக்குச் சுகந்தி என்று ஒரு மகள் இருக்கிறாள். அவள் உங்களைக் கண்டதும் காதல் கொண்டு விட்டாள். நீங்கள் அவளை மணம் செய்து கொள்வதாக வாக்களித்தால் விடுதலை பெறலாம்.
6) குருடன் வேண்டுவது கண் தானே? தேவிதத்தன் உடனே சம்மதித்து விட்டான். காந்தர்வ முறைப்படி இருவருக்கும் பாசு நிலையில் விவாகம் நடந்தேறியது.
7) சுகந்தி அவனைக் காணவரும் பொழுதெல்லாம் அவன் விலங்குகளைக் கழற்றிவிட்டு உரையாடுவாள்.
சுகந்தி



8) ஒருநாள் சுகந்தியின் தாயார், தேவதத்தன் இன்னும் சில மாதங்களில் தந்தையாகப் போகிறான் என்னும் மகிழ்ச்சிகரமான செய்தியை அவனிடம் சொன்னாள். அரிதாரு பணிவர் தளபதி திரும்பி வர இருக்கிறார் என்னும் அச்சம் தரும் செய்தியையும் சொன்னாள்.
9) தேவதத்தனுக்கு உடனே மிருகாவதியின் நினைவு வந்தது. இத்தனை நாளும் மிருகாவதியை மறந்து இருந்து விட்டோமே என்று மனம் நொந்தான். சுகந்தியைத் தனியாகச் சந்தித்த பொழுது விவரத்தைச் சொல்லி விடைகோரினான்.
10) சுகந்தி தன் தாயாரிடம் ஆலோசனை கேட்டாள். தேவதத்தனின் உயிரைக் காப்பதற்காகவும், கஷ்டத்தில் சிக்கிக் கொண்டு காணாமற் போயிருக்கும் மிருகாவதியைக் கண்டு பிடிப்பதற்காகவும் அவனுக்கு 'விடை கொடுத்து அனுப்புவது' என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.
11) விடைபெறும் பொழுது தேவதத்தன் தனது மிருங்கா என்னும் வாளை நினைவுப் பரிசாகக் கொடுத்தான்.
12) உங்கள் வாளை உங்களிடம் பத்திரமாகச் சேர்க்க முயல்வோம். நீங்கள் சுகந்தியை மறந்து விடாதீர்கள்.
13) பிரியாவிடை பெற்றுப் பிரிந்த தேவதத்தன் உள்ளத்தில் ஒரே நினைவு பூண்டு மிருகாவதியைப் பிரிந்த மரத்தடிக்கு வந்து சேர்ந்தான்.
14) அப்பொழுது அங்கே ஒரு வேடன் வந்தான்.
15) நீ எங்கேயாவது ஒரு பெண்ணைக் கண்டாயா?
உன் பெயர் தேவதத்தனா?
16) 'இந்த வேடனுக்கு நம் பெயர் எப்படித் தெரிந்தது?' என்று வியந்தான் தேவதத்தன். அதே சமயத்தில் அவன் உள்ளத்தில் ஒரு பீதியும் குடிகொண்டது. 'இவனும் பணிவரைப் போல் நம்மை மோசக் கருத்துடன் அணுகியிருப்பானோ?' என்று எண்ணினான்.
(தொடரும்)
வேடன்

மாயப் பந்து

1. அண்ணனும் தங்கையும்

பல வருஷங்களுக்கு முன் முகலாய சக்கரவர்த்திகள் ஆண்டு வந்த காலத்தில் வட இந்தியாவில் பெரிய மந்திரவாதி ஒருவன் இருந்தான். அவன் பெயர் மால்மா. பல அரசர்கள் அவனுக்கு விலை உயர்ந்த தங்கப் பதக்கங்களும் பரிசுகளும் கொடுத்திருந்தார்கள். அந்த மந்திரவாதியினால் ஆகாத காரியங்களே கிடையாது. மணலைக் கயிறாகத் திரிப்பான். ஆகாயத்தை வில்லாக வளைப்பான்.

மால்மா நல்ல புத்திசாலி சொந்த விடா முயற்சியினால் முன்னுக்கு வந்தவன். அவனுக்கு மிகவும் அழகான ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும் இருந்தார்கள். பிள்ளைக்கு. சுமார் பதினைந்து வயது இருக்கும். பெண்ணுக்குப்பன்னிரண்டு வயது. அவர்கள் தகப்பனாரைப் போலவே மிகுந்த புத்திக் கூர்மை உள்ளவர்கள். நன்றாகப் படித்தவர்களும் கூட. அவர்களுடைய தாயார் சிறு வயதிலேயே இறந்து விட்டதினால் அவர்களைப் பாதுகாத்து



வருவது மந்திரவாதி மால்மாவின் பொறுப்பாயிற்று.

ஒரு நாள் நீண்ட நேரம் ஆழ்ந்த யோசனையில் மால்மா சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டிருந்தான். சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டிருந்தவன் திடீர் என்று கனைத்துக்கொண்டு எழுந்து சற்றுத் தூரத்தில் இருந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்த ரவியையும், கலாவையும் சைகை காட்டி அழைத்தான். "நீங்கள் இருவரும் என்னை விட்டுத் தனியாகப் பிரிந்து சிறிது காலம் இருக்கவேண்டியதுதான். நான் நீண்ட யோசனைக்குப் பிறகு அந்த முடிவுக்குத்தான் இப்பொழுது வந்தேன்" என்று மால்மா சொன்னான்.

"என்ன அப்பா இது, முடியவே முடியாது. உங்களைப் பிரிந்து நாங்கள் இருக்க மாட்டோம்!" என்று இருவரும் சொன்னார்கள். உடனே மால்மா அவர்கள் இருவரையும் தழுவிக்கொண்டான்.

"எனக்கு மட்டும் உங்களை விட்டுப் பிரிய மனம் வருமா? இருந்தாலும் உங்களது நன்மைக்காகவே அப்படிச் செய்யவேண்டியிருக்கிறது. நீங்கள் இருவரும் உலக இன்ப துன்பங்கள் தெரியாமல் வீட்டில் செல்வமாக வளர்ந்து வந்தவர்கள். இப்படியே நீங்கள் காலங் கழித்தால் உங்களது பிற்காலத்தில் நீங்கள் மிகவும் கஷ்டப்படுவீர்கள். நான் இப்பொழுது அரசனிடம் பல பரிசுகள் பெற்றுப் பெயர்பெற்ற மந்திரவாதியாக இருக்கிறேன் என்றால், எனது விடாமுயற்சியும் சரியான உழைப்பும் தான் காரணம். நான் பிரயாணம் செய்யாத இடமே இல்லை. என் பிரயாணத்தில் கிடைத்த அனுபவங்கள் என்னிடத்தில் உள்ள ஏராளமான பொருள்களை விட விலை உயர்ந்த பொக்கிஷம். அது மாதிரியான அனுபவங்களை நீங்களும் பெற வேண்டும். நான் உங்களுக்குக் கட்டளை இடும் காரியத்தை வெற்றிபெறச் செய்து, எனது விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள் என்று நம்புகிறேன்" என்று மால்மா அளவற்ற பிரியத்துடன் கூறினான். தந்தையை ரவியும் கலாவும் வணங்கினார்கள். பிறகு, "அப்பா! தாங்கள் எந்தக் கட்டளையைச் செய்யச் சொன்னாலும் நாங்கள் உங்கள் விருப்பப்படியே அதைச் செய்து முடிப்போம்" என்றார்கள்.

"சபாஷ், குழந்தைகளே! இப்பொழுது உங்களிடம் காணப்படும் உறுதியே போதுமானது. நாளைக் காலையில் நீங்கள் இருவரும் பிரயாணத்துக்குச் சித்தமாக இருங்கள்" என்று கூறித் தன் அறைக்குச் சென்றான்.

அன்று இரவு ரவிக்கும் கலாவுக்கும் தூக்கம்பிடிக்கவில்லை. தங்கள் தகப்பனாரை விட்டுக் கொஞ்சகாலம் பிரிய வேண்டியிருக்கிறதே என்ற வருத்தம். தங்களிருவருக்கும் அவர் என்ன கட்டளை இடப் போகிறார் என்பதைத் தெரிந்து கொள்ள ஆவல். அன்று இரவு முழுவதும் அவர்கள் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தார்கள். மறுநாள் காலையில் எழுந்திருந்து தகப்பனார் சொல்லியபடி நீராடி விட்டுப் புதிய ஆடைகளை அணிந்து கொண்டார்கள். கலா பைஜாமா அணிந்து கொண்டு, முழங்கால் வரையிலும் நீண்ட ஒரு ஜிப்பாவையும் போட்டுக் கொண்டு ஜிப்பாவுக்கு மேல் மெல்லிய பட்டு உருமாலையை முன் பக்கமாக இரு தோள்களிலும் அணிந்து கொண்டாள். ரவி தனது வழக்கப்படி ஒரு பைஜாமாவை அணிந்து கொண்டு, பளபளப்பான பித்தான்கள் கூடிய ஒரு நீண்ட சட்டையையும் போட்டுக்கொண்டான். இருவரும் பூஜை அறைக்குச்சென்று கடவுளுக்கு வணக்கம் செய்து விட்டுத் தங்களுடைய தகப்பனார் வருகையை எதிர்பார்த்த வண்ணமாக நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது மந்திரவாதி மால்மாவும் அங்கே வந்தான்.

"குழந்தைகளே! நான் சொல்லுவதைக் கவனமாகக் கேளுங்கள். உங்களிடம் இரண்டு மந்திர சக்தி வாய்ந்த விலை மதிப்பில்லாத பொருள்களைக் கொடுக்கப் போகிறேன்!" என்று சொல்லி





விட்டுப் பூஜை அறைக்குச் சென்று சில மந்திரங்களை உச்சரித்துவிட்டுத் தனது மந்திரக் கோலை எடுத்துக் கொண்டான். பிறகு ரவியையும் கலாவையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு மாடியில் உள்ள தனது இரகசிய அறைக்குச் சென்றான். அங்கிருந்த இரும்புப் பெட்டியை மந்திரக் கோலினால் மூன்று முறை சுற்றவே இரும்புப் பெட்டி தானாகவே திறந்து கொண்டது. மால்மா இரும்புப் பெட்டியிலிருந்து ஜமக்காளம் ஒன்றை எடுத்தான். அந்த ஜமக்காளத்துக்குள்ளிருந்த ஒரு முத்து மாலையையும் எடுத்தான். பிறகு அதே அறையில் ஒரு மூலையில் ஒரு சிறிய தகர டப்பா ஒன்று இருந்தது. தன் மந்திரக் கோலினால் அந்தச் சிறிய தகர டப்பாவை மூன்று முறை சுற்றினான். தகர டப்பாவின் மூடி படீர் என்று திறந்து கீழே விழுந்தது. அதே சமயத்தில் தகர டப்பாவிலிருந்து மாயப்பந்து குதித்து எழும்பிற்று. எழும்பிய பந்தை மால்மா கையில் பிடித்துக் கொண்டான்.


“இந்தப் பந்தை உன் மனத்தில் என்ன வேண்டுமோ அதை நினைத்துக்கொண்டு தரையிலோ, மரத்திலோ அடித்து, பந்து எழும்பியவுடன் மறுபடியும் உன் கையில் பிடித்துக் கொண்டால் நீ என்ன காரியம் நினைத்துக் கொண்டாயோ அது உடனே கை கூடும். ஆனால் மிகவும் அவசியமாக இருக்கும்போது தான் இந்தப் பந்தின் உதவியை நாட வேண்டும். இந்த மாயப் பந்து தண்ணீரில் நனைந்தால் அதன் மந்திர சக்தி உடனே அதைவிட்டு அகன்றுவிடும். ஆனால் அப்படி ஒரு முறை நனைந்த பந்தின் மீது இதோ இந்த மந்திரப்பொடியை நன்றாகத் தடவிக் காயவைத்தால் அது தனது முழு சக்தியையும் திரும்ப அடையும். ஆனால் இரண்டாம் முறை தண்ணீரில் நனைந்தால் அவ்வளவுதான், அப்புறம் பயன் ஒன்றும் இல்லை” என்று சொல்லி ரவியிடம் பந்தைக் கொடுத்தான்.




பிறகு மந்திரவாதி, “இதோ பார்த்தாயா!” என்று ஒரு அழகான துணிப் பையிலிருந்து ஒரு ஜமக்காளத்தை எடுத்துப் பிரித்தான். “இது பார்ப்பதற்குச் சாதாரண ஜமக்காளத்தைப் போலத்தான் இருக்கும். ஆனால் இது பறக்கும் ஜமக்காளம். இதை விரித்துக் கீழே போட்டுவிட்டு அதன் மீது உட்கார்ந்து கொள். பிறகு இதோ இந்த மந்திர முத்துமாலையைக் கழுத்தில் போட்டுக்கொள்” என்று கூறி ஒரு முத்து மாலையை எடுத்துத் தன் பெண் கலாவிடம் கொடுத்தான்.

கலா ஜமக்காளத்தைக் கீழே விரித்துவிட்டு அதில் உட்கார்ந்தான். முத்து மாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டு அப்பாவைப் பார்த்தான்.

“கலா! அந்த முத்து மாலையில் எட்டு முத்துக்கள் இருக்கின்றன, பார்த்தாயா? அவைகள் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு என்று எட்டுத் திசைகளையும் குறிக்கின்றன. நீ எந்தப் பக்கம்போக விரும்புகிறாயோ அந்தப்பக்கம் உள்ள முத்தைத் திருப்ப வேண்டும். கழுத்தில் இருக்கும் மாலையைத் தூக்கினால்ஜமக்காளம் மேலே பறக்க ஆரம்பிக்கும். நீ எவ்வளவுக்கு எவ்வளவு மேலே தூக்குகிறாயோ அவ்வளவு உயரம் பறக்கும். ஜமக்காளத்தைப் பூமிக்குக் கொண்டுவர வேண்டுமானால் மெதுவாக முத்து மாலையைக் கீழே இறக்கினால் ஜமக்காளமும் தானாகவே கீழே இறங்கி விடும். நீ அவசரப்பட்டுத் திடீரென்று மேல்நோக்கியோ அல்லது கீழ்நோக்கியோ முத்துமாலையை அசைத்தால் நீ அதிர்ச்சியினால் கீழே விழ நேரிடும். நீ எந்தத் திசையை நோக்கிப் பறக்கவேண்டுமோ அந்தத் திசையை நோக்கியிருக்கும் முத்தை நீ தொடவேண்டும். முத்தின் மீது படாமல் முத்து மாலையைத் தூக்கிப் பிடிப்பதற்காகத்தான் முத்து மாலைக்கு நடுவில் ஒரு தாயத்து கட்டி இருக்கிறேன். அந்தத் தாயத்து மிகவும் சக்தி வாய்ந்தது. மந்திர ஜமக்காளமும் முத்து மாலையும் ஒன்றுக்கு ஒன்று ஆதாரமானவை. முத்து மாலை இல்லாமல் மந்திர ஜமக்காளம் பறக்காது. ஜமக்காளம் இல்லாமல் முத்து மாலையை வைத்து ஒன்றும் செய்ய முடியாது” என்றான் மால்மா. அப்பொழுது ரவி, “அப்பா! மந்திர ஜமக்காளத்தை எனக்குக்கொடு. மாயப் பந்தை அவள் வைத்துக் கொள்ளட்டும்” என்றான். (தொடரும்)


மரச்சாமான்களைக் காப்பாற்றுவது அவசியம்
மரச்சாமான்கள் எந்த மரத்திலும் செய்யப்பட்டிருந்தாலும், அவைகளின் மேற்புறம் எப்படி இருந்தாலும், அவைகளுக்கென்று இருக்கும் ஷாலிமார் பெயிண்டைப் பூசினால், அச்சாமான்கள் அதிக கால உழைப்பதுடன், பார்ப்பதற்கு அதிக வசீகரமாகவும் இருக்கும்.
. . . ஏனெனில், இந்தியாவில், ஷாலிமார் பெயிண்ட் கம்பெனி யாருக்கு மாத்திரம் தான், 55 வருடத்திற்கு மேலாக பெயிண்ட் தயாரிக்கும் அனுபவம் இருக்கிறது. ஷாலிமார் பெயிண்ட்கள் இந்தியாவின் பலவித கடுமையான சீதோஷ்ண நிலைமைகளையும் தாங்கக்கூடும் என்பதற்கு, ஷாலிமாரின் பரந்த ஆராய்ச்சியும், தொடர்ந்த முன்னேற்றமுமே அத்தாட்சியாகும்.
எந்த உபயோகமாயினும், பெயிண்ட் ஆர்டர் செய்யும் பொழுது, அவ்வுபயோகத்தை தெரியப்படுத்தவும்.
ஷாலிமார்
பெயிண்ட்கள்
SHALIMAR
ஷாலிமாரின் எல்லாவித பெயிண்ட்களின் முழு விபரங்களுக்கு ஷாலிமார் ரெடி ரெபரென்ஸ் பிப்லெட்டை, தபால் பெட்டி. 68, கல்கத்தா-1க்கு கேட்டு எழுதவும்.
SPW 357R



மழைச்சாரல் மாதவி

அத்தியாயம் 7

அறிமுகம்


சிவசங்கரனையே மயக்கிவிடக் கூடிய சக்தி அந்தப் பெண்ணுக்குத்தான் இருந்ததோ? அல்லது 'காலம் வரவேண்டும்' 'வேளை வர வேண்டும்' என்றெல்லாம் சொல்கிறார்களே! அதுபோலவே காலமும் வேளையும் தான் வந்துவிட்டதோ, தெரியவில்லை.

''பெண்ணடிமைத் தனத்தைப் போல மதியை இழக்கச் செய்வது எதுவுமே இல்லை'' என்று எல்லாருக்கும் உபதேசம் செய்து வந்த சிவசங்கரன், அப்போது மாதவியைப் பார்த்து மதிமயங்கி நின்றது மட்டும் உண்மை.

அப்படிப் பார்க்கப் போனால் மாதவியைப் பிரமாதமான அழகி என்றும் சொல்லிவிட முடியாது. சிறிய நெற்றி, அகலமான மூக்கு, புருவம்கூட அகன்று அடர்த்தியாக இருந்தது; ஆனால் கண்களில் மாத்திரம் ஒரு குறுமை யும் குறுகுறுப்பும் தெரிந்தன.

நன்றாக உழைப்பதனால் உண்டாகக் கூடிய ஆரோக்கியமான உடலில் இளமையின் மெரு

ஆனந்தி



கேறி யிருந்தது. ஆனால் அவளுடைய தந்தத்தைப் பழிக்கும் நிறத்துக்கும் கார்முகிலைப்பழிக்கும் கரிய கூந்தலுக்கும் மாத்திரம் ஒப்புவமை கூறமுடியாது.

'அலை அலையாகப் புரண்டு தொங்கும் இந்தப் பெண்ணின் கூந்தலுக்கு எதையுமே ஒப்பிட முடியாது போலிருக்கிறதே. மயில் தோகை போன்ற நீண்ட கேசம் என்று எங்கேயோ படித்திருக்கிறோமே' என்று நினைத்துக் கொண்டார் சிவசங்கரன். 'சே என்ன உவமை? மயில் தோகை ஒரு அழகா?' என்று தோன்றியதும் சிவசங்கரனே திடுக்கிட்டுப் போனார்.

செருப்பின் சத்தத்தினாலும், ஈரத் துணியின் 'சதக்' 'சதக்' என்ற ஓசையாலும் தம்மைத் தாண்டி அவள் செல்வதை உணர்ந்தார் சிவசங்கரன்.

தம்மையும் மீறியதொரு உணர்ச்சியினால் திரும்பிப் பார்த்தார். என்ன அதிசயம்! அவளும் இவரை நோக்கித் திரும்பி நின்று கொண்டிருந்தாள்.

அதைவிட அதிசயம் என்னவென்றால் அந்தப் பெண் தன் குமுத வாயைத் திறந்து, ''இந்த மணிபர்ஸ் உங்களுடையதா?'' என்று கேட்டாள். சிவசங்கரனுக்கு முதலில் ஏதோ ஒரு சத்தமில்லாத திரைப்படம் பார்ப்பது போல இருந்தது. அவள் மூன்றாவது தடவையாக அதே கேள்வியைக் கேட்ட பிறகு தான் விஷயம் புரிந்தது. தம் கையிலிருந்த மணிபர்ஸ் இப்போது இல்லாமல் இருப்பதும் தெரிய வந்தது. அவளுடைய இனிமையான குரலைக் கேட்டுப் பரவசமடைந்த அவருடைய செவிகள் இன்னும் இரண்டு வார்த்தைகள் அவளுடைய இதழ்களிலிருந்து உதிராதா என்று மழைத் துளிக்காக ஏங்கும் 'சாதகப்'பட்சி போல ஏங்கின.

''ஆம்!'' என்று தலையை ஆட்டிக் கொண்டே அவள் அருகில் சென்று அதைக் கையில் வாங்கிக் கொண்டார்.

சிவசங்கரனுடைய மனத்தில் அவளுடைய பொற்கரத்தின் அழகு மட்டும் பதிந்து போயிற்று.

''ரொம்ப வந்தனம்'' என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டுத் திரும்ப மலை மீது ஏறினார். கொஞ்ச தூரம் சென்ற பிறகு திரும்பிப் பார்த்தார். ஆனால் அவள் திரும்பவில்லை. கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நடக்கும் ஒரு புரவியைப் போல அவள் வேகமாகச் சென்று கொண்டிருந்தாள். இலேசான துள்ளலுடன் கூடிய நடை அவருடைய நெஞ்சில் புல்லரிப்பை உண்டாக்கியது.

'சே! சே! இது என்ன? எத்தனையோ பூலோக ரம்பைகளைக் கண்டு கலங்காத என் மனம், இவளைப் பார்த்துக் கலங்கி விட்டதே?' என்று சிந்தனையைத் தடுத்தார்.

ஆனால் இந்தப் பாழாய்ப் போன மனம் சொன்னால் உடனே கேட்டு விடுகிறதா? மறுபடியும் 'இந்த மலைக்காட்டில் வனதேவதையைப் போன்ற அழகுடைய பெண் ஒருத்தி இருப்பாளென்று நாம் நினைக்கவே இல்லையே' என்று நினைக்கத் தொடங்கியது.

இப்போது சிவசங்கரனுக்குத் தம் மீதே கோபம் வந்தது. ''அவள் மலைக்காட்டில் இருந்தால் என்ன? வான வெளியில் பறந்தால் எனக்கென்ன? இவளைப் பற்றி நான் ஏன் நினைக்க வேண்டும்? பெண்ணடிமைத்தனம்! ஐயோ! ஏமாந்து விடக் கூடாது'' என்று நினைத்துக் கொண்டார்.

அன்று மலைமீது வெகுதூரம் அவரால் போக முடியவில்லை. சுமார் அரை மைல் ஏறிய பிறகு மலையிலிருந்து விழும் ஒரு அழகிய அருவியைக் கண்டார். அருவி நீர் பாறைகளின் மீது விழுந்து நான்கு அடி தூரம் ஓடி ஒரு தடாகத்தை நிரப்பி அதிலிருந்து இடது புறமாக வழிந்து ஓடியது. அந்தத் தடாகத்திலிருந்து ஒரு சிறிய ஜலதாரை மலைப் பாதையில் குறுக்கே ஓடி





அடுத்த பக்கத்திலிருந்த பள்ளத்தில் வழிந்தோடியது. பாதை யோரமாகச் சிவந்த நிறமுடைய சின்னஞ் சிறு உன்னம் பழங்கள் வாரி இறைந்து கிடந்தன.

ஒரு பெரிய ஆல மரம் கப்பும் கிளையுமாகப் பரவி நின்றது. அதனுடைய விழுதுகள் அவளுடைய கூந்தலைப்போல அடி மரம் வரையில் தொங்கின.

சிவசங்கரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'ஃபஷ்! அந்தப் பெண்ணுடைய கூந்தலையே நான் உவமைப் பொருளாகச் செய்து விட்டேனே!' என்று வியப்படைந்தார்.

சந்தன மரத்திலிருந்து வீசும் இனிய கந்தத்தை அவர் நுகர்ந்தபோது சந்தனக் கட்டையைப் போல உரம் பாய்ந்து, தந்தத்தின் குளுமையான வெண்மையுடன் விளங்கிய மாதவியின் அழகிய கரம் ஞாபகத்துக்கு வந்தது.

பாதை யோரமாகப் பூத்துச் சொரிந்திருந்த புதர்களின் மீது வண்டுகள் பறந்தபோது அவருக்கு அந்தப் பெண்ணின் கரிய விழிகள் நினைவுக்கு வந்தன.

புறப்படும் பொழுது தாயாரிடம், 'மோகினி பிடித்துக்கொண்டு விடுமா?' என்று கேட்டது ஞாபகம் வந்ததும் அவருக்குச் சிரிப்பு வந்தது. நிஜமாகவே ஒரு மோகினி பிடித்துக் கொண்டு விட்டது போலல்லவா இருக்கிறது. இது வரையில் எந்தப் பெண்ணைப் பற்றியும் நான் இப்படியெல்லாம் நினைத்ததே கிடையாதே' என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார் சிவசங்கரன்.

பிறகு தாமே அதற்குச் சமாதானமும் கூறிக் கொண்டார்.

'ஒரு அழகிய பெண்ணைப் பார்த்து ரஸித்தால் உடனே அதற்கு மனம் வேறு காரணம் கற்பித்து விடுகிறது. பூவைப் பார்த்தும், கனியைப் பார்த்தும், மலையைப் பார்த்தும், சோலையைப் பார்த்தும் ரஸிப்பதுபோல் ஒரு அழகிய பெண்ணைப் பார்த்தும் ரஸிக்கிறேன். கடைசல் பிடித்தது போன்ற அவளுடைய கரம் அற்புதமான அழகோடு விளங்கியதால் எனக்கு மறுபடியும் ஞாபகம் வருகிறது. ஒரு அழகான படத்தைப் பார்த்தால் அது எத்தனையோ நாட்களுக்குப் பிறகும் ஞாபகம் இருப்பதில்லையா? அதைப் போலத்தானே இதுவும். இது இலக்கிய ரஸனையைச் சேர்ந்தது. அல்லது கலா ரஸனையைச் சேர்ந்தது. இதற்காக நான் கவலையடைய வேண்டியதில்லை!' என்று எண்ணிக் கொண்டார்.

உடனேயே, 'ஆமாம்! எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறோமே? இவளைவிட அழகான பெண்களைக்கூடப் பார்த்திருக்கிறோம். வேறு யாரைப் பற்றியும் இப்படி உவமைகளோடு சிந்தனையே செய்ததில்லையே' என்று சந்தேகம் ஏற்பட்டது. அதற்கு அவர் சமாதானம் கூறிக் கொள்ளவும் முயன்றார்.

சீனிவாசமூர்த்தியையும் சுபாஷிணியையும் சமீபத்தில் பார்த்துவிட்டு வந்திருந்தார் சிவசங்கரன். அவர்களுடைய பாசமும், நேசமும் அவர் மனத்தில் ஆழமாகப் பதிந்து போயிருந்தன.

'இவர்களைப் பார்த்தது முதல்தான் எனக்கு இப்படி மனம் சஞ்சலப் படுகிறது. இன்று ஏற்படும் எண்ணங்களுக்கெல்லாம்கூட அவர்களுடைய இன்பமான வாழ்க்கையைப் பார்த்ததுதான் காரணம். வேறொன்றுமில்லை. எனக்காவது? மனம் சஞ்சலப்படவாவது?' என்று மற்ற எண்ணங்களை உதறி விட்டுச் சுற்றுப்புறங்களை நோக்கினார். வேட்டையாடும் உத்தேசத்துடன் வந்ததை மாற்றிக்கொண்டு திரும்பிச் செல்ல ஆரம்பித்தார்.

இவ்வளவு சீக்கிரம் சிவசங்கரன் திரும்பி வந்து விட்டதைக் கண்ட அவர் தாயார், ''என்ன சங்கரா? உடம்பு சரியில்லையா என்ன?'' என்று கேட்டார்.

''கொஞ்சம் தலைவலியாக இருக்கிறது, அம்மா!'' என்று கூறிவிட்டுப் போய்த் தம் படுக்கையில் படுத்துக் கொண்டார் சிவசங்கரன்.

திரும்பத் திரும்ப அந்த வனமோகினியின் உருவம் அவர் கண் முன்னால் வந்து நின்றது. அதைப் போக்கிக் கொள்ள எவ்வளவு முயன்றும் முடியாமல் போகவே அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஒரு கவிதைப் புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார். அதிலும் காதல் என்னும் அமுதத்தைப்பற்றி எழுதியிருந்தது. அதைத் தூர எறிந்துவிட்டு ஒரு நாவலை எடுத்தார். அதுவும் காதலில் ஆரம்பித்தது. இவ்வாறு தம் எண்ணங்களுடன் போராடிப் போராடிக் களைத்துச் சோர்ந்து தூங்கிப் போனார் சிவசங்கரன்.

அத்தியாயம் 8
மாதவியின் பிடிவாதம்

தூங்கி எழுந்த பிறகு அவருக்கு மனம் நிச்சலனமாக இருந்தது. இப்போது அந்த மலையின்மீது கண்ட காட்சியை நினைத்தால் அவருக்கு வேடிக்கையாக இருந்தது.

அன்றையப்பொழுது கழிந்தது. மறு நாள் உதயமானதும் அவருக்கு மலைமீது ஏறிச் செல்ல வேண்டும் என்று தோன்றியது. முதல் நாளைப் போலவே தம் தாயாரிடம் கூறிவிட்டுத் துப்பாக்கியுடன் புறப்பட்டார் சிவசங்கரன்.

மலை யடிவாரத்தைச் சமீபித்ததும், அந்த மலைச்சாரல் வீடு கண்களில் தென்பட்டது. இன்று வாசற் கதவு திறந்திருந்தது. சற்று அருகில் நெருங்கிய போது அந்தக் கதவு வழியாக யாரோ வெளியே வருவது தெரிந்தது. வந்தவள் வேறு யாருமில்லை. முந்தைய தினம் மலையில் பார்த்த அதே பெண்தான். சிவசங்கரன் அவளைக் கவனிக்காமல் போக முயற்சி செய்தார். ஆனால் அந்தப் பெண் வாசல் கேட்டையும் திறந்து சாத்திவிட்டு அவருக்கு முன்னால் மலைப்பாதையில் ஏறி நடக்கத் தொடங்கினாள். அவளுடைய கையில் ஒரு சிறு துணி மூட்டை இருந்தது. இன்னொரு

கையில் ஒரு சோப்புப் பெட்டி இருந்தது. அவளுடைய நடையின் வேகம் சிவசங்கரனைப் பிரமிக்கச் செய்தது.

சிவசங்கரனும் சற்றுத் துரிதமாக நடக்கத் தொடங்கினார். அந்தப் பெண்ணை இப்போது கவனித்தால் பரவாயில்லை என்று அவருக்குத் தோன்றியது. தாம் கவனிப்பது அவளுக்குத் தெரிய வேண்டாம் என்றுதான் நினைத்தார். கொஞ்சதூரம் வேகமாக நடந்ததும் 'ஏன் இப்படி அவளைப் பின்பற்றுகிறேன்' என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார். முன்பின் தெரியாத ஒரு பெண்ணைத் தொடர்ந்து செல்ல வேண்டுமென்று தோன்றும்படியாகத் தமக்கு என்ன நேர்ந்து விட்டது என்று திகைத்தார். பிறகு நின்று சில நிமிடங்கள் ஆசுவாசப்படுத்திக் கொண்டு மெதுவாக ஏறத் தொடங்கினார்.

அவர் அருவியை நெருங்கும்போதே 'டப் டப்' என்று துணியைப் பாறையில் அறைந்து தோய்க்கும் சத்தம் கேட்டது. துணி தோய்ப்பது அந்தப் பெண்தான் என்று அவருக்கு நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. அவர் அருவியைத் தாண்டிய போது அந்தப் பெண் தடாகத் தண்ணீரில் துணிகளையெல்லாம் முக்கி அலசிக் கொண்டிருந்தாள்.

சிவசங்கரனுக்கு அந்தக் காட்சி மனதில் பதிந்து போயிற்று. எத்தனையோ நாட்களுக்குப் பிறகும் மாதவியைத் தான் சந்தித்ததைப் பற்றி எண்ணும் போது அவள் தண்ணீர்த் தேவதையைப் போல அருவியின் எதிரே தடாகத்தில் நின்றுகொண்டிருந்ததுதான் அவருக்கு ஞாபகம் வரும்.

ஆனால் அப்போது அந்தப் பெண்ணின் தைரியத்தைப் பற்றி அவர் ஆச்சரியப் பட்டார். "தன்னந் தனியாக வந்து குளித்து விட்டுப் போகிறாளே! எவ்வளவு தைரியம் இவளுக்கு?" என்று வியப்பு அடைந்தார்.



அன்று மலைக் காட்டில் வெகுநேரம் அலைந்து திரிந்து விட்டு இறங்கி வந்தபோது அந்த மலைச்சாரல் பங்களா அருகில் வந்ததும் சிறிது நேரம் நின்றார். பிறகு தம் செய்கையில் தாமே வெட்கம் அடைந்தவராக வேகமாய்ச் சென்றார்.

அதன் பிறகு அவருக்குச் சில நாட்கள் வேலை இருந்தது. ஆகவே மலைச்சாரல் பக்கமே போக முடியவில்லை. மேலும் அந்தப் பெண்ணுடைய ஞாபகம் வரும் போதெல்லாம் அதை உதறித் தள்ளி விட்டு வேறு எதிலாவது தம்முடைய மனத்தைச் செலுத்தினார் சிவசங்கரன்.

அவருக்கு மறுபடியும் ஓய்வு கிடைத்தது. அங்கே சென்றபோது அந்த வீட்டுக் கதவு சாத்தியிருந்தது. மலை மீதும் அவளைச் சந்திக்க முடியவில்லை.

இதற்குள் சிவசங்கரனுக்கு அந்த ஊரில் சிலரைப் பரிச்சயமாகியிருந்தது.

கிருஷ்ணன்குட்டி என்பவர் சிவசங்கரனுடைய வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தார். அரசாங்க உத்தியோகம் பார்த்துவிட்டு ஓய்வு பெற்றவர். சிவசங்கரனைப் பார்க்க அவராகவே வந்தார். குடித்தனம் வைப்பதற்கு உதவி ஏதாவது வேண்டுமானால் செய்வதாகச் சொன்னார். வீட்டுக்குப் பின்னால் இருந்த கிணற்றில் ஜகடை இல்லை என்று தெரிந்து தமக்குத் தெரிந்த தச்சனை அனுப்பி அதைப் போட்டுத் தரச் சொன்னார். தன் வீட்டில் வேலை செய்த கிழவியை அனுப்பிச் சாமான்களை எடுத்து வைப்பதற்கெல்லாம் உதவி' செய்யச் சொன்னார்.

இதனால் பெரியவரிடம் சிவசங்கரனுக்கு மரியாதை உண்டாகியிருந்தது.

அவருடைய மனைவியாரும் சிவசங்கரனின் தாயாரை வந்து பார்த்து விசாரித்துக் கொண்டதால் இருவரிடமுமே அவருக்குப் பற்றுதல் ஏற்பட்டது.

அவர்களுக்கும் சிவசங்கரனைப் பார்த்தது முதல் ஒரு புத்திரனிடம் ஏற்படும் பாச உணர்ச்சி ஏற்பட்டிருந்தது.

"சிவசங்கரனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து என் மருமகனாக்கிக் கொள்ள எனக்கு ஒரு பெண் இல்லையே என்று மிகவும் வருத்தமாக இருக்கிறது" என்று அவர் அடிக்கடி சொல்லி வந்தார்.

பெரியவருடைய பிள்ளைகள் எல்லாம் படித்துவிட்டு 'உத்தியோகத்தில் இருந்தார்கள். விடுமுறையில் பெற்றோரை வந்து பார்த்து விட்டுப் போவார்கள். அவர்கள் எவ்வளவு சொல்லியும் கிருஷ்ணன்குட்டி அவர்கள் யாரிடமும் போய் இருக்கச் சம்மதிக்கவில்லை. "அலைந்து அலைந்து அலுத்து விட்டது. கமுகமலை சொர்க்க லோகம் மாதிரி இருக்கிறது. இதை விட்டு விட்டு. டில்லியிலும், கல்கத்தாவி

னும் போய்த் திண்டாடுவானேன்?'' என்று கூறி விட்டார்.

பெரியவருடைய வீட்டில் மாலை வேளைகளில் சீட்டுக் கச்சேரி நடைபெறும். வயதானவர்கள் நாலைந்து பேர்கள் பொழுது போவதற்காகச் சீட்டாடுவார்கள். சிவசங்கரனும் இரண்டு நாட்கள் அதில் மாட்டிக் கொண்டு விட்டார்.

அவர்கள் பேசும் பேச்சுக்கள் எதுவும் அவருக்கு ரஸமாக இல்லை.

அந்தப் பெண்ணை மலைமீது பார்த்துக் கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் கழித்து ஒருநாள் பெரியவருடைய வீட்டுக்குப் போனார் சிவசங்கரன்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பி விடலாம் என்றுதான் எண்ணி யிருந்தார். அவர் புறப்படும் சமயத்தில் பெரியவருடைய நண்பர்களில் இரண்டு பேர்கள் வந்தார்கள். ''ஒரு ஆட்டம் போடலாமா?'' என்று கிருஷ்ணன்குட்டி கேட்டார்.

சிவசங்கரன் ஆடுவதற்கு விருப்பமில்லை என்று இரண்டு மூன்று தடவைகள் கூறினார். அப்படியும் பெரியவர் வற்புறுத்தவே ஆடும்படி ஆயிற்று.

வேண்டா வெறுப்பாக ஆடிக் கொண்டிருந்தார் சிவசங்கரன், அவர்களுடைய பேச்சுவேறு தலைவேதனையாக இருந்தது.

ஏதேதோ பேசிய பிறகு பெரியவர் தம் நண்பரிடம் ''நீங்கள் வீடு வாங்குவது என்ன ஆயிற்று?'' என்று கேட்டார்.

''வீடு அவ்வளவு சுலபமாகக் கிடைத்து விடுகிறதா? மலைச்சாரல் பங்களாவை மாதவி கொடுக்கமுடியாதென்று மறுத்து விட்டாளாம்.''

சிவசங்கரன் கையில் பிடித்திருந்த கார்டுகளில் நாலைந்து தடாலென்று மேஜையின்மீது விழுந்தன. அவசரம் அவசரமாக அவைகளைப் பொறுக்கிச் சேர்த்து வைத்துக் கொண்டார்.

''அந்த வீடு யாருடையது?''

''கருணாகரனின் பூர்வீகச் சொத்து.''

''மாதவி விற்க மாட்டேனென்று கூறியதாகச் சொன்னீர்களே?''

''மாதவி கூறியதைக் கருணாகரன் மீறுவதில்லை என்பதுதான் பிரசித்தமான விஷயமாயிற்றே!''

அதற்குள் பெரியவர் ''ஏன் இப்படி அவர்களைப் பரிகசிக்கிறீர்கள்? கருணாகரனைப் போன்ற நல்ல பிள்ளையைப் பார்க்கவே முடியாது. தன்னை அன்போடு வளர்த்தவளிடம் அவன் நன்றியோடு இருக்கிறான். அவன் அக்கா மாத்திரம் அவ்வளவுகஷ்டப்பட்டுச் சிரத்தையோடு அவனைப் படிக்க வைத்திருக்கவில்லையானால் இன்று அவன் மில் மானேஜர் பதவியில் இருக்க முடியுமா?'' என்று கேட்டார்.

''நீங்கள் சொல்வதும் வாஸ்தவம் தான். முகுந்தனுக்கு வீடு கிடைக்கவில்லையே என்று ஆத்திரம்; அதனால் தான் அப்படிப் பேசுகிறார்.''

''முகுந்தன் செய்வதுகொஞ்சங்கூடச் சரியில்லை. அந்தக் குழந்தைகளோ பெற்றோர் இல்லாதவர்கள். நியாயமாக முகுந்தனே அவர்களுக்கு உதவி செய்து மாதவிக்குக் கல்யாணமும் செய்துவைத்திருக்க வேண்டும். அவர்களுடைய ஒரே வீட்டையும் கேட்டால் அவர்கள் கொடுப்பார்களா?'' என்றார் பெரியவர்.

முகுந்தன் கோபத்தோடு, ''ஏன் நீங்கள்கூட இப்படிச் சொல்லுகிறீர்கள்? அவர்கள் இருவரும் என்னிடம் சண்டை பிடித்துக் கொண்டு அல்லவா பிரிந்து போனார்கள்? அதற்கு என்ன செய்வது? கருணாகரனைக் காலேஜில் படித்துப் பயனில்லை என்று சொன்னேன். எனக்குத் தோன்றியதை நான் சொன்னேன். அதில் என்ன தவறு? அவர்கள் என்னவெல்லாம் கூறினார்கள் தெரியுமா? மாதவியைக் கல்யாணம் செய்து கொள் என்றுதான் கூறினேன். அவன்தான் இப்படிப் பிடிவாதமாக இருக்கிறான். எங்கள் குடும்பக் கௌரவமும் அவளால் பாழாகிக் கொண்டிருக்கிறது. அவளால் எனக்கும் கெட்ட பெயர்தான்'' என்றார்.

''சரி! இந்தப் பேச்சு போதும். இது ஆரம்பித்து விட்டால் முடியவே முடியாது. இரண்டு பேர்கள் சொல்வதிலும் கொஞ்சம் உண்மை இருக்கிறது. ஆகவே இங்கே அதைப் பற்றி விவாதம் வேண்டியதில்லை. சீட்டைக் கவனியுங்கள்'' என்றார் இன்னொரு நண்பர்.

ஆட்டம் ஒருவாறு முடிந்து சிவசங்கரன் கிளம்பியபோது அவர் மனம் குழப்பமடைந்திருந்தது. 'அந்தப் பெண்ணைப் பற்றி இவர்கள் பேசும் போது எனக்கு ஏன் படபடப்பு உண்டாயிற்று? 'அவள் நல்லவள்' என்று பெரியவர் சொன்னபோது ஏன் மகிழ்ச்சி உண்டாயிற்று? அவளுக்கு விவாகம் ஆகவில்லை என்று தெரிந்தபோது ஏன் உவகை பொங்கிற்று?'' என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார்.

அவருக்கு அப்போதுதான் உண்மை புலனாயிற்று. 'மாதவியிடம் எனக்கு அன்பு உண்டாகி யிருக்கிறது. இதை எதிர்த்துப் போராடுவதா? அல்லது அதைப்போற்றி வளர்ப்பதா?' என்பது தான் கேள்வி. இரண்டில் ஒன்றை இன்று தீர்மானித்து விடவேண்டும் என்று நினைத்துக் கொண்டார். (தொடரும்)

உங்கள் அழகை அதிகரிக்கிறது பாதுகாக்கவும் செய்கிறது!



அற்புத நறுமணமூட்டப்பட்ட சார்மிஸ் ஸ்னோ உங்கள் சருமத்தை அழகுறச் செய்கிறது, பாதுகாக்கிறது. எல்லா பருவ காலங்களிலும் சருமத்தை மிருதுவாகவும், வெல்வெட் போல வழவழப்பாகவும் வைக்கிறது. பவுடருக்கு ஆதாரமானது. எண்ணைப் பசையில்லாதது. சார்மிஸ் ஸ்னோ சொற சொறப்பும், வரிகளும், கோடுகளும், புண்களும் ஏற்படாமல் சிறந்த முறையில் தடுக்கிறது. பூச்சிக்கடிகள், வெடிப்புகளினின்றும் பாதுகாக்கிறது.




ஒரு கால்கேட்
உயர்தர சரக்கு

சார்மிஸ் ஸ்னோ

CSG/3

சார்மிஸ் பலகளரிய க்ரீமையும் டால்கம் பவுடரையும் பரீட்சித்திருக்கிறீர்களா?



தாமரைப் பூ, சந்திரன், அந்தி வானம், அழகு....அட, போ ஐயா. போ! மனிதன் படுகிற பாட்டிலே பாட்டு வேறா? பகற் கனவும், கற்பனையும் யாருக்கு வேண்டும்?' என்று பேசிக்கொண்டே, பதிலுக்குக் காத்திராமல் பறந்து விட்டார் அரசியல்வாதி.

இது ஒன்றும் புதிதில்லை. இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன், கிரேக்க நாட்டில் வாழ்ந்த பிளேதோ என்ற தத்துவ ஞானியும், ஏறக்குறைய இப்படித்தான் பேசினான். அரசியல் தத்துவங்களை மிக நுட்பமாக அவன் ஆராய்ந்தான். ஆராய்ந்து, இலட்சியக் குடியரசு ஒன்று ஏற்படுத்தித் திட்டம் வகுத்தான். அப்போது, 'என்னுடைய இலட்சிய நாட்டில் கவிஞர்களுக்கு இடம் தரமாட்டேன்' என்று சொல்லியும் வைத்தான்.

ஆனால் ஒன்று. போலிக் கவிதையின் படாடோபங்களைக் கண்டு, மனம் நொந்து, ஏதோ அப்படிப் பேசினான் பிளேதோ. போலிக் கவிதை—அதாவது கவிதை என்ற பெயரால், கவிதைக் கண் இல்லாத குருடர்கள் செய்யும் பொருளற்ற அகடவிகட சாமர்த்தியங்கள் - இது எந்த நாட்டிலும் உண்டு, எந்தக் காலத்திலும் உண்டு. அதற்காக, கவிதை என்பதையே ஒதுக்க வேண்டுமா? அரசியலில் சிலர் அட்டூழியம் புரிகிறார்கள் என்பதற்காக, அரசே வேண்டாம், அரசியலுக்கும் ஒரு முழுக்குப் போட்டு விடுவோம் என்று சொல்ல முடிகிறதா? பொருள் இல்லாத வறட்டுக் கற்பனையும் (அதன் பெயர் கற்பனை இல்லை) வாழ்க்கையோடு தொடர்பற்ற பைத்தியக்காரக் கனவுகளும், செய்யுள் வடிவம் தாங்கி, கவிதை என்ற பெயரோடு உலாவுகின்றன என்பதற்காக, கவிதையே வேண்டாம் என்று சொன்னால் அது சரியா? சரியாகாது. பின் ஏன், இன்றும் பலர் கவிதையைப் பற்றி, அது ஏதோ தேவையில்லாத பொருள் மாதிரி பேசுகிறார்கள்? பேசாவிட்டாலும் நினைக்கிறார்கள்? காரணம் வேறொன்றுமில்லை. கற்பனையும் கனவும் கவிதையின் உயிர் நாடி. கம்பருடைய கோசல நாடு ஓர் அழகிய கற்பனை. பாரதியாருடைய 'குயில்' பட்டப்பகலிலே பாவலர்க்குத் தோன்றும் நெட்டைக் கனவு. இப்படி எத்தனையோ பாடல்களை உண்மைக் கவிதை உலகத்தில் எந்த மொழியிலும் காணலாம். இதனால் வாழ்க்கையோடு தொடர்பில்லாமல் பொறுப்புணர்ச்சி இல்லாமல் மனம் போனபடி கற்பனையிலும் கனவிலும் காலத்தைக் கழிக்கிறான் கவிஞன் என்ற எண்ணம் வளர்ந்து விட்டது.

வாழ்க்கையிலிருந்து கவிஞன் ஒதுங்கி நிற்கிறான், ஆகவே அவன் பேச்சு வீண் பொழுது போக்கு, கலைக்கு உதவாது என்பதுதான் குற்றச்சாட்டு. கவிதையா, அது மெத்தப் படித்தவர்க்கு, பாட்டா, அது பசியில்லாத சீமான்களுக்கு என்று பலர் எண்ணுகிறார்கள். இது சரியா?

கவிஞன் வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி நிற்கிறான் என்பது ஒரு விதத்தில் உண்மைதான். எந்த விதத்தில், அதுதான் முக்கியம். மற்ற மனிதர்கள் எதைப் பொருளாகக் கருதுகிறார்களோ, அதைக் கவிஞன் பெரிதாக மதிப்பதில்லை. ஆயிரம் பொன் வேண்டுமா, அலரி மலர் இதழில் துடிக்கின்ற பனித் துளியின் அழகு வேண்டுமா என்றால் உண்மையான கவியுள்ளம் அழகையே நாடும். பொருள்களை அன்று, அவற்றால் ஏற்படும் மன நிலைகளையே கவிஞன் பெரிதாக எண்ணுகிறான். பொருளைவிட மன நிலையில், செயலை விட எண்ணத்தில், செய்தியைவிட அதன் உள்ளே மறைந்து கிடக்கும் உண்மையில், கவிஞனுக்கு நாட்டம் அதிகம். இதனால் மனித வாழ்க்கையிலிருந்து தன்னை அறுத்துக் கொண்டு விட்டான் என்று சொல்ல முடியாது. மேலெழுந்தவாறாக, காரண காரியம் ஆராயாமல், நாம் சுழற்று

இன்ற செயல் வளையத்திற்கு வெளியிலே நின்று, அதன் உட்பொருளை ஆராய்வதே கவிஞனுடைய தொழில். ஆகவே நம்மை விட, வாழ்க்கையோடு நெருங்கிய, மிக நெருங்கிய தொடர்பு கவிஞனுக்கு உண்டு. நமக்கு நம்மைப் பற்றிய சிறு கவலை ஒன்று தான். கவிஞனுக்கோ, மனித வாழ்க்கையின் எல்லா அம்சங்களும், எல்லா மனிதர்களுடைய எல்லாக் கவலைகளும், எல்லா உணர்ச்சிகளும், எல்லாச் செயல்களும் நிலைகளும் சிறுமையும் பெருமையும் நெஞ்சைக் கவரும் பொருள்களாக அமைகின்றன. ஆகவே ஒரு விதத்தில், வாழ்க்கையிலிருந்து கவிஞன் ஒதுங்கி நின்று, மனித வாழ்க்கையின் ஆதார சக்திகளை அவன் தேடிச் செல்கிறான். இதைத் தான் பாரதியார் சொன்னார்:

மண்ணுலகத்து நல் ஓசைகள் காற்றேனும்
வானவன் கொண்டு வந்தான்
பண்ணில் இசைத்து அவ்வொலிகள் அனைத்தை
பாடி மகிழ்ந்திடுவோம். [யும்

இப்படிப் பாடுவதே அவன் வாழ்க்கை, அதுவே அவனுக்கு மகிழ்ச்சி, மனநிறைவு.

அரசியல்வாதி சொல்லி விட்டுப் போனாரே, அதற்கு வருவோம். தாமரைப் பூ, சந்திரன், அந்திவானம், அழகு ..இவை யெல்லாம் தேவையில்லை என்று தோன்றும்படியாக அவர் பேசினார். அழகுணர்ச்சி என்பது மனித வாழ்க்கையில் ஓர் அம்சம் இல்லையா? மனிதன் ஒருவனுக்குத் தானே இந்த உணர்ச்சி உண்டு? நிலவொளியில் கடல் பொங்கி எழுவதைக் கண்டு, திமிங்கலம் ஒன்று உள்ளம் பூரித்ததாக இதுவரை நாம் கேட்டதில்லை. மனிதன்தான் இதைச் செய்கிறான். தாமரை அருகிலேயே வாழ்கின்ற தவளை, அந்த மலரின் அழகிலே சொக்கியதாக எந்த நிருபரும் செய்தி அனுப்பியதில்லை. மனிதன் ஒருவனே பொய்கையின் முன்னே நின்று வியந்து, அதன் குளிர்ந்த இதயமே தாமரையாகப் பூத்துவிட்டதோ:

தண்ணென்ற இதயம் குளிர்ந்தே—வண்ணத்
தாமரையாக மலர்ந்திடும் பொய்கை

என்று கற்பனையின் மூலமாகத் தன் உணர்ச்சியை உருவாக்குகிறான். மலை



மேலிருந்து, கழுகு வானவில்லைப் பார்த்துக் களிப்பதில்லை. அருகிலே ஆடும் மயிலையும் கவனிப்பதில்லை. அதன் நாட்டம் முழுவதும் கீழே எங்கேயோ கிடக்கும் இறைச்சித் துண்டின் பேரில்தான். ஆனால் மனிதனே வானவில்லையும், மயிலையும் கற்பனையினால் ஒன்று சேர்த்து,

வானவில்லே அருகாய்-மயில்
வண்ணச் சிறை விரிக்கும்

என்று பேசி, இரண்டின் அழகையும் ஒன்றாகச் சேர்த்து அனுபவித்து விடுகிறான். இப்படி எல்லா மனிதர்களும் செய்வதில்லை, உண்மை தான். ஆகவே அந்த அளவுக்கு மனிதனுடைய தனிப் பண்பு குறைந்தே, அவர்கள் நடமாடுகிறார்கள். தன்னுடைய அழகுணர்ச்சிப் பெருக்கால், கவிஞன் இந்தக் குறையைப் போக்குகிறான். அவனுடைய சொல் நமது காதில் விழுந்ததும், உலகெங்கும் நமக்கு அழகு மலர்கிறது. தாமரை, சந்திரன், அந்தி வானம் என்று பழகிப் பழகி, நாம் அழகுப் பொருள்களாகக் கருதும் ஒரு சில பொருள்களில் மட்டுமில்லை, அழகின் சாயலை எங்கும் காண்பதற்கு, கவிதை நம்மை அழைத்துச் செல்கிறது. நீர்ப்படு சொறித் தவளை கூப்பிடுவதில் அழகைக் காண்கிறார், காட்டுகிறார் முக்கூடற் பள்ளு ஆசிரியர். மேய்ச்சல் காட்டிலிருந்து எருமை மாடுகள் ஊருக்குத் திரும்பி வருவதில் அழகின் சாயலைக் கண்டு அதை ஒரு கற்பனையால் நமக்குத் தருகிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்:

சர நீர் படிந்து இந்நிலத்தே வரு
கார்கள் என்ன வரும் கரு மேதிகள்

[கார்கள்—மழை மேகங்கள்; மேதிகள் எருமைகள்]

பாரதியாருடைய 'திக்குத் தெரியாத காட்டில்' அவரோடு நடந்தால் 'நேசக் கவிதை சொல்லும் பறவை'யும், 'நீண்டே படுத்திருக்கும் பாம்பும்', 'ஆசை பெற விழிக்கும் மான்களும்', 'உளம் அஞ்சக் குரல் பழகும் புலிகளும்' அழகு முத்திரை பெற்று, நம் முன்னே உலவுகின்றன. இப்படி எத்தனையோ

கவிஞர்கள் எத்தனையோ மொழிகளில் அழகுணர்ச்சியை மக்களிடையே பயிர் செய்து வந்திருக்கிறார்கள். கவிஞனுடைய சாதனை இது ஒன்றே போதும். அவனுக்குப் பெருமை தர, கவிதைக்கு நாம் இடம் தர.

ஆனால் 'இது ஒன்று தானா கவிஞர்களாகிய எங்கள் சாதனை?' என்று கேட்கிறான் ஆங்கிலக்கவிஞன் ஓஷானஸி என்பவன். 'கவிஞர்களாகிய நாங்கள் அழகைத் தேடிச் செல்கிறோம். இது எங்கள் பெருமை. இயற்கைக் காட்சிகளிலே எங்களை மறந்து ஈடுபடுகிறோம், உண்மை தான். மற்றவர்கள் உலகப் பொருள்களைத் தேடுவதிலும் அழிப்பதிலும் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கும் போது, பொருளற்றதாகத் தோன்றும் கற்பனைகளில், கனவுகளில் நாங்கள் அழுந்தி விடுகிறோம், பாடல்களை இசைத்துக் கொண்டே இருக்கிறோம், அதுவும் உண்மைதான். இதனால், சாதாரண மனிதர்களுடைய வாழ்க்கையைத் துறந்து, அதை இழந்து, நாங்கள் நிற்கிறோம். அதனால் என்ன? நாங்கள் எங்கள் கனவுகளைப் பாடுகிறோம். மக்களுடைய நெஞ்சை எங்கள் பாடல் தொடுகிறது. எங்கள் கனவுகளும் கற்பனைகளும் எண்ணிறந்த மனிதர்களுடைய இலட்சியமாகி விடுகின்றன. அந்த இலட்சியத்தை நோக்கி நடப்பதற்கான வேகத்தையும் உறுதியையும், மக்களுக்கு எங்கள் பாடல் தருகிறது. இன்று எங்கள் கனவாக இருப்பது. நாளைக்கு மக்களுடைய குறிக்கோளாக மாறி மறுநாள் நனவாக நிறைவேறி விடுகிறது. உலகத்தில் உள்ள அழகிய பெரு நகரங்களை எழுப்பியது வணிகர்களா, கொல்லர்களா, தச்சர்களா, இல்லை, இல்லை, அவர்களுக்கு நகரங்களை எழுப்புவதற்கான இலட்சிய வேகத்தைத் தந்த நாங்களே! பேரரசு ஒன்று உருவாகிறது. எப்படி? படை வலிமையாலா? இருக்கட்டுமே. படைக்கு வலிமை தருவது எங்கள் சொல் அல்லவா? தனி மனிதன் ஒருவன், தன்னந் தனியனாய் நாங்கள் தரும் கனவொன்றைக் கையிலே கொண்டு நடந்தால், ஒரு நாட்டின் தலைமையை, அதன் மணி முடியை அவன் எளிதிலே பெறலாமே' அது போலவே மூன்று பேர்கள் போதும், எங்கள் பாட்டின் சந்தத்தைக் கையில் ஏந்திச் சென்றால், மகத்தான வலிமை கொண்ட சாம்ராஜ்யத்தை அவர்கள் மிதித்து நசுக்கி விடலாம். வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி நிற்கிறோமா? நல்ல வேடிக்கை! மனித வாழ்க்கையை இயக்குவதும் அது செல்லும் போக்கை இமைப்பதும் நாங்கள் அல்லவா?' இப்படியாகப் பேசுகிறான் கவிஞன் ஓஷானஸி:

இன்னிசை பாடித் திரிகுவோம் ஆயிரம்
இன்பக் கனவுகள் கண்டுவம் துன்னுவோம்:
துன்னும் அலைக்கடல்-துறையில் அலைகுவோம்
தோயும் தனிமையார் ஆற்றைத் தொடருவோம்

மின்னும் நிலவினைப் பூணுவோம் மேதினி
மீதிலே கழல் வாழ்வு துறந்துவோம்.
என்னினும் மனித வாழ்வினை என்றுமே
இயக்கி நடத்தும் இசையைப் படைத்துவோம்.

[தனிமையார்: தனிமை பொருந்திய. மேதினி - உலகம்.]

விந்தைப் பாடல்கள் வியாத்திறத்தவை
விசி உலகிலே வியன் நகர் கட்டுவோம்
அந்தமாய் எழும் கட்டுக் கதையினால்
அகன்ற பேரரசாற்றல் வளைகுவோம்.
சுந்தரக் கனவையே துணையெனக் கொண்டு போய்

சூடலாம் ஒரு நாட்டின் மணிமுடி.
சந்தம் ஒன்றினை ஏந்தியே மூன்று பேர்
சாடிப் பேரரசு ஒன்றினைச் சாய்க்கலாம்.


[வியன் நகர் - வியப்பைத் தரும் பெருமை உள்ள நகரங்கள்: வியாத்திறத்தவை - சாகாத வலிமை உடையவை. பேரரசாற்றல்-பெரிய அரசின் ஆற்றல்.]

இது பாடலின் உன்னதத்தைப் பற்றி, பாடலே தொழிலாக உள்ள கவிஞன் ஒருவன் பாடிய பாடல். இதை அரசியல் வாதி ஒப்புக் கொள்வாரோ, என்னவோ! (தொடரும்)

*Arthur William Edgar O'shaughnessy.
'we are the music - makers'


முத்தமிழ் முனிவர் மணிவிழா

கவியோகி சுத்தானந்த பாரதியாரைத் தமிழ் உலகம் நன்கு அறியும். அவரது மணி விழா 11—5—57ல் வருகிறது. அவ்விழாவைச் சென்னையில் சிறப்பாகக் கொண்டாடப் பல தமிழ் அன்பர்களும், பிரமுகர்களும் முன் வந்துள்ளனர். விழாவில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென்றும், விழா வெற்றிகரமாக நடைபெற நன்கொடை அனுப்ப விரும்புவோர் பொக்கிஷதார் திருமதி சீதாலக்ஷ்மி குமாரசாமி, 216, திருவொற்றியூர் ஹைரோடு, தண்டையார்பேட்டை, சென்னை - 21 என்ற விலாசத்துக்கு அனுப்பலாமென்றும் மணிவிழாக் குழுவினர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.





பட்டுச் சொக்காய்



மலையாளம்: எஸ்.கே.பொட்டேகாட்
தமிழாக்கம்: சௌரி

மாலை ஐந்து மணி. பக்கத்துக் குடிசைகளிலிருந்து புகையும் மணமும் கலந்து வந்து கொண்டிருந்தன. சமையல் தொடங்கிவிட்டதற்கு அடையாளமாக அடுக்களையிலிருந்து வரும் குறிப்புதான் அது. வெறும் ஓலைபரப்பிய ஒரு சிறு குடிசையிலிருந்து அந்த அடையாளத்தைக் கூடக் காணோம். அச்சானியத்தைக் காட்டும் அமைதிதான் அங்கே இருந்தது.

அந்தக் குடிலைக் காணும்போது, நாகரிகமாக வாழ்பவர்களுக்குக் கோழிப்புரைதான் நினைவு வரும். அடுக்களை, அறை, முற்றம், ரேழி என்ற பாகுபாடுகள் அதில் கிடையா. வெயிலில் பொசுங்காமலும், மழையில் நனைந்துவிடாமலும் உடலைப் பாதுகாத்துக் கொள்ள அது ஒரு மறைப்பு-அவ்வளவுதான். இடம் கூண்டுபோல் சிறியதாக இருந்தாலும், உள்ளே வாசம் புரிபவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம்; பத்து குழந்தைகள், நாலைந்து பெரியவர்கள்!

அங்கு, காய்ந்த தேங்காய் நார் மட்டைகளின் குப்பல், ஒரு சிறு குன்றுபோல் உயர்ந்து நிற்பது தென்படுகிறது. வறுமையைக் கொண்டே அமைத்த கோட்டை மதில் என்று கூட அதைச் சொல்லலாம். அதன் அருகில் இரு பெண்கள் நிற்கிறார்கள். ஒருத்திக்கு இருபது வயது இருக்கும்; காய்ந்த நார் மட்டைகளை, உலக்கையால் இடித்துப் பதம் செய்து கொண்டிருக்கிறாள். முதிர்ந்த வறுமையின் பரட்டைத் தலைகளாகத்தான் அவை காட்சி யளிக்கின்றன.

மற்றொருத்திக்கும் வேலை சரியாகவே இருந்தது. மானத்தை மறைத்துக் கொள்ள மட்டும் உதவ, ஒரு சிறு முண்டு அவளது உடலைச் சுற்றியிருந்தது. பிள்ளைத்தாய்ச்சி. சோர்வைச் சகித்துக் கொண்டே, பதமாக்கப்பட்ட நார்மட்டைகளைப் பிழிந்து கொண்டிருந்தாள். நாற்பது ஆண்டுகளைக் கடந்தவள்; பத்து பெற்று, பதினொன்றாவதை வயிற்றில் தாங்கிக் கொண்டிருப்பவள். 'குஞ்சிப் பெண்ணு' என்ற பெயருக்கு உடைய அவள், வீட்டுத் தலைவன் பனங்கோட்டுப் பெரச்சனின் வாழ்க்கைத் துணைவி.

பனங்கோட்டுப் பெரச்சனுக்குப் பஞ்சாலையில் வேலை. நாள் முழுவதும் பாடுபட்டாலும், கூலி அஞ்சுக் கணக்கை விட்டுத் தாண்டாது. இதை வைத்துக்கொண்டு, பதினாறு ஜீவன்கள் பிழைத்தாக வேண்டும்! பத்துக் குழந்தைகளில் ஒன்பது பெண், ஒரு ஆண். மூத்த மகளின் இரு குழந்தைகளைக் காப்பாற்றும் பொறுப்பும் பெரச்சனுக்குச் சேர்ந்து கொண்டது. மூத்த மகள் கணவனை இழந்தவள். அநாதை.

ஏதோ அலுவலாக அவள் எழுந்து வெளியே சென்றாள். இதுதான் சமயமென்று தெரிந்து கொண்டு, சிறு கரிய உருவம் ஒன்று நோயாளியின் தலைமாட்டுப் பக்கம் சென்றது. அதன் முயற்சி வீணாகவில்லை. கற்கண்டுக் கட்டி யொன்று கைக்குக் கிடைத்தது. வந்த சுவடு தெரியாமல், அந்த உருவம் திரும்பி வெளியே போய்விட்டது. வியாதிக்காரக் குழந்தைக்கு மருந்து கொடுத்ததும், வாய்க் கசப்பு மாறுவதற்காகப் பத்திரப்படுத்தி வைத்திருந்த அருமையான இனிப்புப் பண்டம் அது.

இப்படியெல்லாம், சமயம் பார்த்துத் திருடித் தின்றும் கொழுத்த கரிய உருவம்தான் பெரச்சனின் ஆண் குழந்தை! ஆறு வயதுதான். வறுமைக் குடும்பத்தில் பிறந்த இந்தப் பிள்ளை மட்டும் சதைப் பற்றுடன் வளர்த்தியாக இருந்தான். விகாரமான தோற்றத்துக்கு வேண்டிய அம்சங்கள் பலவும் பையனிடம் சேர்ந்திருந்தன. அவனுக்குக் 'குட்டாயிச் செக்கன்' என்று பெயர். அழைக்க உதவும் ஆசைப் பெயர் 'குட்டாயி'. ஒரு கால் நொண்டி; ஒன்றரைக்கண் பார்வை; கரிக்கட்டை மேனி. 'சின்னக் குட்டிச்சாத்தான்' என்றுதான் எல்லோரும் அழைப்பது வழக்கம்.

பெரச்சனுக்கு மட்டும் குட்டாயியின் பேரில் அலாதி அன்பு. அளவுக்கு மீறிய செல்லமும் கொஞ்சலும் நல்ல பிள்ளையையே கெடுத்து விடுபவை; குட்டாயிக்குக் கேட்பானேன்? இந்த அழகில், மகனை யாரும் எதற்காகவும் அடித்துவிடக் கூடாது என்ற மிகக் கடுமையான தடை உத்தரவை நிரந்தரமாகப் போட்டு வைத்திருந்தான் பெரச்சன்.


அன்று மாலையில் பெரச்சன் குடிசைக்கு வந்து கொண்டிருந்தான். குட்டாயி சுற்று முற்றும் பார்த்துவிட்டு, பாய்ந்து கொண்டு தந்தையை அணுகினான். தொண்டியின் நடையிலே தான் எத்தனை வேகம்!

பெரச்சன் தன் மடியிலிருந்து ஒரு பழத்தை எடுத்து மகன் கையில் கொடுத்தான். அன்பளிப்பைப் பெற்றதும், குட்டாயி சிரித்தான். பழத்தைத் தின்ற வண்ணம், குட்டாயி பெரச்சனைப் பின் தொடர்ந்து வந்தான்.

"அப்பா! எனக்கொரு பட்டுச் சொக்காய் தைச்சுத் தரணும்" என்றான் தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு.







"பட்டுச் சொக்காயா? ஐயையோ, மகனே! என்ன ஆசையடா உனக்கு?"

"கீழ வீட்டு நாணு ஒரு சட்டை போட்டுக் கொண்டிருக்கிறான். பார்க்கல்லே? ஹஹ்ஹா! எப்படி இருக்கு, தெரியுமா? பச்சை நிறம்; வழுவழுன்னு இருக்குது. அதே மாதிரி எனக்கும் ஒரு சொக்காய் இருந்தால்போதும், அப்பா!"

கீழண்டை வீட்டுப் பையன் வெல்வெட்டுச் சட்டையைத் தடபுடலாக அணிந்து கொண்டு பள்ளிக்கூடம் போய் வருவதைப் பெரச்சன் அடிக்கடி பார்த்து வந்திருக்கிறான்.

"அது மாதிரி சொக்காய் தைக்க நாலைந்து ரூபாயாவது ஆகுமடா, மகனே! இங்கே நமக்குத்தான் வேலைக்கு வேலை வகையாய்க் கஞ்சி குடிக்கவே வழியைக் காணோமே; உனக்கும் தெரிந்ததுதானே!"

குட்டாயிக்கு இந்தச் சமாதானம் காதில் ஏறவில்லை. முனகலும் சிறு அழுகையுமாகப் பிடிவாதம் செய்யத் தொடங்கினான்.

"கஞ்சி இல்லாமல் செத்தாலும் சரி, எனக்கொரு பட்டுச் சொக்காய் கட்டாயம் வேணும்!" ஆசை நிறைவேறுமோ என்ற சந்தேகத்துடனேயே தந்தையின் முகத்தைப் பார்த்துக் கொண்டு கெஞ்சினான் குட்டாயி.

பெரச்சனுக்கு மிகவும் சங்கடமாயிருந்தது. மகன் தொந்தரவு அடங்கினால் போதுமென்று பணம் கிடைத்ததும் பட்டுச் சொக்காய் தைத்துக் கொடுப்பதாக வாக்களித்தான். குட்டாயிக்கு மகிழ்ச்சி வந்தது. சொக்காய் கிடைத்து விட்டதாகவே எண்ணிப் பூரித்தான். மிகவும் உற்சாகமாகச் சிரித்துக் கொண்டே துள்ளிக் குதித்துத் தன் பெருமையை வெளிப்படுத்தினான்.

பெரச்சன் குடிசைக்குள் நுழைந்ததும், சிதறியிருந்த மற்றக் குழந்தைகளும் ஓடி வந்து சூழ்ந்து கொண்டன. இரண்டாவது பெண் சிறுதா பெரிய பாத்திரத்தில் கொஞ்சம்

கஞ்சியை வார்த்துத் தந்தையின் எதிரில் வைத்தாள். உடனே ஒரு கலவரம். ஐந்தாறு நிமிஷங்கள் வரை பல கைகள் கஞ்சிப் பாத்திரத்துக்குள் போட்டி போட்டுக் கொண்டு அலைந்தன. கஞ்சிக்கடியில் இருந்த சோற்றுப் பருக்கைகளுக்குத்தான் இத்தனை பரபரப்பும் போட்டியும்! கையில் இட்டியதை வாயில் போட்டுக் கொள்வதும், மறுபடியும் பாத்திரத்துக்குள் விரல்களை இட்டுத் துழாவி,முத்துக் குளிப்பவன்மாதிரி பருக்கைகளைச் சேகரிப்பதும் ரகளையாகத்தான் இருந்தது. ஆயிற்று: இனி முயற்சிக்குப் பலனில்லை என்று கண்டு கொண்டதும் குழந்தைகள் திசைக்கு ஒன்றாக ஓடி மறைந்தன. இவ்வளவு பிடுங்கல்களையும் சகித்துக் கொண்டு பெரச்சன் மீதிக் கஞ்சி நீரை ஒரே முட்டில் குடித்து விட்டுத் திருப்திக்கு அறிகுறியாக ஏப்பம் விட்டுக் கொண்டே எழுந்தான். கை வேலையை முடித்துக் கொண்டு குஞ்சிப் பெண்ணு எதிரே வந்து நின்றாள். மனைவி நிற்கும் நிலையிலேயே என்ன சொல்ல வந்திருக்கிறாள் என்பதைப் பெரச்சன் ஊகித்துக் கொண்டான்.

''மணி அரிசிகூடக் கிடையாது. வியாதிக்காரிக்காவது கஞ்சி வார்க்க வேண்டாமா? இன்றைக்குப் பகல்முழுவதும் நாங்கள் (தாயும் இரு பெண்களும்) பட்டினி. இனி இராப் பொழுதைப் போக்கியாகணும். இந்த அல்லலுக்குக் கொஞ்சமாவது விடிவு வராதா? நோயாளிப் பெண்ணை எத்தனை நாள்தான் இப்படி வதங்கப்போட முடியும்? தொண்டை நனையவாவது வேளைக்குக் கொஞ்சம் கஞ்சி வேண்டாமா? வாரத்துக்கு ஒரு முறைகூடவா மருந்து கொடுக்காமல் இருக்க முடியும்? எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி வாயும் வயிறும் காய வாழ முடியும்?....''

மனைவியின் வேதனைக் குரல் சற்று உள்ளத்தை உலுப்பியது; இருந்தாலும் பெரச்சன் வாய் திறக்கவில்லை. கையில் காசு இல்லை. செய்வது என்ன என்பது தோன்றாமல், குத்திட்டு நிற்கும் தாடை மயிர்களைத் தடவிக் கொண்டிருந்தான். எங்கோ பார்வை, எங்கோ யோசனை என்ற நிலை. எங்கு போவது எங்கே போகிறோம் என்ற தீர்மானமில்லாமலேயே எழுந்து வெளியே சென்றான்.

அந்தி மறைந்தது. இருள் சூழ்ந்து வந்து அந்த வட்டாரத்தையே கவ்விக் கொண்டது. மின்மினிகள் அங்குமிங்கும் மினுக்குவது தெரிந்தது. குட்டாயி சட்டையைக் கழற்றி மூலையில் எறிந்து விட்டு, பரபரப்புடன் வெளியே விரைந்தான். குடிசையின் வெளித் திடலைக் கடந்து, ஒற்றையடிப் பாதை வழியாக நடந்து சென்றான். அவன் கையில் நைத்த குழிவான பானை ஒன்றும் இருந்தது.

பாதையின் முடிவில் ஒரு மதில்; குட்டாயி அநாயாசமாக அதைத் தாண்டி மறுபுறம் குதித்தான். எதிரே பெரிய பங்களா; இடையில் மரங்களும் செடிகளும் அடர்ந்திருந்தன. குட்டாயி பதுங்கிப் பதுங்கி முன்னேறினான். நிலவு படரத் தொடங்கி விட்டது. அக்கம் பக்கத்தைக் கவனமாகப் பார்த்து விட்டு, விருட்டென அடுக்களைப் பக்கம் புகுந்து விட்டான் குட்டாயி!


சமையற்காரன் அப்பளம் காய்ச்சுவது தெரிந்தது. வேறு யாரும் இல்லை. அரைமணி வரையில் குட்டாயி வாழை மரத்து மறைவில் ஒளிந்து கொண்டிருந்தான்.

வழக்கம்போல், வேலை முடிந்ததும் சமையற்காரன் குளிக்கச் சென்றான்.

குட்டாயி சட்டென்று அடுப்படிக்குப் போனான். பல பதார்த்தங்கள் தயார் செய்து வரிசையாக மூடி வைக்கப்பட்டிருந்தன. குட்டாயி அவசரம் அவசரமாகக் கொஞ்சம் சோறும் உப்பேறியும், பப்படமும், மற்றும் சில உணவுகளும் வாரி எடுத்துத் தன் குழிவுப் பானையில் போட்டுக் கொண்டான். அக்கம் பக்கத்தை ஒரு நோட்டம் பார்த்து விட்டு, வந்தபடியே வெளியேறினான்.

அப்புண்ணி நாயரின் பங்களா அது. பெரிய மிராசுதார் அவர். அந்த நிலவு நேரத்தில், வெளி மாடி முற்றத்தில் இரு மனிதர்கள் நின்று கொண்டிருந்தார்கள். இருவரும் இளந் தம்பதிகள், அப்புண்ணி நாயரின் மகளும் மருமகனும். இளைஞனின் கையில் ஒரு துப்பாக்கி இருந்தது. பறவைகளைச் சுடும் சாதாரணத் துப்பாக்கிதான். வாழைத் தோட்டத்தில் வந்து உட்காரும் பெரிய வௌவால்களை வேட்டையாடுவதில் வாலிபனுக்கு மிகுந்த உற்சாகம். கணவனின்





புதிய நாணயங்கள்
1957 ஏப்ரல் 1-உ முதல்

தற்போதைய நாணயங்களில்
அதன் சரி சமமான மதிப்பு

10 நயே பைசே-(ரூபாயில் 10ல் ஒரு பாகம்)-1 அணா 7.2 பை
5 நயே பைசே-(ரூபாயில் 20ல் ஒரு பாகம்)-9.6 பை
2 நயே பைசே-(ரூபாயில் 50ல் ஒரு பாகம்)-3.84 பை
1 நயா பைசா-(ரூபாயில் 100ல் ஒரு பாகம்)-1.92 பை
(நயே பைசே என்பது நயா பைசாவின் பன்மை)

பழைய நாணயங்களான காலணா, ½ அணா, 1 அணா, 2 அணா, 4 அணா, 8 அணா நாணயங்களும் மேற்கூறிய புதிய நாணயங்களுடன் புழக்கத்திலிருக்கும். நாலணா, எட்டணா நாணயங்களுக்கு நேர் சமமான புதிய நாணயங்களை முறையே 25 நயே பைசே, 50 நயே பைசே. எல்லா லேவாதேவிகளிலும் இதே விகிதத்தைக் கையாளலாம். பழைய, புதிய நாணயங்களை இரண்டும் லேவாதேவியிலோ அல்லது கணக்கு களிலோ செல்லுபடியாகும்.

நாணய மாற்றும் சாதனங்கள்

ரிசர்வ் பாங்கு காரியாலயங்கள், ஸ்டேட் பாங்கு கிளைகள், ஏஜென்ஸி பாங்குகள், கஜானாக்கள், உப கஜானாக்கள் ஆகியவை மூலம் நாணயங்களை மாற்றிக் கொள்ளலாம்.

இப்போதுள்ள நாணயங்களைக் கொடுத்துத்தான் புதிய நாணயங்களாக மாற்றிக்கொள்ள வேண்டும். அதற்கு பழைய நாணயங்களின் மொத்த மதிப்பு 4 அணாவும் அதன் மடங்குகளாகவும் — அதாவது 4 அணா, 8 அணா, 12 அணா, 1 ரூபாய் போன்றவைகளில் — இருக்கவேண்டும்.

நாணய மாற்றுப் பட்டியல்

அணா/பைகளுக்குச் சமமான மதிப்புள்ள நயா பைசாக்களை நாணய மாற்றுப்பட்டியலில் காணலாம். (சமீபத்தில் திருத்தப்பட்ட 1906ஆம் இந்திய நாணயச் சட்டத்தின் 14(2) பிரிவில் கொடுத்துள்ள முறைப்படி பூரிதமாக்கப்பட்டுள்ளது). அதில் மாற்ற வேண்டிய மொத்த நாணயத்திற்கும் சமமான நயா பைசா பின்னங்கள் முழு நாணயங்களாக (பூரிதமாக) ஆக்கிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது ½ நயா பைசாவும் அதற்குக் குறைந்த பின்னங்களும் விட்டுவிடப்பட்டு, ½ நயா பைசாவுக்கு மேலுள்ளதை ஒரு நயா பைசா என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எந்தவொரு லேவாதேவியிலும் அணா/பைகளில் ரொக்கமாகக்
கொடுத்தால் அதற்குச் சமமான நயா பைசாக்கள்.

பழைய நாணயங்கள் அணா	பை	புதிய நாணயங்கள் நயே பைசே	பழைய நாணயங்கள் அணா	பை	புதிய நாணயங்கள் நயே பைசே	பழைய நாணயங்கள் அணா	பை	புதிய நாணயங்கள் நயே பைசே	பழைய நாணயங்கள் அணா	பை	புதிய நாணயங்கள் நயே பைசே
0	3	2	4	3	27	8	3	52	12	3	77
0	6	3	4	6	28	8	6	53	12	6	78
0	9	5	4	9	30	8	9	55	12	9	80
1	அணா	6	5	அணா	31	9	அணா	56	13	அணா	81
1	3	8	5	3	33	9	3	58	13	3	83
1	6	9	5	6	34	9	6	59	13	6	84
1	9	11	5	9	36	9	9	61	13	9	86
2	அணா	12	6	அணா	37	10	அணா	62	14	அணா	87
2	3	14	6	3	39	10	3	64	14	3	89
2	6	16	6	6	41	10	6	66	14	6	91
2	9	17	6	9	42	10	9	67	14	9	92
3	அணா	19	7	அணா	44	11	அணா	69	15	அணா	94
3	3	20	7	3	45	11	3	70	15	3	95
3	6	22	7	6	47	11	6	72	15	6	97
3	9	23	7	9	48	11	9	73	15	9	98
4	அணா	25	8	அணா	50	12	அணா	75	16	அணா	100

ஒரு பரிவர்த்தனையின் இறுதியில் கொடுக்க வேண்டிய அணா, பைசகளுக்குச் சமமான நயா பைசாக்கள் கண்டு பிடிக்கும்போது மட்டுமே நாணய மாற்றுப்பட்டியலில் கொடுத்துள்ளபடி பின்னம் நீக்கி முழு நாணயமாக்க (பூரிதமாக்க) வேண்டும்.

உங்களிடம் இருக்கும் நாணயத்தைப் பொறுத்து பழைய அல்லது புதிய நாணயங்களையோ அல்லது இரண்டையும் கலந்தோ கொடுக்கலாம்.

எனவே கீழ்க்கொடுத்துள்ள உதாரணங்கள் பிரகாரம் பரிவர்த்தனையின் முடிவில் பணம் கொடுக்கும்போது அல்லது சில்லறை மாற்றும்போது மட்டுமே இந்த நாணய மாற்றுப் பட்டியலை உபயோகிக்க வேண்டும்.

உதாரணங்கள்: (கொடுக்கவேண்டிய தொகை அணா பைசகளிலிருந்தால்)

ஒவ்வொன்றும் 1½ அணா வீதம் 12 சாமான்களுக்குக் கொடுக்க வேண்டிய மொத்தத் தொகை 1 ரூபாய் 2 அணா. அதை பொருள்வாங்கியவர் பழைய நாணயங்களில் கொடுக்கலாம்,

அல்லது

1 ரூபாய் 12 நயே பைசே கொடுக்கலாம். (பட்டியலில் குறிக்கப்பட்டுள்ளபடி 12 நயே பைசே- 2 அணாவுக்குச் சமம்)

மேற்கூறிய உதாரணத்தில், பொருள் வாங்கியவர் 2 ரூபாயை — எல்லாம் பழைய நாணயங்களாகக் கொடுத்து விட்டு, மீதியைக் கேட்கலாம். பாக்கி 14 அணாவை, அணா நாணயங்களிலோ அல்லது புதிய நாணயங்களிலோ அல்லது ஒரு பகுதியை பழைய நாணயத்திலும் மற்றோர் பகுதியை புதிய நாணயங்களிலும் கொடுக்கலாம். உதாரணமாக, எட்டு அணாவை பழைய நாணயங்களாகவும் பாக்கி 6 அணாவை புதிய நாணயங்களாகவும் கொடுக்க வேண்டியிருக்கிறது. நாணய மாற்றுப் பட்டியலைப் பார்த்தால் 37 நயே பைசே 6 அணாவுக்குச் சமம் என்று தெரியவரும்.

உதாரணங்கள்: (கொடுக்கவேண்டிய தொகை நயா பைசாக்களிலிருந்தால்)

ஒரு பொருளின் விலை 11 நயே பைசே. ஒருவர் இதை புதிய நாணயமாகவோ அல்லது 1 அணா 9 பைசாகவோ கொடுக்கலாம். (பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி 1 அணா 9 பை, 11 நயே பைசேக்குச் சமம்)

ஒருவர் 20 நயே பைசே கொடுத்துவிட்டு 11 நயே பைசே போக மீதி கேட்டால், 9 நயே பைசே அல்லது அதற்குச் சமமான பழைய நாணயங்கள் — 1 அணா 6 பை — கொடுக்கலாம்.

11 நயே பைசே கொடுக்க வேண்டியவர் உங்களிடம் 4 அணா நாணயம் கொடுத்து பாக்கி கேட்கலாம். 25 நயே பைசே 4 அணாவுக்குச் சமம். எனவே திரும்பக் கொடுக்க வேண்டிய தொகை 14 நயே பைசே. இதை பூராவும் புது நாணயங்களாகவோ அல்லது அதற்குச் சமமான பழைய நாணயங்களாகவோ — பட்டியலிலுள்ளபடி 2 அணா 3 பை — கொடுக்கலாம். மேலும் ஒரு அணா நாணயத்தையும் (6 நயே பைசே), புதிய நாணயத்தில் 8 நயே பைசேவும் சேர்த்துக் கொடுக்கலாம்.

ஒவ்வொரு பொருளின் அல்லது யூனிட்டின் விலையான அணா பைசகளுக்குச் சமமான நயா பைசாக்களைக் கண்டுபிடிக்கக் கூடாது. கொடுக்கவேண்டிய மொத்த தொகைக்கு சமமான நயா பைசாக்களையே கண்டுபிடிக்க வேண்டும்.

உதாரணமாக:

அ) ஒவ்வொன்றும் 3 அணா வீதம் 50 சாமான்கள் வாங்கினால் முதலில் மொத்தத் தொகையையும் ரூபாய்/அணாக்களில் கண்டு பிடியுங்கள்; நீங்கள் கொடுக்கவேண்டிய மொத்தத் தொகை 9 ரூபாய் 6 அணா.

ஆ) உங்களிடம் நயா பைசாக்கள் மட்டுமே இருந்தால், 6 அணாவுக்கு சமமான நயே பைசே எத்தனையென்று நாணய மாற்றுப்பட்டியலில் பாருங்கள்; 37 நயே பைசே என்று தெரியவரும். எனவே 9 ரூபாய் 37 நயே பைசே கொடுங்கள்.

3 அணாவுக்குச் சரிசமமான விகிதாசாரத்தை (18¾ நயே பைசே) கணக்கிட்டு, அதை 50-ஆல் பெருக்கினால் கூட மேற்கூறிய தொகைதானவரும். ஆனால் நாணய மாற்றுப் பட்டியல் மூலம் 3 அணாவுக்குச் சமமான முழு நாணயமாக்கிய (பூரிதமாக்கிய) நயா பைசாக்களைக் கண்டுபிடித்து (19 நயே பைசே) அதை 50-ஆல் பெருக்குவது தவறு.

இதே போல, ஒருவரிடமிருந்து ஒரு சமயத்தில் ஒவ்வொன்றும் வேறுபட்ட விலையுள்ள பொருள்களை அணா, பைசா மதிப்பில் வாங்கினால் முதலில் எல்லா பொருள்களுக்கும் கொடுக்கவேண்டிய மொத்தத் தொகையையும் ரூபாய், அணா, பைசகளில் கணித்துக் கொள்ளுங்கள். அதை நீங்கள் புதிய நாணயங்களில் கொடுக்க விரும்பினால், மொத்த தொகையிலுள்ள அணா, பைசகளுக்குச் சமமான நயா பைசாக்களை நாணய மாற்றுப் பட்டியலிலிருந்து கண்டுபிடியுங்கள்.

கீழ்க்கண்ட வாய்ப்பாட்டை நினைவில் வைத்துக் கொண்டால் நாணய மாற்றம் சுலபமாகிவிடும்:

4 அணா	—	25 நயே பைசே
8 அணா	—	50 நயே பைசே
12 அணா	—	75 நயே பைசே
1 ரூபாய்	—	100 நயே பைசே

உதாரணமாக:

அ) 10½ அணா கொடுக்கவேண்டியிருந்தால், முதலில் 8 அணா அல்லது 50 நயே பைசே கொடுங்கள்; மீதமுள்ள 2½ அணாவுக்குப் பதிலாக 16 நயே பைசே கொடுங்கள்.

ஆ) 36 நயே பைசே கொடுக்கவேண்டியிருந்தால், முதலில் காலணா அல்லது 25 நயே பைசே கொடுங்கள், மீதமுள்ள 11 நயே பைசேக்குப் பதிலாக 1 அணா 9 பை கொடுங்கள்.

DA56/250 TM

கைவண்ணத்தைக் கண்டு களிப்பதில் இள நங்கைக்குத் தனி இன்பம்.

"அதோ பாருங்கள், நல்ல முரட்டு வெளவால். வாழை மரத்துக்குப் பக்கமாக நகருகிறது." தோட்டத்தைச் சுற்றிக் காண்பித்துக் கொண்டு மனைவி சொன்னாள். கணவன் உற்றுப் பார்த்தான். வாழைமரத்தில் தொத்திக் கொண்டு ஒரு பெரிய கரும் வெளவால் இருப்பதாகத் தென்பட்டது. குறி பார்த்து, துப்பாக்கிக் குதிரையை அவன் இழுத்து விட்டான்.

வெடிச் சத்தத்தைத் தொடர்ந்து விசித்திரமான கதறலுடன் ஒரு கரிய உருவம் கீழே விழுந்தது. வேட்டைக்காரர் உற்சாகத்துடன் இறங்கி ஓடி வந்தார். மனைவிக்கு அவர் விரைவில் வேட்டைப் பொருளுடன் வந்து சேரவேண்டுமென்ற துடிப்பு.

பதினைந்து நிமிஷங்கள் கழித்து, இளைஞர் கனக்கத்துடன் திரும்பி வந்து சேர்ந்தார்.

"நாம் குறி பார்த்தது வெளவால் இல்லை; ம்த்ச.....!" வேதனையைவிட வெறுப்புத்தான் குரலில் மேலோங்கி இருந்தது.

"பின்னே...?"

"ஒரு சின்னப் பையன்."

"பையனா..? மனிதப்பிள்ளையா? ங்ஹா..!"

"ஆமாம்."

இருவரும் தடதடவென்று இறங்கிக் கீழே ஓடினார்கள். இதற்குள் வீட்டுக்காரர்களுக்கும் விவரம் தெரிந்து விட்டது. விபத்து நடந்த இடத்தில் சிறு கூட்டம் சேர்ந்து விட்டது. ஒரு ஆள் அநுதாபத்தோடு, "ஐயையோ! குட்டாயிச் செக்கனல்லவா செத்துப் போனது!" என்று உரக்கச் சொன்னான்.

காலும் கையும் மலர்ந்து, ரத்தப் பெருக்கில் மல்லாந்தபடி கிடந்தது குட்டாயியின் வெறும் உடல். பக்கத்தில் பானைக் கூடையும் உணவுப் பண்டங்களும் சிதறிக் கிடந்தன. தடிமனை நேந்தரம் வாழை மரத்தில் ஏறி, மதிற்சுவரை எட்டும்போதுதான் அவன் துப்பாக்கி ரவைக்கு இரையானான்.

அன்று இரவு வெகு நேரம்கழித்து, பங்களா சொந்தக்காரர் பெரச்சனை அழைத்து வரும்படி ஆள் அனுப்பினார். பெரச்சன் எதற்கு என்று அறியாமல் குழம்பிக் கொண்டு, வந்து நின்றான். வந்ததும், அவன் மகனின் திருட்டுத்தனத்தையும், அவனை அப்படி வளர்த்து விட்ட குற்றத்தையும் மாறி மாறிச் சுட்டிக் காண்பித்து, அப்புண்ணி நாயர் வசைமாரிகளுடன் பெரச்சனை மிரட்டினார். கடைசியாக, எதிர்பாராமல் நடந்து விட்டதை நியாயமாகப் படும்படி அறிவுறுத்தி விட்டு, ஐந்து ரூபாய் நோட்டைப் பெரச்சன் கையில் கொடுத்தார். மிடுக்குக் குறையாமல் அதட்டியே நாயர் சொன்னார்:

"எலே! என் மாப்பிள்ளையினுடைய கட்டாயத்துக்காக வேண்டியாக்கும் நான் இந்தப் பணம் உனக்குக் கொடுக்கிறது. கேட்டியாடா? அவர் தகப்பனார் போலீஸ் இன்ஸ்பெக்டராக்கும்; தெரிந்து கொள்ளடா..... சரி, உன் மகன் சவத்தை எடுத்துக் கொண்டு போய் உடனே குழி தோண்டிப் புதைத்து விட்டு வா, என்ன?"

மறுநாள் உச்சிப் பொழுது வரையிலும் குட்டாயியின் சவத்தைக் குடிசைக்கு எதிரில் போட்டு வைத்திருந்தார்கள். அக்கம் பக்கத்துப் பெண்கள் முறை வைத்து அழுதார்கள். பெற்றவர்களுக்குத் தெய்வத்தைத் தவிர வேறு யாரையும் சபிக்கத் துணிவு வரவில்லை.

பசி மேலிடவே, முனகி அழக்கூட முடியாமல் தாயும் உடன் பிறந்தவர்களும் ஓய்ந்து விட்டார்கள். களைப்பு மேலிடவே சாகாப் பிணங்களாக நினைவிழந்து கிடந்தார்கள். முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதபடி குந்தியிருந்தான் பெரச்சன்.

"ஏதோ, எப்படியோ குட்டாயி போய்ச் சேர்ந்துட்டான். வயிறு துடிக்க மத்தவங்களும் சாகாமல் இருக்க வழியைப் பார்க்கணும். வயத்துப்பிள்ளை செத்துக் கிடக்கிற போது சொல்லக்கூடாதுதான். இருந்தாலும் நான் சொல்லுகிறதைக் கேளுங்க. நீங்க அந்த ஐந்து ரூபாய்க்கு அரிசியும் சாமானும் வாங்கி வந்துவிடுங்க. நீங்க எழுந்துபோய் வந்தால்தான் இந்த ஒரு சாவோடு நாம் தப்பிக்கலாம்."

சொல்லி முடித்துவிட்டு, குட்டாயி பக்கம் திரும்பிச் சிறு ஒப்பாரியும் வைத்து ஓய்ந்தாள் தாய். அவள் பெண் சிறுதா அழத் தெம்பு இல்லாமல் முடங்கிக் கிடந்தாள். குட்டாயி பத்திரப்படுத்தி வைத்திருந்த ஓலைச் சக்கரம், காற்றாடி, சின்ன வண்டி முதலியவைகளைத் துணிந்து எடுத்து வந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள் மீதித் தங்கைகள்.

"நீங்க சீக்கிரம் போய் வந்துவிடுங்க. குட்டாயியை மூடச் சல்லாத் துணி ஒண்ணும் சின்னதாக வாங்கி வந்துவிடுங்க; மறந்து விடக் கூடாது. அரிசி, உப்பு, மிளகு, கொஞ்சம் பார்லி அரிசி இவைதான் முக்கியம். முதலிலே அவசரமாக அரிசி வந்தாகணும்" என்று குஞ்சிப் பெண்ணு கணவனைத் துரிதப் படுத்தி அனுப்பினாள்.

பெரச்சன் சவத்தைக் குளிப்பாட்டி ஓர் மறைவிடத்தில் கிடத்திவிட்டு, கடைத் தெருவுக்குச் சென்றான். மூத்த பெண் அடுப்பை மூட்டினாள். அரிசி வருவதற்குள் கொதி கிளம்பி, ஏற்பாடாக இருக்க வேண்டுமென்று உலைநீருடன் சட்டியை அடுப்பில் ஏற்றினாள். எல்லா வயிறுகளும் பசியோடு பெரச்சனின் வரவுக்காகக் காத்துக் கிடந்தன.



கடைவீதியில் துணிக்கடையைக் கடந்த போது பெரச்சனின் மனத்தில் புது எண்ணம் ஒன்று அழுத்தியது. 'குழந்தை நேற்று பட்டுச் சொக்காய் வேணுமென்று ஆசையாகக் கேட்டானே....கஞ்சி இல்லாமல் செத்தாலும் சரி, எனக்குப் பட்டுச் சொக்காய் போட்டுக்கொள்ளணும் என்று கேட்டானே. சாகப் போகிறோமென்று தெரிந்தேதான் அப்படிக் கேட்டு வைத்தானோ ...!'

பெரச்சனால் மேலே நடக்க முடியவில்லை. எதிரே அழகான பச்சை வர்ணச் சட்டையொன்று அவனை வலிந்து இழுத்தது. 'உயிரோடு இருக்கிறபோதுதான் போட்டுப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை; சவத்துக்காவது அணிவித்துக் காணுவோமே' என்று தீர்மானித்தான் பெரச்சன். மெள்ளக் கடைப் பக்கம் சென்று விலையை விசாரித்தான்.

"அஞ்சு ரூபாய்; உனக்காக வேண்டி நாலணா குறைத்துக் கொடுக்கிறேன்" என்று கடைக்காரன் சொன்னான்.

பெரச்சன் குழம்பிக் கொண்டு நின்றான். மீதி நாலணாவை வைத்துக் கொண்டு என்ன செய்வது? மேலே போர்த்த சல்லாத்துணி வேறு வாங்கியாகணும். அரிசி, உப்பு, மிளகாயெல்லாம் எங்கிருந்து வாங்க முடியும்?

பெரச்சன் தலை குனிந்து கொண்டு கடையை விட்டு இறங்கி நடந்தான். வேதனை பின்னுக்கு இழுத்தது. 'அந்தப் பச்சைச் சட்டை குட்டாயியின் உடம்புக்கு ரொம்பவும் எடுப்பாக இருக்கும். இந்தப் பணமே அவனாலே கிடைத்தது தானே? இதை அவனுக்காகவே செலவு செய்யப் போகிறேன்!'...

பெரச்சன் திரும்பி வந்து, பச்சை நிறப் பட்டுச் சொக்காயை வாங்கிக் கொண்டான்; பாக்கி நாலணாவுக்குப் பக்கத்துக் கடையில் சல்லாத் துணி கொஞ்சம் வாங்கிக் கொண்டு, குடிசைக்கு வந்து சேர்ந்தான்.

பட்டுச் சொக்காயை அவன் யாரிடமும் காண்பிக்கவில்லை. மடியில் சுருட்டி மறைத்து வைத்துக் கொண்டான். ஆளைக் கண்டதுமே, "அரிசி எங்கே? பார்லி கேட்டேனே, எதுவுமே வாங்கவில்லையா?" என்று மனைவியும் பெண்களும் மாறி மாறிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பெரச்சன் செவிடன் போல அவர்களைப் பாராமலேயே குட்டாயியின் உடல் இருந்த பக்கம் சென்றான். புதுத் துணியால் உடலை மூடி எடுத்துத் தோளில் சாத்திக் கொண்டு, சிறு மண்வெட்டியும் கையுமாகப் புறப்பட்டு விட்டான்.

பெரச்சன் மயானத் திடலை அடைந்ததும் சவத்தைத் தரையில் இறக்கினான். மடியில் பத்திரப்படுத்தி வைத்திருந்த பட்டுச் சொக்காயை எடுத்துப் பிரித்து உதறிவிட்டு, குட்டாயியின் உடலில் அணிவித்தான். சற்று நகர்ந்து நின்று, சட்டை அணிந்த கோலத்தில் தன் மகனின் தோற்றத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆசைதீர நன்றாகப் பார்க்கக்கூட முடியவில்லை; நீர் மல்கிய கண்களுக்குக் குட்டாயியின் உருவம் மங்கலாகத்தான் தென்பட்டது. அடிக்கடி கண்களைத் துடைத்துக்கொண்டு உற்றுப் பார்த்தான். 'என்ன அமைப்பு, என்ன அழகு!.....'

"என் கண்ணே, குட்டாயி! இந்தச் சொக்காயைப் போட்டுக்கொண்டு பெருமைப்பட்டுக் கொள்ள நீ உயிரோடு இல்லையேடா...." வாய்விட்டுக் கதறி அழுதான் பெரச்சன். வேதனை ஒருபுறம் இருந்தாலும், மன நிறைவும் அவன் கண்களில் பளிச்சிட்டது. புது அழகுபெற்றுவிட்ட மகனின் உடலைப் புதைத்து விட அவனுக்கு மனம் வரவில்லை. அப்படியே வாரி அணைத்துக் கொண்டு எங்காவது போய் விடலாமா என்றுகூட எண்ணினான்.

கடைசியில், மனமில்லாமலேயே மகனின் சவத்தைக் குழியில் இட்டு, மண்ணை மூடி அடக்கம் செய்தான். கடைசி அன்பளிப்பாக, சொட்டச் சொட்டக் கண்ணீரைச் சொரிந்து விட்டு வீடு திரும்பினான். அப்போதுதான் வீட்டுக் கவலை பெரச்சனைத் துளைத்தது. மில் முதலாளியின் வீடு, போகும் வழியில் இருந்தது. கெஞ்சிக் கேட்டால் எட்டணாவாவது கிடைக்கலாமென்கிற நைப்பாசையுடன் பங்களாப் பக்கம் ஆவலுடன் சென்றான். வெளிக் கேட்டைப் பூட்டிப் பத்திரப்படுத்தியாகி விட்டது. இரவு பத்து மணி இருக்கும்.

பெரச்சன் உரக்கக் கூவி அழைத்தான். பெரிய நாய் ஒன்று குரைத்துக் கொண்டே பாய்ந்து வந்தது. பெரச்சன் திரும்பிப் பார்க்காமல் ஓடினான்.

பேட்டை நெருங்க நெருங்க, பெரச்சனின் இதயம் வேகமாகப் படபடத்தது. பலர் கூடி அழும் புதுப் பிலாக்கணம் மெள்ளக் கேட்டது. பிரமையாக இருக்குமென்று முதலில் நினைத்துக் கொண்டான். வரப்புப் பாதையில் வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தான். குடிசைக்கு அருகில் வந்தபோதுதான் அவனுக்கு உண்மை தெரிந்தது.

புதுச் சாவுக்கான புது அழுகை பெரச்சனின் குடிசையிலிருந்து வெளிவந்தது!



கிராப் செய்து கொள்ள வந்தவர் :- **அவ்வளவு பெரிய கத்திரிக்கோல் எதற்கு?**

தலையலங்காரக் கலைஞர் :— **எனக்கு ஒரு வாடிக்கைக்காரர் இருக்கிறார். அவர் வருஷத்துக்கு ஒரு முறைதான் இங்கு வருவார். அவருக்காகப் பிரத்தியேகமாக வைத்திருக்கிறேன்!**

இராஜீய உள்ளம்

எந்த இன்பகரமான நாளை நஸீருத்தீன் இத்தனை மாதங்களாக எதிர்பார்த்து வந்தானோ, அந்தப் புனிதமான பண்டிகை நாளும் பலபலவென்று புலர்ந்தது.

''பிஸ்மில்லா!'' என்று ஜபித்துக்கொண்டு வைகறையில் துயிலெழுந்த அந்த இளைஞன் முதல் காரியமாகச் சுவரையொட்டி நின்ற பெட்டியை மெல்லத் திறந்து அதற்குள் நேர்த்தியாக மடித்து வைக்கப்பட்டிருந்த இச்சிலி வர்ண ஷேர்வானியைத் தன் கண்குளிரக் கண்ட பிறகுதான் முகத்தைக் கழுவுவதற்குப் புழக்கடைப் பக்கம் சென்றான்.

முழங்கால் வரையில் தவழ்ந்தாடும் ஷேர்வானியைப் பெருநாளன்று தான் அணிந்துகொள்ள வேண்டும், பள்ளிவாசலுக்குச் சென்று 'நமாஸில்' கலந்துகொள்ள வேண்டும். அதன்பின் தன் நண்பர்களைச் சந்தித்து அளவளாவ வேண்டும், அவர்கள் அந்த ஷேர்வானியைக் கண்டு பிரமிப்படைய வேண்டும். இத்தகைய ஆசைகள் அந்த யுவனின் இளநெஞ்சிலே பல காலமாக ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தன. அவை யாவும் வரப்போகின்ற பெருநாளன்று 'பிறைக் கொடி'யை நாட்டப் போகின்றன என்பதை நினைத்ததும் நஸீருத்தீனின் கழுத்து பூரிப்பினால் நிமிர்ந்தது.

நஸீருத்தீனின் வாழ்க்கைக் கோட்டையைச் சுற்றி வறுமை என்ற பச்சை மண்தான் பூச்சாக நின்றது என்று நாக்கூசாது கூறிவிடுவதில் தப்பு ஒன்றுமில்லை. சமூகமே ஒப்புக்கொள்ளும் காரணம் அதற்கு அடிப்படையாகவே நின்றதென்றால் எதிர்வாதத்துக்குப் பிரச்னை இல்லாது போயிற்று!

அவன் ஒரு என். ஜி. ஓ.

மாதா மாதம் கிடைக்கும் சொற்ப ஊதியத்தில் தாயார், இரு சகோதரிகள், ஊனம் அடைந்த தம்பி ஆகிய இவர்களைச் சமாளித்து வந்த நஸீருத்தீன் தன் குடும்பக் கப்பல் கவிழ்ந்து விடாதபடி ஊதியம் என்ற பாய் மரத்தையும், செலவு என்ற நங்கூரத்தையும் ஜாக்கிரதையாகக் கையாண்டு வந்தான்.

எப்படியாவது பெருநாளன்று ஒரு புதிய ஷேர்வானியை அணிந்து கொள்ளத்தான் வேண்டும் என்ற தீர்மானம் அவன் நெஞ்சில் ஸ்திரமாக நின்றுவிட்டது. அதற்காகக் 'காகா சாஹிப்' கடை நாஸ்தா, ஆபீஸ் காண்டீன் சாயா, நாயர் கடையில் வாங்கும் சிகரெட்டுகள் ஆகிய இவைகளுக்குச் சலாம் போட்டுவிட்டு மாதா மாதம் ஐந்து ரூபாயாகச் சேர்க்கலானான். எட்டு மாதங்கள் மாயமாக மறைந்தவுடன், நாற்பது ரூபாய்கள் தன் ஜேபியில் அடைக்கலம் புகுந்ததைக் கண்டு அவனுக்கு ஒரே திகைப்பாயிருந்தது.

நேரே, சைனா பஜார் சென்றான். ஒவ்வொரு துணிக் கடைக்குள் நுழைவதும், விழிகளை நாலா பக்கங்களில் மேய விடுவதும், படிகளை விட்டு இறங்குவதும் அவன் ஜோலியாக இருந்தன! துணி நன்றாக இருந்தால், நிறம் பிடிக்கவில்லை.

இரண்டும் மனத்துக்குப் பொருத்தமாக இருந்தபோது, ஜேபியிலுள்ள பணத்தில் மூன்றில் ஒரு பங்கை ஏப்பமிடக் காத்துக் கொண்டிருந்த தையற்கூலி அவனை உஷார்ப் படுத்தியது! எப்படியோ ஒரு விதமாக நான்கு கெஜம் துணி வாங்கி, அதை ஷேர்வானியாகத் தைப்பதற்குக் கொடுத்துவிட்டுச் சோர்வடைந்த உடலுடன் இல்லத்துக்குத் திரும்பினான். இந்தச் சுப வைபவம் நிகழ்ந்தது பெருநாளுக்கு முதல் வாரத்தில்தான். மூன்றே நாட்களில் தைத்துக் கொடுப்பதாக வாக்கும் உத்திரவாதமும் கொடுத்த தையற்காரத் திப்பு சுல்தான் பெருநாளுக்கு முதல் நாள் கூட அதைக் கொடுக்க மாட்டான் போல் தெரிந்ததை உணர்ந்ததும் நஸீருத்தீன் நெஞ்சு படாத பாடு பட்டது. ராயப்பேட்டைக்கும் சைனாபஜாருக்கும் ஆறேழு தடவைகள் அலைந்த பின்புதான் அந்த ஷேர்வானி அவன் கைக்கு ஒருவிதமாக வந்து சேர்ந்தது!

இத்தகைய சோதனைகளுக்குட்பட்ட அந்தக் இச்சிலி வர்ண ஷேர்வானியைப் பார்த்துப் பார்த்து மனத்



ஜமீலா

துன் மகிழ்ச்சியோடு முறுவலித்துக்கொண்டே குழாயடிக்கு நஸீருத்தீன் சென்றான்.

* * *

அன்று பெருநாள் பண்டிகை!

சன்மார்க்க உயர்வுக்காகவும், ஆத்மார்த்த உன்னதத்துக்காகவும் ரம்ஜான் மாதத்தில் முப்பது நாட்கள் அல்லும் பகலும் நோன்பு நோற்ற பின் தம் கடமையை நிறைவேற்றிய தற்காக அல்லாஹுத்தாலாவிடம் நன்றியைச் செலுத்தும் அந்த ஒப்பற்ற நாள் விடிந்தது! முன்னாள் இரவில் விண்ணில் பிறை தென்பட்டவுடன், மறுநாள் — பண்டிகை நாளன்று—திருவல்லிக்கேணியிலுள்ள பள்ளி வாசலில் காலை பதினொரு மணிக்கு 'நமாஸ்' ஆரம்பமாகும் என்று நகரத்து காஜி சாஹேப் முன்கூட்டியே அறிவித்து விட்டார்.

ஸ்நானத்தை முடித்துக் கொண்டு, சகோதரிகள், தம்பி ஆகிய இவர்களுடன் ஒரே பாயில் அமர்ந்து 'கண்கண்ட தெய்வ'மான அன்னை சமைத்து வைத்த அறுசுவை உண்டியை ஆனந்தமாகச் சாப்பிட்டான் நஸீருத்தீன். பெட்டியைத் திறந்து அந்தப் புது ஷேர்வானியை எடுத்து அவன் அணிந்துகொண்டபோது களிப்பினால் அவன் முகம் தாமரையாக மலர்ந்தது. துருக்கிக் குல்லாவைத் தலையில் தரித்து நிலைக் கண்ணாடி முன் நின்றதும் அசல் ஆற்காடு நவாபு போல் தான் தோற்றமளித்ததைக் கண்டதும் அவனிடம் உண்டான மகிழ்ச்சி கிளர்ச்சி செய்தது. புட்டியைத் திறந்து அத்தரைப் பூசிக் கொண்டான். பெற்றவளின் சீரடிகளைக் குனிந்து வணங்கி விட்டு, புதிதாக வாங்கிய காபூலி செருப்புகளை மாட்டிக் கொண்டான். நிலைப் படியைத் தாண்டிவிட்டு மசூதியை நோக்கிக் கிளம்பினான். நேர்வழியாகச் செல்லாது பல்வேறு சந்துகளில் புகுந்து அவன் போனதற்கு உண்டான விபரீத காரணம் என்னவென்றால், தான் அணிந்திருந்த ஷேர்வானியை யாவரும் பார்க்க வேண்டும் என்று அவன் உள்ளத்தில் தலை தூக்கி நின்ற ஆசை தான்!



அவன் நடை நவாப் நடையாக மாறி ஜோராக இருந்தது. பளபளப்பான குல்லாக்களுடன், பஞ்சவர்ண ஆடைகளைத் தரித்த சாயபுமார்கள், சிறுவர்கள் பின் தொடர, மசூதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த நேத்திரானந்தமான காட்சி நஸீருத்தீனைத் திக்கு முக்காடச் செய்தது. இந்தக் கூட்டத்துக் கிடையில் வெள்ளைத் தலைப்பாகையும், பொன்னிற ஷேர்வானியையும் அணிந்த பெரியவரை ஏற்றிச் சென்ற ஓர் ரிக்ஷா தன் முன்னால் ஊர்ந்து கொண்டிருந்ததை நஸீருத்தீன் கண்டான். கடிகாரத்தைப் பார்த்தான். பதினொரு மணி அடிப்பதற்குப் பத்து நிமிஷங்கள் தான் எஞ்சி நிற்கின்றன என்பதை அறிந்ததும் அவன் நெஞ்சு பகீரென்றது.

மசூதியில் 'நமாஸ்' எங்கு தொடங்கி விடுமோ என்ற பீதி அவனை வெளவியது. நரம்புகளில் தேங்கிக் கிடந்த சக்தியெல்லாம் ஒன்று திரட்டி நடையைத் துரிதமாக்க அவன் முயன்றபோது ஓர் விபரீதம் நிகழ்ந்து விட்டதைக் கண்டு நஸீருத்தீன் ஸ்தம்பித்து விட்டான். முன்னால் சென்றுகொண்டிருந்த ரிக்ஷாவில் அமர்ந்திருந்த அந்தப் பெரியவர் தடாலென்று நடுரோட்டில் விழுந்துவிட்டார். உடனே நஸீருத்தீன் ஓடி அந்தக் கிழவரை இரு கைகளாலும் அப்படியே தூக்கி ரிக்ஷாவில் அமரச் செய்தபோது அவனுக்கு நெடு மூச்சு வாங்கியது. அந்த முதியவர் பிரக்ஞை இழந்த நிலையிலிருப்பதை உணர்ந்ததும் அவன் சித்தம் ஒன்றும் தோன்றாமல் ஊசலாடிற்று.

"இந்தாப்பா ரிக்ஷா! இவரை இப்படியே வீட்டுக்குத் திருப்பிக்கொண்டு போய்ச் சேர்த்துவிடு" என்றான் நஸீருத்தீன் நாக்குக் குழற.

"வீடு தெரியாமலில்லை! ஆனால் இவரைத் தனியாக வைச்சுக்கிட்டு எப்படி வண்டியை இழுத்துக்கிட்டுப் போறது?" என்றான் ரிக்ஷாக்காரன் விரல்களை நொடித்துக் கொண்டு.

"இந்தாப்பா! இன்னும் ஐந்து நிமிஷத்தில் மசூதியில் தொழுகை ஆரம்பிச்சுடுவாங்க. நான் போய்த்தான் ஆகணும். எப்படியாவது இவரை அழைத்துக் கொண்டு போய்ச் சேர்த்துவிடு" என்றான் நஸீருத்தீன் மிகவும் கெஞ்சிய குரலில்.


"சரிதான், ஐயா! சாயபுக்குப் பேச்சு மூச்சு இல்லியே! 'சப்போர்ட்' இல்லாட்டிப் போனால் அவரு மறுபடியும் சாய்ஞ்சு விளுந்துட்டா?" என்றான் ரிக்ஷாக்காரன் தடுமாறிய வண்ணம்.

அன்றோ பெருநாள்!

வருஷத்துக்கு ஒரே ஒருமுறை வரும் பண்டிகைப் பெருநாள்!

அந்நாளில் நடைபெறும் புனிதமான தொழுகையில் கலந்து கொள்வதைப் போல் சிறந்தது வேறொன்றுமில்லை. இந்த எண்ணங்கள் ஒருபுறம் வாட்டி வதைக்க, கடமை உணர்ச்சி மறுபக்கம் தாக்க, இந்த இக்கட்டான நிலையில் திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்த





7-O'CLOCK
BLADES


தரத்திற்கும் உறுதிக்கும்-இணையற்றது
ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்தரவாதமுள்ள
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
உபயோகித்து. கழுவி துடைத்து நோக்குங்கள்.
என்ன செய்தாலும் அதன் பளபளப்பு நிலைத்து நிற்கும்
ஹக்கிபாய் துளசிகாஸ் அண்ட்சன்ஸ்
பம்பாய்-2.



ஸ்ரீமதி ஸ்வர்ண சரஸ்வதி அவர்களால் திறமையாக நடத்தப்பட்டு வரும் ஸ்ரீ லக்ஷ்மி வித்யாலயத்தின் ஆண்டு விழா மகா சிவராத்திரி யன்று (27-2-57) சென்னை, மியூஸியம் தியேட்டரில் வித்யாலய மாணவிகளின் வீணை, நடன நிகழ்ச்சிகளுடன் மிகவும் குதூகலமாக நடந்தேறியது. சென்னை உயர் நீதி மன்றத்து நீதிபதி ஸ்ரீ பாலாந்திர சோமன் ஐ. ஸி. எஸ். விழாவுக்குத் தலைமை வகித்தார். "கல்கி" உதவியாசிரியர் ஸ்ரீ ஸோமாஸ். சிறுமிகளின் நடன நிகழ்ச்சிகளைப் பாராட்டி, ஸ்ரீமதி ஸ்வர்ண சரஸ்வதி அவர்களின் சங்கீத, நடனப் பயிற்சி முறைகளையும் பற்றிச் சிறப்பாகக் கூறினார். வித்யாலயத்தின் நிர்வாகி ஸ்ரீ எஸ்.கே. சுந்தரம் அவர்கள் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

நஸீருத்தீன் ஒன்றும் தோன்றாமல் கைகளைப் பிசைந்து கொண்டு நின்றான். பெரியவரின் மீது அவன் நாட்டம் திரும்பியது. அவர் வதனத்தில் நிலவிய சாந்தமும் அமைதியும் தெய்விகக் களையும் அந்த இளைஞனின் இதயத்தைத் தொட்டு விட்டன.

"சரி. நானும் ஏறிக்கொள்கிறேன். அவர் வீட்டை நோக்கி விடு" என்று படபடத்த மனத்திலும் நிதானத்தை இழக்காது பகர்ந்துகொண்டே ரிக்ஷாவில் ஏறிக் கொண்டான். கிழவரைத் தன் மார்போடு தாங்கிக்கொண்டு உட்கார்ந்தான். நுதலில் கசிந்த வியர்வை இமைகளின் மீது சொட்டுச் சொட்டாக விழுந்தும், அதைத் துடைத்து நீக்க அந்த இளம் தியாகிக்கு அவகாசமில்லாமற் போய் விட்டது!

ரிக்ஷா அப்பெரியவரின் மனையை அடைந்தது. முதியவரை ஜாக்கிரதையாகக் கீழே இறக்கி, வீட்டாரிடம் ஒப்படைத்து விட்டு, பள்ளி வாசலை நோக்கி ஓட எத்தனித்தபோது ஓர் எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்து விட்டதை அறிந்ததும் அவன் நெஞ்சு பகீர் என்றது. தான் அணிந்திருந்த ஷேர்வானியின் பின்புறம் ஒரே சேறாக இருந்ததைக் கண்டதும் அவன் உள்ளம் இரு கூறுகளாகப் பிளந்து விட்டது. ரிக்ஷாவிலிருந்து அப்பெரியவர் சாய்ந்தபோது, சாலையில் இருந்த சேற்றில் தவறி விழுந்து விட்டதும், அவரைத் தூக்கி அவ்வாகனத்தில் ஏற்றியபோது தன் உடையும் அசுத்தமானது அவனுக்கு இப்போதுதான் புரிந்தது. துயரம் அவனை வாட்டவே, கண்கள் கலங்கின. ஷேர்வானியின் மீது அவன் மங்கிய பார்வை விழுந்ததும், இத்தனை நாட்களாகத் தான் கட்டிய ஆசைக்கோட்டை தூள் தூளாக இடிந்து வீழ்ந்ததை நினைத்து மனம் சஞ்சலித்தது.

நயனங்களிலே நீர் கொப்பளிக்க, இதயத்திலே எஞ்சி நின்ற சாமும் ஆவியாகி விடவே, கவிழ்ந்த சிரத்துடன் பரிதாபக் கோலத்தில் தன் வீட்டை நோக்கித் தள்ளாடித் தள்ளாடி நடக்கலானான் அந்த ஆண் மகன்.

எந்த ஷேர்வானிக்காக அவன் இத்தனை மாதங்கள் அல்லல்பட்டானோ, அதை அவன் கழற்றும்போது கண்கள் குளங்களாகின. அதரங்கள் உலர்ந்தன.

அணிந்த ஆடை போனதோடு மல்லாமல் பெருநாள் தொழுகையும் தவறிவிட்டதை நினைத்ததும் அவன் மேனி காய்ந்த ஆலிலை போல் துவண்டது. சொல்லொணாத் துயரம் வாட்டிற்று.

வீட்டில் தங்குவதற்கு அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. நல்ல நாளன்று மசூதி வரையிலாவது போய் வருவதற்கு அவன் மனம் பிடிவாதம் செய்தது. எந்த ஒட்டுகள் போட்ட கோட்டை அவன் சர்வசாதாரணமாக உபயோகித்து வந்தானோ, அதை எடுத்து மாட்டிக் கொண்டபோது இதயத்தைக் கீறிக் கொண்டு மேலெழுந்த பெருமூச்சு அவன் உடலை உலுக்கியது.

பள்ளிவாசலின் வாயிலை அடைந்தபோது, அங்கு நிலவிய காட்சி அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஏதோ தன் வருகைக்காகக் காத்துக் கொண்டிருப்பது போல் தோன்றியதும், நஸீருத்தீன் மலைத்துப் போனான். விழிகள் சுழல, மனம் படபடக்க, அடிமேல் அடி வைத்துப் படிக்கட்டுக்களில் ஏறினான். தன்னை எதிர் நோக்கி நாலைந்து பேர்கள் விரைவாக வருவதைக் கண்டதும் அவனுக்குத் 'திக்'கென்றது.

"என்ன அவர் வந்து விட்டாரா?" என்று அவர்களில் ஒருவர் வினவியதும், நஸீருத்தீனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"எதைக் கேட்கிறீங்க? 'நமாஸ்' முடிந்து விட்டதோ?" என்றான் நஸீருத்தீன் ஒரே குழப்பத்துடன்.

"சரியாய்ப்போச்சு. தொழுகை இன்னும் ஆரம்பிக்கவே யில்லையே!" என்று மற்றவர் சொன்னதும் அவன் தலை கிறுகிறுத்தது.

"நிசம்தானா? நேரம் அப்பொழுதே ஆயிடுச்சே!" — நஸீருத்தீனின் உள்ளம் அலைக்கழித்தது. சொற்கள் தொண்டையிலிருந்து திக்குமுக்காடிக் கிளம்பின.

"பதினொன்றுக்கு மேலே பத்து நிமிஷம்கூட அதிகமாகப் போயிடுச்சு. என்ன செய்வது? நம்ம டவுன் காஜி சாஹேப் இன்னும் வந்து சேர்ந்தபாடில்லை! வருஷா வருஷம் அவர் தானே இந்தப் பெருநாள் தொழுகையை முன்னின்று நடத்துவது வழக்கம்? அவருடைய வருகையை எதிர்பார்த்துத்தான் கூட்டம் அப்படியே நிற்கிறது. ஏதாவது செதியை நீங்கள் கொண்டு வந்திருப்பீர்கள் என்று நினைத்து உங்களைக் கேட்டோம்!" என்றார் நகரப் பிரமுகர் ஒருவர்.

"எனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஏதோ வந்தேன்" என்றான் நஸீருத்தீன் நெற்றியை இறுகப் பிடித்துக்கொண்டு.

"சரி. இனித் தாமதிப்பதில் நியாயமில்லை. பத்து நிமிஷம் வேறு விரயமாகி விட்டது.

நம்ம சின்ன காஜீ சாஹேபே இந்த 'நமாஸை' முன்னின்று நடத்தட்டும்'' என்று அந்தப் பிரமுகர் குழுமியிருந்தோரை நோக்கி உரத்த குரலில் நவின்ற மறுகணத்தில் கூட்டத்தினர் வரிசை வரிசையாக அணிவகுத்து, தோளோடு தோளாக நின்றனர். 'அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்' என்று எழுந்த தெய்வீக ஒலியை மசூதி மண்டபம் எதிரொலிக்கவே, பெருநாள் தொழுகையும் ஆரம்பமாயிற்று.

'நமாஸ்' ஆன பிறகு, சின்ன காஜீ சாஹேப் தொடங்கிய உபன்யாசம் ஒருவாறு முடிந்த பின் கூட்டம் கலையலாயிற்று.

யாவரும் அவ்விடத்தை விட்டு நீங்கியபின் நஸீருத்தீன் மண்டபத்தை விட்டு வெளியே வந்தான். அவனுக்கு யாவும் ஒரு பகற்கனவு போல் தோன்றிற்று. மேற்குத் திசையை நோக்கிக் கைகளை உயர்த்தி, ''யா அல்லாஹு! உன் கருணைக்கும் தயாளத்துக்கும் ஈடுண்டோ? ஓர் அற்ப ஜீவனுக்காக ஆயிரக்கணக்கான உன் அடியார்களை நிறுத்தி வைத்து விட்டாய். இந்த எளியனும் கலந்து கொள்ளும் பொருட்டு இந்த ஒப்பற்ற பெருநாள் தொழுகையைக்கூடத் தாமதப்படுத்தி விட்டாய்! உன்செயலே செயல்! யா ரஹ்மான்!'' என்று தன்னையும் மறந்து அந்த இளைஞன் வாய் விட்டு உணர்ச்சி தாளாது கதறியதும் அவன் நயனங்கள் ஆனந்த பாஷ்பத்தைப் பொல பொல வென்று சொரிந்தன. ஈடு இணையற்ற அந்த அருளாளன் புரிந்து விட்ட மற்றொரு வேடிக்கை என்னவென்றால், நடு ரோட்டில் ரத்த அழுத்த வியாதியால் மயக்க முற்று விழுந்து கிடந்த எந்தக் கிழவருக்கு நஸீருத்தீன் கைகொடுத்துத் தன் பெருநாள் தொழுகையையும் புதிய ஷேர்வானியையும் தியாகம் செய்து விட்டானோ, அந்தப் பெரியார்தான் அன்று மசூதியில் பெருநாள் தொழுகையை முன்னின்று நடத்த வேண்டிய டவுன் பெரிய காஜீ சாஹேப் என்பது அந்த இளைஞனுக்கு இன்று வரையில் தெரியாமலிருப்பதுதான்!

படித்துப் பாருங்கள்

குழந்தை வளர்ப்பு

குழந்தை வளர்ப்பு ஒரு பெரிய கலை; குழந்தையைப் பெற்ற ஒவ்வொரு தாயாரும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய அரிய கலை. மக்கட் பேற்றைப் பெரும் பேறாக மதிக்கும் நாம் அவர்களை நல்ல முறையில் வளர்க்கத் தெரிந்து கொள்ளா விட்டால் ஏதும் பயனில்லை. இந்நூலில் குழந்தை வளர்ப்பைப் பற்றிய சகல விவரங்களும் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளைப் படித்துப் பயனடைய வேண்டிய கடமை ஒவ்வொரு தாய்க்கும் உண்டு. சுதந்திர இந்தியாவின் வருங்காலப் பிரஜைகளாகிய குழந்தைகள் நல்ல முறையில் வளர்க்கப்பட்டால்தான் பெற்ற சுதந்திரத்தைப் பேணி வளர்க்க முடியும். குழந்தையின் உடல் வளர்ச்சியை மட்டும் அல்லாமல் உள்ள வளர்ச்சியையும் பற்றிக் கூறும் இந்நூல் மிகவும் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

எழுதியவர்: சீதாலட்சுமி; விலை: ரூ. 2.

வெற்றிகரமான வாழ்க்கை

எதிலும் தோல்வியைக் காண விரும்பாதவர்கள் இந் நூலைப் படித்தால் பெரிதும் பயனடைவார்கள்; தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களும் இந் நூலைப் படித்தால் அந்த அச்சத்தை விட்டொழித்து, செயலில் ஈடுபடுவார்கள்.

மனோதத்துவ சாஸ்திரம் பற்றிய சில ஆங்கில நூல்களை ஆதாரமாகக் கொண்ட இந் நூல் மிகவும் சுவாரஸ்யமாகப் புனையப்பட்டிருக்கிறது. வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் நாமாக வரவழைத்துக் கொள்பவைதான் என்பதை இந் நூல் தெளிவாகக் கூறுகிறது. எழுதியவர்: எஸ். சரோஜா; விலை: ரூ. 1—12—0.

டால்ஸ்டாய் கதைகள்

மகாத்மா காந்தியடிகளால் மகான் என்று புகழப்பட்ட மாபெரும் மனிதர் டால்ஸ்டாய், மனித குலத்தின் நல்வாழ்வுக்காக எத்தனையோ கதைகள் எழுதியிருக்கிறார். அவற்றுள் எட்டுக் கதைகள் இத்தொகுதியில் இடம் பெற்றிருக்கின்றன. கருத்துப்பொதிந்த மேற்படி கதைகள் அறிவுக்கருவூலமெனத் திகழ்பவை; தெவிட்டாத சுவை நிரம்பிய கதைகள். கு. ப. ரா.வின் மொழிபெயர்ப்பு மிகவும் சரளமாய் அமைந்திருப்பதனால் மொழிபெயர்ப்பைப் படிக்கிறமாதிரியே இல்லை. விலை ரூ. 2—0—0.

பாரதியார் பெருமை

சேமமுறத் தமிழோசை தெருவெங்கும் முழங்கவேண்டும் என்று விரும்பிய மகாகவி பாரதியாரைப் பற்றி, பல அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

ராஜாஜி, திரு வி. க., டி. கே. சி., நாவலர் சோமசுந்தர பாரதியார், ஏ. வைத்தியநாதய்யர், பரலி. சு. நெல்லையப்பர், பேராசிரியர் அ. சீனிவாசராகவன், பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை, கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி, பெ. தூரன் முதலிய பேரறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் என்றால் அவைகளைப் பற்றி அதிகம் கூறுவானேன்? பாரதியாரைப் பற்றி அவர்கள் எழுதுவதற்கு எல்லா விதத்திலும் தகுதி பெற்றவர்கள். ஒவ்வொரு கட்டுரையும் மகாகவி பாரதியாரை பற்றிப் பல விஷயங்களைச் சுவையுடன் கூறுகிறது. விலை: ரூ. 2—0—0.

இப்புத்தகங்கள் கிடைக்குமிடம்: பாரதி பதிப்பகம், 15. உஸ்மான் ரோடு, சென்னை-17.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

